


# தமிழக வெற்றிக் கழகம்

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்!

# மக்களின் தேர்தல் அறிக்கை 2026




# வெற்றித் தமிழ்நாடு

அறம் · பொருள் · இன்பம்

# முன்னுரை

## இந்த அறிக்கையின் பின்னணிக் கதை மற்றும் அதன் அடிப்படை கொள்கைகள்

### எங்கள் தேர்தல் அறிக்கையின் வழிகாட்டும் தத்துவம்

நமது தமிழ்ப் பாரம்பரியத்தின் ஆதிப் பெருமை மற்றும் அதிகாரப்பூர்வமான ஆட்சி அதிகாரக் கட்டமைப்பின் அடிப்படையில் நம் தமிழக வெற்றிக் கழகத்தின் முதல் தேர்தல் அறிக்கை வடித்தெடுக்கப்பட்டுள்ளது.

தமிழ் மண்ணின் ஆகப்பெரும் தத்துவப் பேராசான் திருவள்ளுவரால் எழுதப்பட்டு உலகிற்கே வழிகாட்டும் பொதுமறை திருக்குறள். மனித வாழ்விற்கும் நல்லாட்சிக்கும் ஒரு முழுமையான வழிகாட்டியாகவும் இருக்கும்படியே திருக்குறளை எழுதினார் திருவள்ளுவர். முப்பால் எனப் போற்றப்படும் தனது படைப்பை அறம், பொருள் மற்றும் இன்பம் என மூன்று பிரிவுகளின் கீழ் தனித்தன்மையுடன் திருவள்ளுவர் அமைத்தார்.

அம்முப்பிரிவுகளும் வெறும் இலக்கிய ரீதியானது மட்டுமல்ல. அது, எந்தவோர் அரசாங்கமும் தான் சேவை செய்யும் மக்களுக்குத் தகுதியானது என்று தன்னை அழைத்துக் கொள்வதற்கு முன்பு, பூர்த்தி செய்யப்பட வேண்டிய மூன்று நிபந்தனைகளை மிகத் துல்லியமாக விவரித்தது. அந்த மூன்று நிபந்தனைகளின் அடிப்படையில்தான் இந்த தேர்தல் அறிக்கையை நாம் பத்து தூண்களாகப் பிரித்துக் கட்டமைத்துள்ளோம். ஒவ்வொரு தூணும், ஒவ்வொரு வாக்குறுதியும், ஒவ்வொரு பொறுப்புக்கூறல் தரமும் அவற்றிலிருந்தே உருவாகின்றன.

> **"பொருள் இல்லாத அறம் என்பது செயல்வடிவம் பெற இயலாத நல்ல எண்ணம். அறம் இல்லாத பொருள் என்பது ஊழல் திறனை ஊக்குவிப்பதாக அமைந்துவிடும். இன்பம் இல்லாத அறம், பொருள் இரண்டும், மனிதர்களுக்குச் சேவை செய்வதற்காகவே இருக்கிறோம் என்பதை மறந்துவிட்டு இயங்கும் ஓர் வெற்று அரசு இயந்திரமாகவே இருக்கும்."**

அறத்திறமையுடன் ஆட்சி செய்ய வேண்டும். அனைவருக்கும் பொருளாதாரத்தை ஒழுங்கமைத்துத் தர வேண்டும். மக்கள் உண்மையிலேயே கண்ணியத்துடனும் மகிழ்ச்சியுடனும் வாழ்கிறார்களா என்பதைக் கொண்டே ஓர் அரசின் ஒவ்வொரு வெற்றியையும் அளவிட வேண்டும். இதுவே ஆட்சியாளருக்கான திருக்குறளின் கட்டளை. இதுவே திருக்குறள் அருளிய ஆட்சித் தத்துவம்.



# முன்னுரை

தூண் 01 மற்றும் 02 அறத்தின்பாற்பட்டவை. தூண் 03 முதல் 07 வரை பொருள்வளச் செழிப்பைப் பேசுபவை. தூண் 08 முதல் 10 வரை மக்களின் மகிழ்வைப் பேசக்கூடியவை.

திருவள்ளுவர் எல்லாவற்றிற்கும் முன்பாக ஒரு அடிப்படைக் கேள்வியைக் கேட்கிறார்: ஆட்சியாளர் நம்பிக்கை வைக்கத் தகுதியானவரா?. அக்கேள்விக்கான விடையை மக்களிடம் பகிர வேண்டியது நல்ல ஆட்சியாளரின் கடமை ஆகும்.

தமிழ் அடையாளம் மற்றும் மாண்புமிக்கதொரு வாழ்வைப் பேணுவது ஆகியவை அறத்திற்கானப் பதிலாகும். 1 மற்றும் 2 தூண் அதற்கான பதிலைத் தருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

ஆட்சியாளர் தகுதியானவரா என்று அறம் கேட்டால், ஆட்சியாளர் திறமையானவரா என்று பொருள் கேட்கிறது. நற்பண்பு மட்டும் இருந்து, திறமையற்ற ஓர் அரசாங்கமாக இருந்தால் அது யாருக்கும் பயனளிக்காது. அரசு என்றால் தனது மக்கள் அனைவருக்கும் சேவை செய்யும் வகையில் பொருளாதாரத்தை ஒழுங்கமைக்க வேண்டும். வாழ்வாதாரங்களைப் பாதுகாக்க வேண்டும். நியாயமான விலைகளை உறுதி செய்ய வேண்டும். உள்கட்டமைப்பில் முதலீடு செய்ய வேண்டும். கருவூலத்தை வலுவாக வைத்திருக்க வேண்டும். அரசுக் கருவூலத்தின் வளங்களை விவேகத்துடன் பயன்படுத்த வேண்டும். இதுவே நல்ல நோக்கங்களை உண்மையான மக்களுக்குப் பயன்படும் விளைவுகளாக மாற்றும் நெறிமுறையாகும்.

மகளிர் நலன், இளைஞர், விவசாயிகள், கல்வி மற்றும் தமிழ்நாட்டின் செழிப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய 3 முதல் 7 வரையிலான தூண், 'பொருள்' குறித்த திருக்குறளின் வழிகாட்டும் நெறிமுறைகளுக்கானப் பதில்களாகும்.

'இன்பம்' என்பது அன்பு, குடும்பம், நட்பு, மகிழ்ச்சி மற்றும் நிறைவான வாழ்வின் முழுமைத்தன்மை ஆகியவற்றை உள்ளடக்கியது. திருவள்ளுவரின் கட்டமைப்பில், 'இன்பம்-மக்களின் மகிழ்ச்சி' என்பதே. இத்தகைய மக்களின் மனம் நிறைவான மகிழ்ச்சியே அனைத்து அரசுகளின் நோக்கமாகும்.

ஓர் அரசு தனது கணக்குவழக்குகளை நேர்மையாக வைத்திருந்தாலும், பொருளாதாரத்தைச் சீராகவே வைத்திருந்தாலும், தன் மக்களைக் கவலையுடன் ஆரோக்கியமற்றவர்களாகவும், கல்வியறிவற்றவர்களாகவும், மகிழ்ச்சியற்றவர்களாகவும் விட்டுவிட்டால், அத்தகைய அரசு இறுதியில் தோல்வியையேத் தழுவும்.

# முன்னுரை

எந்த மண்ணாக இருந்தாலும் மனித வாழ்க்கை உண்மையாகவே வாழப்படுகிறதா?; மக்கள் இரவில் அச்சமின்றி உறங்கி, நம்பிக்கையுடன் எழுகின்றனரா என்பதற்கான அளவுகோலே 'இன்பம்' ஆகும்.

உலகத்தரம் வாய்ந்த சுகாதாரம், உட்கட்டமைப்பு மற்றும் தூய்மையான அரசு நிர்வாகம் ஆகியவற்றை உள்ளடக்கிய நமது தேர்தல் அறிக்கையின் 8 முதல் 10 வரையிலான தூண், 'இன்பம்' குறித்த நெறிமுறைகளுக்கான நமது பதிலாகும்.

இந்த மூன்றும் ஒன்றன்பின் ஒன்றாக வரும் படிகள் அல்ல. அவை ஒரே நேரத்தில் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகளாகும். ஓர் அரசாங்கத்தால், 'முதலில் அறநெறியுடன் இருப்போம், பிறகு பொருளாதாரத்தை வளர்ப்போம், அதன் பிறகு மக்களின் மகிழ்ச்சியைப் பற்றிக் கவலைப்படுவோம்' என்று சொல்லிவிட முடியாது. இந்த மூன்றுமே ஒரே நேரத்தில் பின்பற்றப்பட வேண்டியது அவசியம். ஒவ்வொன்றும் மற்றொன்றைக் கட்டுப்படுத்தி வலுப்படுத்த வேண்டியது மிகக் கட்டாயமான ஒன்று.


பொருள் இல்லாத அறம் என்பது, செயல்பாடு இல்லாத நல்ல எண்ணம். அறம் இல்லாத பொருள் என்பது, திறமையான ஊழல். மேலும், இன்பம் இல்லாத இரண்டும், மனிதர்களுக்குச் சேவை செய்வதற்காகவே இருக்கிறோம் என்பதை மறந்த, நன்கு இயங்கும் ஓர் இயந்திரம். இதுவே திருவள்ளுவரின் மிகவும் நீடித்த அரசியல் பார்வை. மேலும், ஐந்தாண்டுகளின் முடிவில், தமிழக வாக்காளர்கள் திருவள்ளுவரை மதிப்பிட வேண்டிய அளவுகோலும் இதுவே.

இளைஞர்கள், விவசாயிகள், கல்வி மற்றும் தமிழ்நாட்டின் செழிப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய 03 முதல் 07 வரையிலான தூண், பொருளுக்கு நமது த.வெ.க. அரசு அளிக்கும் பதிலாகும். வாக்காளர்களாகிய நம் மக்கள் தமிழக வெற்றிக் கழகத்தின் ஆட்சித் திறன் குறித்த பார்வையை மதிப்பிடுவதற்கு இதுவே அளவுகோலாகும்.

# நமக்கு வழிகாட்டும் நம் கொள்கைத் தலைவர்கள் :


ஒரு அரசியல் பயணத்திற்குத் தெளிவு வேண்டுமானால், அது தனது வழிகாட்டிகளை ஐயந்திரிபறத் தெளிவாக அறிந்திருக்க வேண்டும். தமிழக வெற்றி கழகம், நாங்கள் எதற்காக அரசியல் களத்தில் நிற்கிறோம் என்பதை தெளிவாக அறிவித்து நம் பாதையை வரையறுக்கும் வகையில் ஐந்து தலைவர்களைத் தேர்ந்தெடுத்துள்ளது.

தமிழ்நாட்டின் வரலாற்றில் இன்றுவரை எந்தவோர் அரசியல் இயக்கமும் பெண்களைக் கொள்கை வழிகாட்டிகளாக முறைப்படி அறிவித்ததில்லை. இதை நாம் பெருமையுடன் தலைநிமிர்ந்து அறிவிக்கிறோம்.



பகுத்தறிவுப் பகலவன்
**தந்தை பெரியார்**

பெரியாரின் வாழ்க்கையானது பெண்கள் விடுதலை, பெண்கள் கல்வி மற்றும் சமூக சீர்திருத்தத்திற்கான ஓர் அர்த்தமுள்ள போராட்டமாக இருந்தது. அவருடையது பிரிவினையின் அரசியல் அல்ல. கண்ணியம் சார்ந்த அரசியல். ஒவ்வொரு சாதி, வர்க்கம் மற்றும் சமூகமும் சமமாக நடத்தப்படும் ஒரு மாநிலத்தை உருவாக்குவதற்கான உயிர்ப்பும் தெளிவும் உள்ள கடமையாக அவரது மரபை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம்.



பெருந்தலைவர்
**காமராஜர்**

கல்வி, விவசாயம் மற்றும் தொழிற்துறை வளர்ச்சி சார்ந்த நேர்மையான ஆட்சியின் நாயகன் நம் பெருந்தலைவர் காமராஜர்.

அரசியலில் கல்வியும் வேலைவாய்ப்பும் பிரதானமாக இல்லாத காலத்திலேயே காமராஜர் அவற்றைப் பற்றி சிந்தித்தார். அவரது தனிப்பட்ட நேர்மையே, அன்றுமுதல் தமிழ் அரசியலில் வேரூன்றிய ஊழல் கலாச்சாரத்திற்கு மிகவும் சக்திவாய்ந்த சித்தாந்தம் மட்டுமல்லாமல் ஊழல் அரசியல் கலாசாரத்திற்கான கண்டனமுமாகும். ஆட்சிமுறை எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு அவரே நமது அளவுகோல். அவரது நேர்மையான நிர்வாகமே நமது நேர்க்கோட்டுச் சித்தாந்தமாகும்.



சட்டமேதை
**அண்ணல் அம்பேத்கர்**

அரசியலமைப்பின் சிற்பியான அண்ணல் அம்பேத்கர்தான் நம் இந்திய நாட்டிற்கு அதன் அரசியலமைப்பெனும் முதுகெலும்பை வழங்கினார். சமூக நீதி, சம வாய்ப்பு மற்றும் விகிதாசாரப் பிரதிநிதித்துவம் ஆகியவை அவருக்கு வெறும் கற்பனைகளாக இருக்கவில்லை. அவை சட்டத்தால் ஆதரிக்கப்பட்ட கோரிக்கைகளாக இருந்தன. இந்த தேர்தல் அறிக்கையில் உள்ள, விளிம்புநிலை மக்களைப் பாதுகாக்கும் ஒவ்வொரு கொள்கையும் அவரது வாழ்நாள் பணியிலிருந்து நேரடியாகப் பெறப்பட்டதாகும்.



ராணி
**வேலு நாச்சியார்**

இந்தியாவின் முதல் பெண் சுதந்திரப் போராட்ட வீராங்கனை வீரமங்கை ராணி வேலுநாச்சியார். அவரைத் தொடர் இடர்கள் தாக்கியபோதும், பின்வாங்கவில்லை. நேரம் பார்த்து சரியான தருணத்தில் சரியான முடிவெடுத்தார். கயவர்கள் கையில் சிக்கிய மண் மீட்புக்கான முன்மாதிரி வடிவமே நம் வீரமங்கை வேலுநாச்சியார்.



மக்கள் சேவகர்
**அஞ்சலை அம்மாள்**

சுதந்திரப் போராட்ட வீராங்கனை, சட்டமன்ற உறுப்பினர்,மக்களின் அடிப்படை வாழ்வாதாரம் பேணிய மக்கள் சேவகர் எனப் பெரும்புகழ் பெற்றவர் நம் அஞ்சலை அம்மாள். சிறை வாழ்வுக்கஞ்சாத சிங்கப்பெண் அவர். மகாத்மா காந்தி, பாரதியார், பெரியார் ஆகியோரின் பாராட்டுகளைப் பெற்றவர். தமிழ்ப் பெண்கள் எப்போதுமே வரலாற்றின் முன்னணியில் இருந்துள்ளனர் என்பதற்கு அவரே சான்று. அவர் இனி நமது ஆட்சியின் முன்னணி முடிவுகளின் உருவமாகவும் இருப்பார்.

# தமிழக வெற்றிக் கழகம்
# ஏன் இங்கே உள்ளது?

தமிழக வெற்றிக் கழகம் தமிழ்நாட்டின் அரசியல் சுழற்சியில் நுழைந்து, பல அரசியல் இயக்கங்களில் ஒன்றாக இருப்பதற்காக நிறுவப்படவில்லை. அரசியல் தடைகளை உடைப்பதற்காக நிறுவப்பட்டது. முதன்மை இயக்கமாக முன் நிற்கவே உருவாக்கப்பட்டது.

பிறப்பால் அனைவரும் சமம் என்ற பொருள்படும் **'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்'** என்பது நமது கொள்கைக் கோட்டுபாட்டின் முதன்மை அடிப்படைப் பிரகடனம். இது ஓர் அரசியல் இயக்கத்தின் உறுதிப்பாட்டைக் காட்டுவதாகும். இந்தத் தேர்தல் அறிக்கையின் ஒவ்வொரு தூணும் கட்டமைக்கப்பட்டு, ஒவ்வொரு வாக்குறுதியும் அளிக்கப்பட்டதன் நோக்கமே இப் பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்பதுதான்.

நாம் சாதாரண அரசியல் இயக்கம் என்று சொல்லவே முடியாது. நாம் உண்மையான மதச்சார்பற்ற சமூக நீதி பேசும் இயக்கம். தூய்மையான அரசியலை ஒரு லட்சியமாக மட்டுமன்றி, சமரசமே செய்யாத ஒரு செயல்பாட்டுத் தரமும் தடமும் கொண்டவர்கள் நாம்.

மக்களுக்கும் அரசுக்கும் இடையிலான உறவென்பது நேர்மையானதும் நியாயமானதுமாக இருக்க வேண்டும். பொது வளங்களைச் சுரண்டும் ஊழல் இடைத்தரகர் தடைகள், மக்களுக்குச் செல்ல வேண்டிய பயன்களையும் பலன்களையும் தடுக்கும் பரம்பரைச் சூழல் என்பவை முற்றிலுமாக உடைத்தெறியப்பட வேண்டும்.

நம் வாக்காளர்களாகிய நீங்கள் நெஞ்சுரமும் நேர்மைத் திறனும் கொண்டவர்கள். எனவே, நாம் நம் எதிரிகளின் மக்கள் விரோதச் செயல்களை வெளிப்படையாகவே உங்களிடம் அம்பலப்படுத்துகிறோம்.

நம் அரசியல் எதிரியான தற்போதைய திமுக அரசு, குடும்பமாகச் சேர்ந்து கொள்ளை அடிப்பதை மறைப்பதற்காக, திராவிட இயக்க அடையாளத்தை தனது கவசமாக ஆக்கிக் கொண்டுள்ளது.

பொது ஒப்பந்தங்கள் மூலம் குடும்பத்திற்கான செல்வ வளத்தைக் குவித்துக்கொண்டே, பெரியார் பெயரைத் தங்கள் கவசமாக ஆக்கிக்கொள்கின்றனர். பெரியாரை உண்மையாகப் போற்றுவதே இல்லை. மாறாக, அவரை அவமதிக்கின்றனர்.

நம் கொள்கை எதிரியான பாஜக தலைமையிலான ஒன்றிய அரசிடமிருந்து, 'ஒரே மொழி, ஒரே தேர்தல், ஒரே அடையாளம்' என்பது மக்களுக்கானதோ கொள்கையை நோக்கிய உந்துதல் நிர்வாக சீர்திருத்தமோ அல்ல. அது தமிழ்நாட்டின் மாநில சுயாட்சி, அடையாளம் மற்றும் நம் நாட்டின் கூட்டாட்சித் தத்துவ உரிமைகள் மீதான ஒரு தாக்குதல். இத்தகைய ஒவ்வொரு திணிப்பையும் நாடாளுமன்றத்திலும், நீதிமன்றங்களிலும், வாக்குச்சாவடிகளிலும் த.வெ.க தீர்க்கமாக நின்று எதிர்க்கும்.போரிடும். வெல்லும்.

# தமிழக வெற்றிக் கழகம் ஏன் இங்கே உள்ளது?

நாம் தொடங்கவிருக்கும் நிதிநிலை குறித்தும் நேர்மையாகப் பேச வேண்டும். தமிழ்நாட்டின் நிலுவையில் உள்ள கடன் 2026-27ஆம் ஆண்டுக்குள் ரூ. 10.71 லட்சம் கோடியைத் தாண்டும் என கணிக்கப்பட்டுள்ளது. இது, தமிழ்நாடு மாநில வரலாற்றில், கடந்த 70 ஆண்டுகளாக இருந்த இதற்கு முந்தைய அனைத்து அரசுகளும் சேர்ந்து வாங்கிய கடனை விட, தற்போதைய அரசின் கீழ் ஐந்து ஆண்டுகளில் வாங்கப்பட்ட கடனாகும்.

வட்டி செலுத்துவதற்காகச் செலவிடப்படும் ஒவ்வொரு ரூபாயும், நம் குழந்தையின் பள்ளி, நம் குடும்ப உறுப்பினரின் மருத்துவமனைச் செலவு அல்லது நம் அரசு ஊழியர் ஒருவரின் ஓய்வூதியத்திலிருந்து எடுக்கப்படும் பணமாகும். இது ஒரு சிறிய சவால் அல்ல. தமிழ்நாட்டில் பதவியேற்கும் எந்தவோர் அரசும் இதுவரை எதிர்கொண்டிராத மிகக் கடுமையான நிர்வாகப் பொறுப்பு இதுவாகும். நாங்கள் இதற்கு மாறாகவும் நடிக்க மாட்டோம், இதை ஒரு சாக்குப்போக்காகவும் பயன்படுத்த மாட்டோம்.

இந்த நிதி யதார்த்தத்தை மையமாகக் கொண்டு, செலவு கணக்கிடப்பட்ட, கட்டம் கட்டமாகச் செயல்படுத்தும் திட்டத்துடன் நம் த.வெ.க ஆட்சி அதிகாரம் செய்யும் அரசில் நுழைகிறது.

நாம் நமது பொருளாதாரத்தை வளர்ப்போம். ஊழலால் இழந்த வருவாயை மீட்போம். முதலீடுகளை ஈர்ப்போம். மேலும் நம் கொள்கைத் தலைவர் பெருந்தலைவர் காமராஜர் அவர்களை முன்மாதிரியாகக் கொண்டு நேர்மை ஒழுக்கத்துடன் மாநிலத்தின் நிதிகளை நிர்வகிப்போம். இது உறுதி.

இந்த தேர்தல் அறிக்கையில் உள்ள வாக்குறுதிகள், மக்களுக்கு மிகவும் அவசரமானதும், அவசியமானதும், மாநிலத்திற்கு மிகவும் பொறுப்பானதுமான வரிசைப்படி நிறைவேற்றப்படும். அதுவே உங்களுக்கு நம் தமிழக வெற்றிக் கழகம் அளிக்கும் மிக முக்கிய உறுதிமொழி.

**நாங்கள் அதிகாரத்தை அனுபவிப்பதற்காக அரசியலுக்கு வரவில்லை. அதிகாரம் எதற்காகப் பயன்படுத்தப்படுகிறது என்பதை மக்களுக்குத் தெரிவித்து, தவறுகளைக் களைந்து அவற்றை மாற்றுவதற்காகவே அதிகாரத்தை நாடுகிறோம்.**

**நாம் பதவியில் இருந்து கற்றுக்கொள்ள வரவில்லை. மாறாக, ஏற்கனவே எழுதப்பட்ட, செலவு கணக்கிடப்பட்ட மற்றும் தயாராக உள்ள ஒரு திட்டத்தைச் செயல்படுத்தவே வருகிறோம். நமது இந்தத் தேர்தல் அறிக்கைதான் அந்தத் திட்டம்.**


அறம்

# தமிழ் அடையாளம் மற்றும் பெருமை



A. தமிழ்நாட்டின் நிதி மற்றும் மாநில உரிமைகள் பாதுகாப்பு

## 1 விகிதாச்சார பிரதிநிதித்துவம்

ஒவ்வொரு சமூகத்திற்கும் உரிய அளவில் விகிதாச்சாரப் பிரதிநிதித்துவம் கிடைப்பதே உண்மையான சமூகநீதி என்பது த.வெ.க-வின் கொள்கை. இதை உறுதி செய்ய சாதிவாரிக் கணக்கீட்டு ஆய்வு (Caste Survey) மேற்கொள்ளப்படும்.

## 2 தமிழ்நாட்டிற்கான நிதிப்பகிர்வை கோருதல்

ஒன்றிய அரசுக்கு தமிழ்நாடு செலுத்தும் வரியில் இருந்து தமிழ்நாட்டிற்கு சேர வேண்டிய நியாயமான முழுமையான நிதிப் பங்கினைக் கோருவதற்கு தமிழ்நாடு சட்டமன்றத்தில் தீர்மானம் இயற்றப்படும். தீர்மானம் நிறைவேற்றுவதோடு மட்டும் நின்றுவிடாமல், உச்சநீதிமன்றம் வரை சென்று சட்டரீதியாக நிதிப் பங்கீட்டைப் போராடி,வாதாடி பெறுவதற்காக சிறப்புச் சட்டக் குழு அமைக்கப்பட்டு, தமிழ்நாட்டிற்கு வர வேண்டிய ஒவ்வொரு ரூபாய் நிதி வருவாயும் முறையாக ஆவணப்படுத்தப்பட்டு, தமிழ்நாட்டிற்கான நிதியில் ஒன்றிய அரசின் அநீதி அறிக்கையாக வெளியிடப்படும். மேலும், தமிழகத்திற்குரிய நியாயமான நிதிப் பகிர்வை ஒன்றிய அரசிடம் இருந்து பெறுவது உறுதி செய்யப்படும்.

## 3 ஜி.எஸ்.டி வரி வருவாயில் தமிழகத்திற்கு உரிய நியாயமான பங்கு

தமிழகத்திற்கான நிதியை ஒன்றிய அரசிடம் இருந்து பெறுவதில், த.வெ.க அரசு உறுதியாக நிற்கும். குறிப்பாக மொத்த ஜி.எஸ்.டி வரி வருவாயில் 70 சதவிகிதம் மாநிலங்களுக்கே வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்படும். மாநிலங்கள் வருவாய் இழப்பில் இருந்து விடுபட முறையான ஜி.எஸ்.டி இழப்பீட்டுத் தொகையும் கோரப்படும்.

## 4 கல்வியை மாநிலப் பட்டியலுக்கு மாற்ற உரிய நடவடிக்கை!

கல்வி (மருத்துவக் கல்வி உட்பட) ஒன்றிய அரசின் பொதுப்பட்டியலில் இருப்பதால்தான், புதிய கல்விக் கொள்கைத் திணிப்பு, நீட் தேர்வு சர்ச்சை போன்ற கல்வித் தடைகள் ஏற்படுகின்றன. எனவே, ஒன்றிய அரசின் பொதுப்பட்டியலில் இருக்கும் கல்வியை (மருத்துவக் கல்வி உட்பட) மாநிலப் பட்டியலுக்கு மாற்ற உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இதில், ஒருமித்த கருத்துள்ள கட்சிகளோடு இணைந்து நாடாளுமன்றத்தில் சட்டத் திருத்தம் கொண்டு வருவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். உச்ச நீதிமன்றத்திலும் இதுகுறித்து சீராய்வு மனுத்தாக்கல் செய்து சட்டப்போராட்டம் முன்னெடுக்கப்படும்.

## 5 தொகுதி மறுவரையறையில் தமிழ்நாட்டின் உரிமைகள் பாதுகாப்பு

மக்கள் தொகையின் அடிப்படையில் நாடாளுமன்றத் தொகுதிகள் மறுவரையறை செய்யப்படுவதை த.வெ.க கடுமையாக எதிர்க்கிறது. தொகுதி மறுவரையறை மூலம் தென்னிந்திய மாநிலங்கள் கடுமையாகப் பாதிக்கப்படுவதைத் தடுக்க, உரிய சட்டத் திருத்தம் கொண்டுவர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

## 6 ஒரே நாடு ஒரே தேர்தலுக்கு எதிர்ப்பு

மாநில சுயாட்சி மற்றும் கூட்டாட்சித் தத்துவத்தைப் பலவீனப்படுத்தும் ஒன்றிய அரசின் ஒரே நாடு; ஒரே தேர்தல் திட்டத்தை த.வெ.க கடுமையாக எதிர்க்கிறது. அதனால், ஒரே நாடு ஒரே தேர்தல் சட்ட முன்வரைவைத் திரும்பப் பெற உரிய முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

## 7 இருமொழிக் கொள்கை பாதுகாப்பு

ஒன்றிய அரசு புதிய கல்விக் கொள்கையின் மூலம் திணிக்க முற்படும் மும்மொழிக் கல்வித் திட்டம், தமிழ்நாட்டின் மொழிப் பராம்பரியத்தையும், கல்வியின் தரத்தையும் கடுமையாகப் பாதிக்கும். த.வெ.க சார்பில் ஒன்றிய அரசின் புதிய கல்விக் கொள்கையை எதிர்த்து சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்படும். இதில் ஒருமித்த கருத்துடைய மற்ற மாநில அரசுகளுடன் இணைந்து செயல்பட மாநிலங்களுடைக்கிடையான ஒரு சிறப்புக் குழு அமைக்கப்படும். இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களிலும் அவரவர் தாய்மொழி மற்றும் இணைப்பு மொழியாக ஆங்கிலம் என்ற இருமொழிக் கொள்கையை நிறைவேற்ற வலியுறுத்தப்படும்.

## 8 நீட் தேர்வு ரத்து

த.வெ.க சார்பில் நீட் தேர்வை ரத்து செய்ய தொடர்ந்து ஒன்றிய அரசிற்கு அழுத்தம் கொடுக்கப்படும்.

## 9 உயர் நீதிமன்றங்களில் மாநில மொழி

உயர் நீதிமன்றங்களில் அந்தந்த மாநில மொழிகளே நீதிமன்ற மொழியாகப் பயன்படுத்துவதற்கு வலியுறுத்தப்படும்.

## 10 சென்னையில் உச்ச நீதிமன்றக் கிளை

உச்ச நீதிமன்றத்தின் கிளை சென்னையில் அமைய த.வெ.க சார்பில் ஒன்றிய அரசிடம் தொடர்ந்து வலியுறுத்தப்படும்.

## 11 காவிரி நதி நீர் உரிமை

2018 - ஆம் ஆண்டு உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படி காவிரி நீரில் தமிழ்நாட்டிற்கு உரிய பங்கை த.வெ.க பெற்றுத்தரும். தமிழகத்திற்குரிய நீரைப் பெறுவதில் ஏற்படுத்தப்படும் தடைகளுக்கு உடனடியான சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். காவிரி மேலாண்மை ஆணையத்தில் தமிழகத்தின் உரிமைகளை மேலும் வலுப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். தொடர்ச்சியான - முறையான கண்காணிப்புகளின் மூலம் காவிரியில் தமிழகத்திற்கு உரிய பங்கில் ஒரு சொட்டு நீரைக்கூட விட்டுத்தரமாட்டோம்!

## 12 கச்சத் தீவு மீன்பிடி உரிமை

இந்திய - இலங்கை அரசுகளுக்குள் செய்யப்பட்ட கச்சத்தீவு ஒப்பந்தத்தின்படி, மன்னார் வளைகுடாவில் இந்திய - தமிழக மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமையை மீட்கவும், தக்க வைக்கவும் உரிய நடவடிக்கைகள் எடுக்க ஒன்றிய அரசுக்கு த.வெ.க சார்பில் உண்மையாகவும் உணர்வுப்பூர்வமாகவும் அழுத்தம் தரப்படும். இலங்கை கடற்படையால் தமிழக மீனவர்கள் கைது செய்யப்படுவதை முற்றிலுமாகத் தடுக்க ஒன்றிய அரசிடம் உரிய அழுத்தத்துடன் வலியுறுத்தப்படும்.

## 13 இலங்கைத் தமிழர்களுக்கான நீதி

இலங்கையில் இருந்து புலம் பெயர்ந்து வந்து, தமிழ்நாட்டில் வாழும் இலங்கைத் தமிழர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்க த.வெ.க சார்பில் ஒன்றிய அரசிடம் வலியுறுத்தப்படும். இந்த நடவடிக்கை மூலம், மாநில அரசின் அனைத்து நலத்திட்டங்களையும் இலங்கைத் தமிழர்கள் பெறுவது உறுதி செய்யப்படும். அதுபோல, இலங்கையில் வாழும் தமிழர்களின் உரிமைகளை, பண்பாட்டு அடையாளங்களை, உடமைகளைக் காக்க ஒன்றிய அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள த.வெ.க சார்பில் அழுத்தம் கொடுக்கப்படும். இலங்கையில் இன ரீதியாக நிலவும் பாகுபாடுகளைக் களைய ஒன்றிய அரசு மூலம் த.வெ.க உரிய முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொள்ளும்.

## 14 ஆளுநர் நியமனத்தை ரத்து செய்ய நடவடிக்கை

பிரிட்டிஷ் காலனிய இந்தியாவின் எச்சமாகத் தொடரும் ஆளுநர் பதவியை ரத்து செய்ய த.வெ.க தொடர்ந்து வலியுறுத்தும். பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர் நியமனத்தை மாநில அரசே மேற்கொள்ள வழிவகை செய்யப்படும்.

# தமிழ் அடையாளம் மற்றும் பெருமை



B. தமிழ் மொழி - கலாச்சாரம் - பண்பாடு

## 1 தமிழ்ப் பாரம்பரியம் மற்றும் நாகரிகத்திற்கான நிதிநிலை அறிக்கை

உலக வரலாற்றில் தனித்த பாரம்பரியத்தையும், பெருமையையும் கொண்ட தமிழர்களின் வரலாற்றைப் பறைசாற்றிப் பாதுகாக்க, தமிழர் பண்பாட்டுத் தளங்கள் 500 கோடி ரூபாய் செலவில் மறுசீரமைப்பு செய்யப்படும். சிலம்பம், கும்மியாட்டம், கோலாட்டம், தஞ்சை ஓவியம் உள்ளிட்ட தமிழர் பாரம்பரிய பண்பாட்டுக் கலைகளுக்கு புத்துயிர் அளிக்கப்படும். தமிழர்களின் வரலாற்றுப் பெருமைகளையும், பண்பாட்டு அடையாளங்களையும் உலகளவில் புகழ்பெறச் செய்யும் வகையில் கலாச்சாரக் கண்காட்சிகள் சர்வதேச அளவில் நடத்தப்படும்.

## 2 தொல்லியல் அகழ்வாராய்ச்சி

கீழடி, ஆதிச்சநல்லூர், கொடுமணல், மயிலாடும்பாறை, சிவகளை, அழகன்குளம், அரிக்கமேடு, சலுவன்குப்பம், காவேரிப்பட்டினம், பூம்புகார் ஆகிய 10 தளங்களில் தொல்லியல்துறை தொடர்ந்து அகழ்வாராய்ச்சிகளை மேற்கொள்ள த.வெ.க துணைநிற்கும். கீழடி, ஆதிச்சநல்லூர் ஆகிய இரு தளங்களுக்கும் யூனெஸ்கோ-வின் உலகப் பாரம்பரிய சின்னம் என்ற அங்கீகாரம் பெற முயற்சிகள் மேற்கொள்ளப்படும். எதிர்காலத் தலைமுறையினர் நம் வரலாற்றை அறிந்துகொள்ளும் வகையில், அரசு செலவில் இத்தளங்களுக்கு 'பள்ளி மாணவர் சுற்றுலா' ஏற்பாடு செய்யப்படும்.

## 3 மதுரையில் 'தமிழர் நாகரீக அருங்காட்சியகம்'

பல்லாயிரம் ஆண்டு கால தமிழர் வரலாற்றைப் பறைசாற்றும் விதமாக, சர்வதேசத் தரத்தில் 'தமிழர் நாகரீக அருங்காட்சியகம்' மதுரையில் அமைக்கப்படும்.

## 4 நாட்டுப்புறக் கலைஞர் நலன் மேம்பாடு

தமிழர்களின் கலாசார பண்பாட்டு வேராகத் திகழும் நாட்டுப்புறக் கலைகள் மற்றும் கலைஞர்களை ஊக்கப்படுத்தும் விதத்தில் இரண்டு திட்டங்கள் நிறைவேற்றப்படும்.

- நாட்டுப்புறக் கலைஞர்களின் வாழ்வாதாரம் காக்கும் திட்டம்: பதிவு செய்யப்பட்ட நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு ஆண்டுக்கு நூறு நாட்கள் வேலைவாய்ப்புக் கிடைப்பதை உறுதி செய்யும் விதமாக, அரசு விழாக்கள் மற்றும் நிகழ்ச்சிகளில் அவர்களின் கலைத்திறனை வெளிப்படுத்தும் வாய்ப்புகள் ஏற்படுத்தித் தரப்படும். மேலும், அவர்களுக்குத் தேவையான கருவிகளை வாங்குவதற்கு உதவியாக 15 ஆயிரம் ரூபாய் நிதியுதவி அளிக்கப்படும்.

- இளம்கலைஞர் ஊக்குவிப்புத் திட்டம்: வளரும் இளம் நாட்டுப்புறக் கலைஞர்களை ஊக்குவிக்கும் விதமாக, ஆயிரம் இளம் கலைஞர்களுக்கு ஆண்டுக்கு 25 ஆயிரம் ரூபாய் உதவித்தொகை அளிக்கப்படும்.

## 5 நாட்டுப்புறக்கலை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையங்கள்

கோவை (கரகாட்டம், கும்மி, ஒயிலாட்டம்), தஞ்சாவூர் (பரதநாட்டியம், தெருக்கூத்து, பறை), திருநெல்வேலி(சிலம்பம், கம்பாட்டம்) ஆகிய இடங்களில் நாட்டுப்புறக்கலை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையங்கள் அமைக்கப்பட்டு ஆர்வமுள்ள மாணவர்களுக்கு கட்டணமில்லாப் பயிற்சி அளிக்கப்படும்.

## 6 பாரம்பரிய விளையாட்டுகள் மேம்பாட்டுத் திட்டம்

தமிழ்நாட்டின் பாராம்பரிய விளையாட்டுக்களை மீட்டெடுக்கவும், ஊக்கப்படுத்தி வளர்க்கவும் கீழ்க்கண்ட திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

- உலகளவில் தமிழர் பாராம்பரிய விளையாட்டுக்களைக் கொண்டு சேர்க்கும்வகையில், தமிழ்நாடு கிராமப்புற ஒலிம்பிக் தொடர் நடத்தப்படும்.
- ஜல்லிக்கட்டுப் போட்டிகள் நடத்த அரசு சார்பில் 5 லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும். ஜல்லிக்கட்டில் உயிரிழந்த மாடுபிடி வீரரின் குடும்பத்திற்கு 10 லட்சம் ரூபாய் வழங்கப்படும். அதுபோல், காயமடைந்த வீரருக்கு 2 லட்சம் ரூபாய் வழங்கப்படும். மேலும், ஜல்லிக்கட்டை சர்வதேச விளையாட்டாக மேம்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
- தமிழகத்தில் கோவை, சேலம் என ரேக்ளா பந்தயங்கள் பிரதானமாக நடைபெறும் மாவட்டங்களில் ரேக்ளா பந்தய மைதானங்கள் அமைக்கப்படும்.
- சர்வதேச அளவில் சிலம்பப் போட்டிகள் நடத்த ஆண்டுக்கு 5 கோடி ரூபாய் நிதியுதவி அளிக்கப்படும். தமிழ்நாடு முழுவதும் ஆயிரம் சிலம்பப் பயிற்சி மையங்கள் அமைக்கப்படும்.

## 7 திருக்குறள் வளர்ச்சித் திட்டம்

திருக்குறளை ஒவ்வொரு மாணவரது வாழ்வின் ஒரு செயற்பாட்டு அங்கமாக மாற்றும் நோக்கில் ஒரு சிறப்பு திட்டம் அறிமுகப்படுத்தப்படும். 300 குறள்களை முழுமையாகக் கற்றுத் தேர்ந்த மாணவர்களுக்குப் பணப் பரிசுகள் மற்றும் கல்வி உதவித்தொகைகள் வழங்கப்படும்; 1,330 குறள்களையும் முழுமையாகக் கற்றவர்களுக்கு உலகளாவிய கலாசார அனுபவம், மாநில அளவிலான அங்கீகாரம் மற்றும் நீண்டகால கல்வி ஆதரவு வழங்கப்படும். மேலும், தமிழ்ப் பாரம்பரியத்தில் வேரூன்றிய மதிப்புகளைக் கொண்ட தலைமைத்துவத்தை உருவாக்கும் வகையில், பள்ளிகள் மற்றும் வணிகக் கல்வி நிறுவனங்களில் திருக்குறள் ஒரு சிறப்பு பாடமாக அறிமுகப்படுத்தப்படும்.

## 8 மொழிப்போர் தியாகிகள் ஓய்வூதியம்

மொழிப்போர் தியாகிகளின் தியாகத்தைப் போற்றும்வகையில் அவர்களின் குடும்பத்தினருக்கு வழங்கப்படும் ஓய்வூதியம் ஆண்டுக்கு தலா இரண்டரை (ரூ.2,50,000) லட்சமாக உயர்த்தப்படும். மொழிப்போர் தியாகிகளை நினைவுகூரும் வகையில், மாணவர்களுக்கு பேச்சுப் போட்டிகள், கட்டுரைப்போட்டிகள் நடத்தப்படும்.

## 9 தமிழ் செயற்கை நுண்ணறிவு

செயற்கை நுண்ணறிவு என்று சொல்லப்படும் AI தொழில்நுட்பம் வருகைக்குப் பின் எல்லாத் துறைகளும் அதற்கேற்ப தங்களைத் தகவமைத்துக் கொண்டுள்ளன. ஆனால், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் ஆங்கிலத்தையே அடிப்படையாகக் கொண்டுள்ளது. தமிழ் மொழியில் இந்தத் தொழில்நுட்பத்தை வடிவமைப்பதும், பயன்படுத்துவதும் காலத்தின் அவசியமாகிறது. எனவே, முன்னணிப் பல்கலைக்கழகங்களோடு இணைந்து சிறப்புத் தமிழ் செயற்கை நுண்ணறிவு மாதிரி உருவாக்கப்படும். இந்த சேவை நம் நாட்டு மக்கள் அனைவருக்கும் கட்டணமில்லாமல் வழங்கப்படும். வெளிநாட்டினருக்கு வணிக உரிமத்தின் அடிப்படையில் வழங்கப்படும்.

## 10 தமிழர் பண்பாட்டு டிஜிட்டல் காப்பகங்கள்

தமிழ்நாட்டின் கலை, கலாசாரம், பண்பாட்டைப் பாதுகாக்கும் வகையில் டிஜிட்டல் காப்பகங்களை உருவாக்கத் தேவையான நிதி ஒதுக்கப்படும்.

## 11 தமிழ்நாடு டிஜிட்டல் அருங்காட்சியகம்

தமிழ்நாடு டிஜிட்டல் அருங்காட்சியம் திட்டத்தின் கீழ், தமிழக வரலாறு, பண்பாடு, கலாசாரத்தை AR (Augmented Reality), VR (Virtual Reality), Hologram ஆகிய தொழில்நுட்பங்களின் மூலம் ஆவணப்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

01

# தமிழ் அடையாளம் மற்றும் பெருமை

C. சுற்றுலா



## 1 தமிழ்நாடு பொறுப்புச் சுற்றுலா

சுற்றுலாவை வெறும் பொழுதுபோக்கும் அம்சமாக மட்டுமே கருதாமல் சூழல் சுற்றுலா, பண்பாட்டுச் சுற்றுலா, கடலோரச் சுற்றுலா, கலாசார சுற்றுலா ஆகியவற்றை உள்ளடக்கிய மகிழ்ச்சிகரமான, ஆக்கப்பூர்வமான சுற்றுலாத் திட்டமாக முன்வைக்கிறது, த.வெ.க-வின் 'தமிழ்நாடு பொறுப்பு சுற்றுலா'. இதன் மூலம் வரும் வருவாயில் 25 விழுக்காடு அந்தந்த உள்ளூர் மக்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்காக செலவிடப்படும்.

## 2 தொல்லியல் அகழ்வாராய்ச்சி

தமிழ் கலாசாரத்தை மையப்படுத்தி சுற்றுலாப் பயணிகளைக் கவரும் விதமாக கீழ்க்கண்ட முன்னெடுப்புகள் செயல்படுத்தப்படும்.

- 10 முக்கிய சுற்றுலாத் தளங்களில் தினமும் மாலை நாட்டுப்புறக் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படும்.
- கிராமப்புற வாழ்வனுபவத்தை வழங்கும் கிராமப்புறச் சுற்றுலா மையங்கள் உருவாக்கப்படும்.
- அனைத்துப் பண்பாட்டுச் சுற்றுலாத் தளங்களின் அருகிலும் உள்ளூர் கைவினைக் கலைஞர்களால் உருவாக்கப்பட்ட கலைப்பொருட்களை விற்பனை செய்யும் இரவுச் சந்தைகள் அமைக்கப்படும்.
- கோடை விடுமுறை உள்ளிட்ட சுற்றுலா பருவங்களில் தமிழ் கலாசார திருவிழா நடத்தப்படும்.

## 3 ஆன்மீகச் சுற்றுலாத் திட்டம்

நான்கு முக்கிய ஆன்மீக வழித்தடங்களில், தமிழ்நாடு ஆன்மீக சுற்றுலாத் திட்டம் உருவாக்கப்படும்.

- பழனி, திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், சுவாமி மலை, திருத்தணி, பழமுதிர்ச்சோலை ஆகிய ஆன்மீகத் தலங்களை உள்ளடக்கிய அறுபடைவீடு சுற்றுலாத் திட்டம்.
- சிதம்பரம், திருவண்ணாமலை, கும்பகோணம், திருவையாறு ஆகிய தலங்களை உள்ளடக்கிய சிவத்திருத்தலச் சுற்றுலாத் திட்டம்.
- ஸ்ரீரங்கம், திருக்கோஷ்டியூர், ஆழ்வார் திருநகரி ஆகிய தலங்களை உள்ளடக்கிய வைணவ புனிதத்தல சுற்றுலாத் திட்டம்
- நாகூர் தர்கா, வேளாங்கண்ணி, கன்னியாகுமரி ஆகிய நமது அனைத்து சமயங்களைச் சேர்ந்த புனிதத்தலங்களை உள்ளடக்கிய சமய நல்லிணக்கச் சுற்றுலாத் திட்டம்

## 4 பக்தர்கள் ஓய்வு விடுதிகள்

அனைத்து சமயங்களுக்கும் முக்கிய ஆன்மீக வழிபாட்டுத் தலங்களாகத் திகழும், திருவண்ணாமலை, மதுரை, இராமேஸ்வரம், பழனி, வேளாங்கண்ணி, நாகூர் ஆகிய இடங்களில் பக்தர்கள் ஓய்வெடுக்க விடுதிகள் அமைக்கப்படும்.

## 5 தமிழ்ப் பண்பாட்டு சுற்றுலாத் திட்டம்

கீழடி, ஆதிச்சநல்லூர், கொடுமணல், கங்கை கொண்ட சோழபுரம் ஆகிய பண்பாட்டுத் தளங்களில், AR (Augmented Reality), VR (Virtual Reality) ஆகிய தொழில்நுட்பங்களின் மூலம் தமிழ் நகர நாகரீக அனுபவம் சுற்றுலாப் பயணிகளுக்காக மீட்டுருவாக்கம் செய்யப்படும்.

## 6 தமிழ் பண்பாட்டு விடுதிகள்

தமிழ் பண்பாடு மற்றும் கலாசாரத்தை பிரதிபலிக்கும் வகையில் உள்ள செட்டிநாடு வீடுகள், நீலகிரி பங்களாக்கள் உள்ளிட்டவற்றை தங்கும் விடுதிகளாக மாற்றும் தனியார் உரிமையாளர்களுக்கு வரிச்சலுகை வழங்கப்படும். மேலும், அந்தக் பாரம்பரியக் கட்டிடங்களை மறு சீரமைப்பு செய்வதற்கு, ஆகும் செலவில் 50 சதவிகிதம் ஊக்கத் தொகை அரசு சார்பில் வழங்கப்படும்.

## 7 தமிழ்நாடு கடல்சார் வழித்தடச் சுற்றுலா

தமிழகத்தின் நீண்ட நெடிய கடற்கரையை ஒட்டியுள்ள வேதாரண்யம் தொடங்கி ராமேஸ்வரம் மண்டபம் வரை கடல்சார் சுற்றுலா வழித்தடம் உருவாக்கப்படும். அந்தந்த உள்ளூர் மீனவர்களே அந்தந்தப் பகுதியில் சுற்றுலாப் பயணிகளின் வழிகாட்டிகளாகவும், கடலுக்கு அழைத்துச் செல்லும் கடலோடிகளாகவும் செயல்படுவார்கள். இதன்மூலம், மீன்பிடித் தடைக்காலத்தில் அவர்களுக்கு ஏற்படும் வருவாய் இழப்புத் தடுக்கப்படும். ராமேஸ்வரம் – தனுஷ்கோடி தமிழகத்தின் முதல் கடல்சார் சுற்றுலா மாவட்டமாக அறிவிக்கப்படும். ராமேஸ்வரம் – இலங்கை தலைமன்னார் இடையே படகுப்போக்குவரத்து தொடங்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

## 8 நீலகிரி மலை சாகச சுற்றுலா

ஊட்டி, குன்னூர், கூடலூர், கோத்தகிரி, முதுமலை ஆகிய இடங்களில் 15 மலையேற்ற பாதைகள் கண்டறியப்பட்டு நீலகிரி மலை சாகச சுற்றுலாத் திட்டம் செயல்படுத்தப்படும். ஒவ்வொரு ஆண்டும் சூழலியலைப் பாதிக்காதவாறு Nilgris Mountain Biking Festival நடத்தப்படும். அரசு – தனியார் கூட்டு முயற்சியில் ஊட்டியில் மூன்று இடங்களில் பாரா கிளைடிங் தளங்கள் அமைக்கப்படும். மோயார் ஆற்றில் Kayaking செல்வதற்கான வசதி செய்யப்படும்.

## 9 கேரவன் சுற்றுலா

தமிழ்நாட்டில் முதல் கேரவன் சுற்றுலா கொள்கை உருவாக்கப்படும். அதன்கீழ்

- தமிழகம் முழுவதும் உள்ள 20 சுற்றுலா மண்டலங்களில் அழகான நிலப்பரப்புகள் தேர்வு செய்யப்பட்டு, குடிநீர், இணைய வசதி, மின் இணைப்பு, கழிப்பறை வசதிகளுடன் கேரவன் நிறுத்தங்கள் அமைக்கப்படும்.
- இந்த கேரவன் நிறுத்தங்களை அமைக்க முன்வரும் தொழில் முனைவோருக்கும், சுய உதவிக் குழுக்களுக்கும் 2 லட்சம் ரூபாய் நிதியுதவி அரசு சார்பில் வழங்கப்படும்.

## 10 உணவுச் சுற்றுலா வழித்தடம்

தமிழகத்தில் உள்ள பாரம்பரிய உணவு வகைகளை சுவைக்கும் விதமாக, செட்டிநாடு உணவுச் சுற்றுலா வழித்தடம் (காரைக்குடி, கானாடுகாத்தான், தேவகோட்டை), கொங்கு உணவுச் சுற்றுலா வழித்தடம் (கோவை, ஈரோடு, சேலம்), திருநெல்வேலி உணவுச் சுற்றுலா வழித்தடம் உருவாக்கப்படும். நம் மாநிலத்தின் பெருமைமிகு உணவு கலாசாரத்தை பறைசாற்றும் வகையில் சர்வதேச உணவுத் திருவிழா நடத்தப்படும்.

## 11 நதிசார் சுற்றுலா

ஒகேனக்கல் நீர் வீழ்ச்சியில் இருந்து ஸ்ரீரங்கம் தீவு வரையிலான காவேரி நதி வழித்தடம், மதுரை வைகை வழித்தடம், பாபநாசத்தில் இருந்து திருநெல்வேலி வரையிலான தாமிரபரணி நதி வழித்தடம் என மூன்று முக்கிய நதிவழித்தடங்களில் நதிசார் சுற்றுலா உருவாக்கப்படும்.

## 12 சுற்றுலா திறன் மேம்பாட்டுத் திட்டம்

உபசரிப்பு, உணவுத் தயாரிப்பு, சுற்றுலா வழிகாட்டி, நீர் விளையாட்டுப் பாதுகாப்பு மேலாண்மை, கலைத்திறன் மேம்பாடு ஆகியவற்றை உள்ளடக்கிய 12 வாரப் பயிற்சி வகுப்புகள் அறிமுகம் செய்யப்படும். அதில் தேர்ச்சி பெறுபவர்களுக்கு வேலை வாய்ப்பு உறுதி செய்யப்படும்.

## 13 சினிமா சுற்றுலா

தமிழ்நாடு முழுவதும் உள்ள புகழ்பெற்ற படப்பிடிப்புத் தளங்களை உள்ளடக்கிய சினிமா சுற்றுலா வழித்தடம் உருவாக்கப்படும். அந்த இடங்களுக்கும் திரைப்படங்களுக்கும் உள்ள தொடர்புகள் குறித்த விபரங்களை QR கோடு மூலம் அறிந்து கொள்ளும் ஏற்பாடுகள் செய்யப்படும்.

## 14 சுற்றுலா பாதுகாப்பு

சுற்றுலாப் பயணிகளுக்கான பாதுகாப்பு அம்சங்களை மேம்படுத்தும்வகையில் சுற்றுலாத்தளங்களில் கட்டமைப்பு வசதிகள், அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்படும். குறிப்பாக தகுதி பெற்ற ஆப்பரேட்டர்கள், கடலோர உயிர் காப்பாளர்கள், டூரிஸ்ட் போலீஸ் மற்றும் 24 மணி நேரமும் செயல்படும் உதவி மையங்கள் உள்ளிட்ட வசதிகள் ஏற்படுத்தப்படும்.

# கண்ணியமான வாழ்வு மற்றும் சமூகப் பாதுகாப்பு



A. மக்கள் உரிமை

## 1 வறுமை இல்லாத் தமிழ்நாடு

வறுமை இல்லாத் தமிழகத்தை உருவாக்க வேண்டும் என்பதே த.வெ.க-வின் முக்கியக் குறிக்கோள். தமிழகத்தில் உள்ள ஏழைக் குடும்பங்கள் கண்டறியப்பட்டு, அவர்களுக்கு அரசாங்கத்தின் நலத்திட்டங்கள் அனைத்தும் சென்று சேர்வது உறுதி செய்யப்படும். மேலும், அவர்களுக்கு உரிய வேலை வாய்ப்புக்கள் உருவாக்கிக் கொடுக்கப்படும். சுயதொழில் செய்வதற்கான வாய்ப்புகளும் உருவாக்கிக் கொடுக்கப்படும். இந்த நடவடிக்கைகள் மூலம் அவர்களின் குறைந்தபட்ச ஆண்டு வருமானம் உறுதி செய்யப்படும்.

## 2 கட்டணமில்லா மின்சாரம்

தகுதியுள்ள வீடுகளுக்கு ஒவ்வொரு மாதமும் 200 யூனிட் கட்டணமில்லா மின்சாரம் வழங்கப்படும்.

## 3 அனைவருக்கும் குடிநீர்

தமிழகத்தில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் 100 சதவிகிதம் சுத்தமான குடிநீர் விநியோகம் உறுதி செய்யப்படும்.

## 4 அனைவருக்கும் வீடு

கிராமப்புறங்களில் உள்ள ஏழை-எளிய மக்கள் சொந்தவீடு பெறும்வகையில் 5 லட்சம் புதிய வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும்.

## 5 பட்டா முறைப்படுத்துதல்

அரசுப் புறம்போக்கு நிலங்களில் வசிப்பவர்கள் அனைவருக்கும் (எந்தவித ஆட்சேபனையும்) இல்லாதபட்சத்தில் அரசுப் பட்டா வழங்கப்படும். கல்வராயன் உள்ளிட்ட மலைப்பகுதிகளில் வசிக்கும் மக்கள் தற்போது பெற்றுள்ள எம்.ஜி.ஆர் பட்டா ஆவணங்கள் முறையாக கணினிமயப்படுத்தப்படும்.

# கண்ணியமான வாழ்வு மற்றும் சமூகப் பாதுகாப்பு




A. மக்கள் உரிமை

## 6 பொது விநியோகத் திட்டம் சீர்திருத்தம்

- **வீடு தேடி ரேசன் பொருட்கள்:**
  முதியவர்கள், மாற்றுத் திறனாளிகள், விளிம்புநிலை மக்கள் ஆகியோருக்கு முன்னுரிமை கொடுத்து, அவர்களின் வீடுகளுக்கே சென்று ரேசன் பொருட்கள் விநியோகம் செய்யப்படும்.
- **ஊட்டச்சத்து மிக்க உணவுப்பொருட்கள்:**
  அனீமியா, விட்டமின் ஏ மற்றும் பி-12 குறைபாடுகளால் பொதுமக்கள் பாதிக்கப்படுவதைத் தவிர்க்கும் பொருட்டு, இரும்புச் சத்து - போலிக் ஆசிட் நிறைந்த அரிசி, விட்டமின் ஏ, விட்டமின் டி நிறைந்த சமையல் எண்ணெய், செறிவூட்டப்பட்ட கோதுமை மாவு ஆகியவை அனைவருக்கும் ரேசன் கடைகள் மூலம் விநியோகம் செய்யப்படும். இதன்மூலம், ஊட்டச் சத்துக் குறைபாடு இல்லாத ஆரோக்கியமான தமிழகம் உருவாக்கப்படும்.
- **பாக்கெட்களில் அடைக்கப்பட்ட ரேசன் பொருட்கள்:**
  ரேசன் பொருட்களில் எடைகுறைவு, தரக்குறைவு, கலப்படம், கடத்தல் ஆகியவற்றைத் தடுத்து, நியாயமான எடையில், தரமான பொருட்கள் பொதுமக்களுக்கு கிடைக்கும் வகையில், அரிசி தவிர்த்த மற்ற அனைத்து ரேசன் பொருட்களும் பாக்கெட்டுகளாக விநியோகம் செய்யப்படும்.
- **கலப்படத்திற்கு முற்றுப்புள்ளி:**
  பொது விநியோகத்திட்டத்தின் ஒவ்வொரு கட்டத்திலும், கடுமையான தரப்பரிசோதனை செய்யப்படும். இதன்மூலம், கலப்படமற்ற தரமான பொருட்கள் மக்களுக்கு விநியோகம் செய்யப்படுவது உறுதிப்படுத்தப்படும்.
- **ரேசன் கடைகள் அதிகரிப்பு:**
  500 ரேசன் கார்டுகளுக்கு ஒரு ரேசன் கடை அமைக்கப்படும். இதன்மூலம், கூட்ட நெரிசல் தவிர்க்கப்பட்டு, சேவைத்தரம் உறுதி செய்யப்படும். இதன்மூலம் அனைவரும் ரேசன் பொருட்களை எளிதாகப் பெற முடியும்.
- **எடையாளர்கள்நியமனம்:**
  ஒவ்வொரு கிராமப்புற ரேசன் கடைகளிலும் போதுமான அளவுக்கு எடையாளர்கள் நியமனம் செய்யப்படுவார்கள். பெண்களுக்கு பெண் ஊழியர்களும், ஆண்களுக்கு ஆண் ஊழியர்களும் நியமிக்கப்படுவார்கள்.

# கண்ணியமான வாழ்வு மற்றும் சமூகப் பாதுகாப்பு

B. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன்

## 1 சமூகநீதி பட்ஜெட்

ஆதிதிராவிடர்-பழங்குடியினர் மற்றும் விளிம்பு நிலை சமூக மக்களின் நலனுக்காக பட்ஜெட்டில் ஒதுக்கப்படும் நிதி அவர்களின் வளர்ச்சிக்கே முழுமையாகப் பயன்படுத்தப்படும். மற்ற வளர்ச்சித் திட்டங்களுக்கு இந்த நிதி ஒருபோதும் பயன்படுத்தப்படாது.

## 2 ஆதி திராவிடர் உதவித் தொகை

தொழில் கல்வி, மருத்துவம், சட்டம், நிர்வாகவியல் பயிலும் ஆதி திராவிடர் - பழங்குடியின மாணவர்களுக்கு ஆண்டுக்கு 40 ஆயிரம் ரூபாய் உதவித்தொகை வழங்கப்படும். இதன்மூலம், ஆதிதிராவிடர்-பழங்குடியின மாணவர்களின் உயர் கல்வி வறுமையின் காரணமாக தடைபடுவது தவிர்க்கப்படும்.

## 3 ஆதிதிராவிடர் தொழில்முனைவோர் திட்டம்

பட்டியலினத் தொழில்முனைவோர் திட்டம் மூலம் ஆதிதிராவிடர் - பழங்குடியினர் சமூகங்களைச் சேர்ந்த முதல் தலைமுறை தொழில்முனைவோருக்கு முதலீட்டுத் தொகையாக 5 லட்சம் ரூபாய் வழங்கப்படும்.

## 4 தாட்கோ கடன் தள்ளுபடி

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தில் ஆதிதிராவிட மக்கள் வாங்கியுள்ள கடன்கள் முற்றிலுமாகத் தள்ளுபடி செய்யப்படும்.

## 5 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வீட்டுத் திட்டம்

தமிழகத்தில் உள்ள அனைத்து ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு நிரந்தர வீடு மற்றும் பட்டா வழங்கப்படும்.

## 6 எஸ்.சி/எஸ்.டி வன்கொடுமை தடுப்பு

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு எதிரான கொடுமைகள் முற்றிலுமாகத் தடுக்கப்படும். ஒவ்வொரு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தலைமையில் இதற்கென தனி காவல் பிரிவு அமைக்கப்படும்.

# கண்ணியமான வாழ்வு மற்றும் சமூகப் பாதுகாப்பு

C. சிறுபான்மையினர் நலன்

## 1 சச்சார் ஆணைய பரிந்துரைகள் அமல்படுத்தப்படும்

அனைத்து மக்களின் சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றத்தில் த.வெ.க. அரசு அர்ப்பணிப்போடு செயல்படும். எனவே, சச்சார் ஆணைய பரிந்துரைகளை அமல்படுத்த ஒன்றிய அரசை வலியுறுத்துவோம். இதன்மூலம், கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் சிறுபான்மையினருக்கு உரியப் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவோம்.

## 2 சிறுபான்மையினர் கல்வி மற்றும் தொழில்முனைவோர் பங்களிப்பு

சிறுபான்மையினர் கல்விக்கான திட்டங்கள் திட்டமிட்ட காலத்திற்குள் நடைமுறைப்படுத்தப்படும். ஒவ்வொரு மாவட்டத்திலும் திறன் மேம்பாட்டு மையங்கள் நிறுவப்படும். வக்ஃப் வாரியத்தின் மூலம் சிறுபான்மையினர் பெண்களுக்குக் கல்லூரிகள் திறக்கப்படும். கல்வி மற்றும் தொழில் தொடங்க தேவையான நிதி உதவிகள் பெறும் முறை எளிமைப்படுத்தப்படும்.

## 3 சிறுபான்மையினர் நிறுவனங்கள் பாதுகாக்கப்படும்

சிறுபான்மையினர் நடத்தும் மக்கள் சார்ந்த கல்வி மற்றும் மருத்துவத் தொண்டு நிறுவனங்களைப் பாதுகாக்கும் சட்ட மற்றும் கொள்கைத் திட்டங்களைக் த.வெ.க. அரசு உருவாக்கும்.

## 4 வக்ஃப் திருத்தச் சட்டத்திற்கு எதிராகச் சட்டப் போராட்டம்

புதிய வக்ஃப் திருத்தச் சட்டத்தை நிரந்தரமாக நீக்க த.வெ.க. அரசு உச்சநீதிமன்றத்தில் சட்டப் போராட்டம் நடத்தும்.

## 5 அனைத்து சமய மக்களுக்கும் புனிதப் பயண உதவித்தொகை

ஹஜ் பயணம் மேற்கொள்ளும் இஸ்லாமியர்களுக்கான ஹஜ் மானியம் உயர்த்தப்படும். ஜெருசலேம் புனிதப் பயணம் மேற்கொள்ளும் கிறிஸ்தவர்களுக்கான மானியம் மற்றும் அனைத்து சமய புனிதப் பயணங்களுக்கும் அரசின் மானியம் வழங்கப்படும்.

## 6 அடக்கத்தலம் மற்றும் கபர்ஸ்தான்களுக்கான இடம்

சிறுபான்மையினருக்கான இடுகாடு (கபர்ஸ்தான்) மற்றும் அடக்கத்தலங்களுக்கான போதுமான இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒதுக்கப்படும்.

# கண்ணியமான வாழ்வு மற்றும் சமூகப் பாதுகாப்பு



D. மூத்த குடிமக்கள் நலன்

## 1 முதியோர் உதவித் தொகை

முதியோர் உதவித் தொகை மூன்றாயிரம் (ரூ.3000) ரூபாயாக உயர்த்தப்படும்.

## 2 கட்டணமில்லா புனித யாத்திரை

ஒவ்வொரு வருடமும் இரண்டரை லட்சம் மூத்த குடிமக்களுக்கு அவர்கள் விரும்பும் இடங்களுக்கு புனித யாத்திரை அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்யப்படும். இதில், ஏ.சி ரயில் வசதி, வசதியான தங்குமிடம், நல்ல உணவு ஆகிய வசதிகள் செய்துத் தரப்படும்.

## 3 வெற்றி நடமாடும் முதியோர் கிளினிக்

மூத்த குடிமக்களுக்காக தமிழ்நாடு முழுவதும் 1000 நடமாடும் முதியோர் கிளினிக்குகள் தொடங்கப்படும். ஒவ்வொரு நடமாடும் கிளினிக்கிலும் ஒரு மருத்துவர், ஒரு செவிலியர், ஒரு பிஸியோதெரபிஸ்ட் இருப்பார். தமிழகம் முழுவதும் உள்ள ஒவ்வொரு கிராமப் பஞ்சாயத்துகளுக்கும் இவர்கள் நேரில் சென்று இலவச உடல் பரிசோதனை செய்வர். நாள்பட்ட வியாதிகளுக்கான மருந்துகள் வழங்கப்படும்.

## 4 முதியோர் உபகரண உதவித்தொகை

மூத்த குடிமக்களுக்கு அவசியத் தேவையாக உள்ள கைத்தடி, கண் கண்ணாடி, சக்கர நாற்காலி, காது கேட்கும் கருவிகள், பல் செட் உள்ளிட்ட உபகரணங்கள் வாங்க பத்தாயிரம் ரூபாய் நிதி உதவி வழங்கப்படும்.

## 5 முதியோர் இல்லம்

ஒவ்வொரு மாவட்டத்திலும் தகுதியான பராமரிப்பாளர்கள், மருத்துவப் பணியாளர்கள், பொழுதுபோக்கு வசதிகள் உள்பட முதியோருக்குத் தேவையான அனைத்து அம்சங்களுடன் கூடிய முதியோர் இல்லங்கள் அமைக்கப்படும்.

## 6 முதியோர் மனமகிழ் மன்றங்கள்

நூலகம், யோகா மற்றும் தியான வகுப்புகள், உள்விளையாட்டுக்கள் ஆகிய வசதிகள் கொண்ட முதியோர் மனமகிழ் மன்றங்கள் அமைக்கப்படும்.

### 7 ஆட்சி நிர்வாகத்தில் மூத்த குடிமக்கள்

மூத்த குடிமக்களின் அனுபவம் மற்றும் திறமைகளைப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில், ஆட்சி நிர்வாகத்தில் அவர்களின் ஆலோசனைகளும் பெற்றுக்கொள்ளப்படும்.

### 8 முதியோர் பாதுகாப்புப் பிரிவு

ஒவ்வொரு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திலும், மூத்த குடிமக்கள் பாதுகாப்புப் பிரிவு ஏற்படுத்தப்படும். அதில் தனியாக ஒருங்கிணைப்பு அலுவலர்(Nodal Officer) நியமிக்கப்பட்டு, முதியோர்களுக்கு எதிரான சொத்துப் பிரச்சினைகள், துன்புறுத்தல்கள், கைவிடப்படுதல் போன்ற பிரச்சினைகள் தீர்க்கப்படும்.

### 9 வீடு தேடி அரசு சேவைகள்

மூத்த குடிமக்கள் வீடுகளுக்கே சென்று ரேசன் அட்டை புதுப்பித்தல், சான்றிதழ்கள் வழங்குதல் உள்ளிட்ட முக்கியமான அரசு சேவைகள் வழங்கப்படும்.

# கண்ணியமான வாழ்வு மற்றும் சமூகப் பாதுகாப்பு

## E. மாற்றுத் திறனாளிகள் நலன்

### 1 ஓய்வூதியம் உயர்வு

மாற்றுத் திறனாளிகளுக்கான மாத ஓய்வூதியம் மூன்றாயிரம் (ரூ.3000) ரூபாயாக உயர்த்தப்படும்.

### 2 சிறப்புக் குழந்தைகளுக்கான கல்வி

ஒவ்வொரு அரசுப் பள்ளியிலும் சிறப்புக் குழந்தைகளுக்கான பிரத்தியேக ஆசிரியர் நியமிக்கப்படுவார். அதேபோல, சிறப்புக் குழந்தைகளுக்கான பிரத்தியேகப் பள்ளிகளும் திறக்கப்படும்.

### 3 உபகரண உதவித்தொகை

மாற்றுத்திறனாளிகளுக்கு அவசியமாகத் தேவைப்படும் சக்கர நாற்காலி, கண் கண்ணாடி, காது கேட்கும் கருவிகள், நடை உபகரணங்கள் ஆகியவை வாங்க உதவித்தொகை வழங்கப்படும்.

### 4 இடஒதுக்கீட்டை முறையாக நடைமுறைப்படுத்துதல்

மாற்றுத் திறனாளிகளுக்கு வழக்கத்தில் இருக்கும் 4 சதவிகித இடஒதுக்கீட்டை முறையாக நடைமுறைப்படுத்துவோம்.

# கண்ணியமான வாழ்வு மற்றும் சமூகப் பாதுகாப்பு

## F. திருநர் நலன்

### 1 திருநர் நலன் மற்றும் கண்ணியம் காக்கும் சட்டம்

திருநர் நலன் காக்கும் விதமாக கீழ்க்கண்ட திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படும்.

- தொகுப்பூதியம் 3000 ரூபாய் வழங்கப்படும்.
- திருநர்கள் வேலைவாய்ப்பை பெறும் வகையில் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்கப்படும்.
- சுய உதவிக் குழுக்கள் அமைக்கவும், சுய வேலைவாய்ப்புக்களை உருவாக்கிக் கொள்ளவும் உதவி செய்யப்படும்.

# கண்ணியமான வாழ்வு மற்றும் சமூகப் பாதுகாப்பு

## G. நெசவாளர் நலன்

### 1 நெசவாளர் உதவித் தொகை

தமிழக நெசவாளர்கள் உலகின் மிகத் திறமைவாய்ந்த கலைஞர்கள். ஆயினும் அவர்களின் வாழ்வாதாரம் கடும் போராட்டத்தில்தான் இப்போதும் உள்ளது. அதைக் களையும்விதமாக, சொந்தமாகத் தறி வைத்திருக்கும் (விசைத்தறி/கைத்தறி) ஒவ்வொரு நெசவாளர் குடும்பத்திற்கும் ஆண்டுக்கு 30 ஆயிரம் ரூபாய் உதவித்தொகை வழங்கப்படும்.

# வெற்றித் தமிழ்நாடு

## 2 நெசவு மூலப்பொருள் கொள்முதல் மானியம்

நெசவுத் தொழிலுக்குத் தேவையான நூல், சாயம், ரசாயனம் உள்ளிட்ட மூலப்பொருள் வாங்குவதற்கு நெசவாளர்களுக்கு 50 சதவிகித மானியம் வழங்கப்படும்.

## 3 விசைத்தறிகளுக்கு கட்டணமில்லா மின்சாரம்

கைத்தறி அமைக்கப்பட்டுள்ள வீடுகளுக்கு தற்போது வழங்கப்படும் கட்டணமில்லா மின்சாரம் 500 யூனிட்டுகளாக உயர்த்தப்படும். அதுபோல், விசைத்தறி அமைக்கப்பட்டுள்ள வீடுகளுக்கு கட்டணமில்லா மின்சாரம் 1500 யூனிட்டுகளாக உயர்த்தப்படும். சிறு விசைத்தறி நிறுவனங்களுக்கு (அதிகபட்சம் 12 விசைத்தறி) சோலார் பேனல்கள் அமைப்பதற்கு 75 சதவிகிதம் மானியம் வழங்கப்படும்.

## 4 ஆயுள் காப்பீடு

அனைத்து நெசவாளர்களுக்கும் 10 லட்ச ரூபாய் மதிப்பிலான ஆயுள் காப்பீடு வழங்கப்படும்.

## 5 சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம்

தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தில் தற்போது உள்ள அரசுப் பங்களிப்புத் தொகை 8 சதவிகிதம். இந்தத் தொகையானது 16 சதவிகிதமாக உயர்த்தப்படும்.

## 6 ஒருங்கிணைந்த நெசவாளர் நகரங்கள்

நெசவுத்தொழிலில் சிறந்து விளங்கும் காஞ்சிபுரம், ஆரணி, சேலம், ஈரோடு ஆகிய மாவட்டங்களில் ஒருங்கிணைந்த நெசவாளர் நகரங்கள் உருவாக்கப்படும். இந்த நகரங்களின் மின்தேவைக்காக 3 கிலோ வாட் திறனுள்ள சோலார் பேனல்கள் அமைக்கப்படும்.

## 7 நெசவாளர் குழந்தைகள் உதவித்தொகை

நெசவாளர் குழந்தைகள் வடிவமைப்பு (Design) மற்றும் துணிநூல்துறையில் (Textile Engineering) உயர் கல்வி பயில்வதற்கு உதவித் தொகை வழங்கப்படும்.

## 8 வெற்றித் தறி

தமிழக நெசவாளர்களின் தயாரிப்புகளை சர்வதேச அளவில் நேரடியாக விற்பனை செய்வதற்கு பிரத்தியேகமான இ-காமர்ஸ் பிராண்ட் உருவாக்கப்படும். ஒவ்வொரு முக்கிய நகரத்திலும் வெற்றித் தறி ஷோரூம்கள் அமைக்கப்படும்.

### 9 சோலார் பேனல் மானியம்

தனிநபர்கள் வைத்திருக்கும் தறி ஷெட்களுக்கு சோலார் பேனல் அமைக்க 100 சதவிகித மானியம் வழங்கப்படும்.

# கண்ணியமான வாழ்வு மற்றும் சமூகப் பாதுகாப்பு

## H. அரசு ஊழியர் நலன்

### 1 பழைய ஓய்வூதியத் திட்டம் நடைமுறைப்படுத்துதல்

தி.மு.க அரசு கொண்டுவந்துள்ள தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம் ஒழிக்கப்பட்டு, அரசு ஊழியர்களின் கோரிக்கைக்கேற்ப முழுமையான பழைய ஓய்வூதியத் திட்டம் கனிவுடன் பரிசீலிக்கப்பட்டு மதிப்பீடு செய்யப்படும்.

### 2 அரசு ஊழியர் நல வாரியம்

அரசு, போலீஸ் பணியாளர்கள், பள்ளி ஆசிரியர்கள் மற்றும் கல்லூரி பேராசிரியர்கள் உள்ளிட்ட அரசு ஊழியர்களின் உரிமைகளை பாதுகாக்கவும், அவர்களின் நலன்களை உறுதிப்படுத்தவும் ரூ.5,000 கோடி ஒதுக்கீட்டுடன் அரசு ஊழியர் நல வாரியம் அமைக்கப்படும்.

### 3 தற்காலிகப் பணியாளர் பணி நிரந்தரம்

ஆசிரியர், செவிலியர் உள்ளிட்ட அரசுப் பணிகளில் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட தற்காலிகப் பணியாளர்கள் 5 வருடப் பணி அனுபவம் பெற்றதும், அவர்கள் நிரந்தரப் பணியாளர்களாக நியமனம் செய்யப்படுவார்கள்.

### 4 பதவி உயர்வு மற்றும் பணியிட மாறுதலில் வெளிப்படைத்தன்மை

அரசு ஊழியர்களின் பதவி உயர்வு மற்றும் பணியிட மாறுதல்கள் நேர்மையாகவும் வெளிப்படைத்தன்மையுடனும் நடைபெறுவது உறுதி செய்யப்படும்.

### 5 8ஆம் ஊதியக் குழுவின் உடனடி அமலாக்கம்

ஒன்றிய அரசு அறிவித்தவுடன், அரசு ஊழியர்களுக்கு பயன் அளிக்கும் வகையில் 8ஆம் ஊதியக் குழுவை மாநிலத்தில் உடனடியாக த.வெ.க. அரசு அமல்படுத்தும்.

# கண்ணியமான வாழ்வு மற்றும் சமூகப் பாதுகாப்பு



I. காவலர் நலன்

## 1 காவலர் நலத் திட்டம்

காவலர் நலம் மற்றும் வேலை சீர்திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டு சுழற்சி முறையில் வார விடுமுறை அளிக்கப்படும். காவலர் சலவைப்படி 500 ரூபாயில் இருந்து 1000 ரூபாயாக உயர்த்தப்படும். மதுரை, கோவை, திருச்சி, திருநெல்வேலி, சேலம், வேலூர் உள்ளிட்ட மாவட்டங்களில் காவலர் நல மருத்துவமனை அமைக்கப்படும்.

## 2 காவலர் கௌரவ ஊதியம்

சட்டம் - ஒழுங்கைக் காக்கும் பணியில் துணிச்சலாகச் செயல்பட்டு உயிரிழக்கும் காவலர்களை கௌரவப்படுத்தும் வகையில், அவர்களின் குடும்பத்திற்கு 1 கோடி ரூபாய் கௌரவ ஊதியமாக வழங்கப்படும்.

## 3 காவலர்களுக்கு கண்ணியமான ஊதியம் மற்றும் நலன்

காவலர்களின் அடிப்படை மாத ஊதியம் தற்போதுள்ள ரூ.18,200-லிருந்து ரூ.25,000-ஆக உயர்த்தப்படும். மேலும், அதிக பணிச்சுமை உள்ள பிரிவுகளில் பணியாற்றும் காவலர்களுக்கு மாதந்தோறும் கூடுதல் ஊக்கத்தொகையாக (Duty Allowance) ₹1,000 வழங்கப்படும்.

## 4 வெளிப்படையான மற்றும் பொறுப்புமிக்க காவல் நிர்வாகம்

காவலர் இடமாற்றங்கள் மற்றும் பணி நியமனங்களில் அரசியல் தலையீடுகள் இல்லாத, வெளிப்படையான மற்றும் பொறுப்புமிக்க காவல் நிர்வாகம் உறுதி செய்யப்படும். அனைத்து முடிவுகளும் நிர்வாகத் தேவைகள், பணித்திறன் அளவீடுகள் மற்றும் தொழில்முறை நேர்மை ஆகியவற்றின் அடிப்படையில் மட்டுமே எடுக்கப்படும்.

## 5 ஆர்டர்லி முறை ஒழிப்பு

தமிழகத்தில் வி.ஐ.பி-க்களின் வீடுகளில் விதிமுறைகளுக்கு மாறாக ஆர்டலிகளாக காவலர்களை பணியமர்த்தும் முறை நிறுத்தப்படும்.

### 6 அனைத்து மாவட்டங்களிலும் போதுமான காவலர் குடியிருப்புகள்

இடமாற்றம் மற்றும் சிறப்புப் பணிகளில் செல்லும் காவலர்களின் குடும்பங்கள் தங்குவதற்கு வசதியாக, அனைத்து மாவட்டங்களிலும் போதுமான காவலர் குடியிருப்புகள் இருப்பது உறுதி செய்யப்படும்.

### 7 பெண் காவலர் நலன்

பெண் காவலர்கள் பந்தோபஸ்து பணிகளில் ஈடுபடுத்தப்படுவது நிறுத்தப்படும். அவர்கள் முன்களக் காவலர்களாக பணியமர்த்தப்படுவது உறுதி செய்யப்படும்.

# கண்ணியமான வாழ்வு மற்றும் சமூகப் பாதுகாப்பு

## J. ஆசிரியர் நலன்

### 1 சம வேலை! சம ஊதியம்!

தமிழ்நாடு ஆசிரியர் பாதுகாப்புச் சட்டம் கொண்டுவரப்பட்டு, தற்காலிகமாகப் பணியாற்றும் ஆசிரியர்களில் 5 வருடங்களை நிறைவு செய்திருப்பவர்கள், நிரந்தர ஆசிரியர்களாக மாற்றப்படுவார்கள். அதுபோல், தற்காலிக ஆசியர்களாகப் அவர்கள் பணியாற்றும் காலத்தில், நிரந்தர ஆசிரியர்களுக்கு இணையாக தற்காலிக ஆசிரியர்களும் "சம வேலைக்கு சம ஊதியம்" பெறுவது உறுதி செய்யப்படும்.

### 2 அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கு வெளிநாட்டுப் பயிற்சி

அரசுப் பள்ளி ஆசிரியர்களின் தகுதியை மேம்படுத்தும் விதமாக தேர்வு செய்யப்படும் தகுதிவாய்ந்த ஆசிரியர்கள் ஒவ்வொரு ஆண்டும், பள்ளிக் கல்வியில் சிறந்து விளங்கும் சிங்கப்பூர் மற்றும் பின்லாந்து நாடுகளில் பயிற்சி பெற அழைத்துச் செல்லப்படுவார்கள்.

### 3 ஆசிரியர் நியமனம்

அரசுப் பள்ளிகளில் காலியாக உள்ள அனைத்துப் பணியிடங்களும் நிரப்பப்படும்.

### 4 ஆசிரியர்களுக்கு செயற்கை நுண்ணறிவுப் பயிற்சி

அரசுப் பள்ளி ஆசிரியர்கள் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தை திறன்படக் கற்றுக் கொள்ள ஏதுவாக, செயற்கை நுண்ணறிவு மற்றும் டிஜிட்டல் கல்வி திறன் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும்.

### 5 கற்பித்தல் அல்லாத பணிகள் நீக்கம்

அரசுப் பள்ளி ஆசிரியர்களை கற்றல்-கற்பித்தல் அல்லாத பணிகளில் ஈடுபடுத்தப்படுவது முற்றிலுமாக நிறுத்தப்படும்.

# கண்ணியமான வாழ்வு மற்றும் சமூகப் பாதுகாப்பு

## K. அங்கன்வாடிப் பணியாளர்-ஆஷா பணியாளர் நலன்

### 1 ஊதிய உயர்வு

அனைத்து அங்கன்வாடி பணியாளர்களும் 'கிரேடு - டி' அரசு ஊழியர்களாக மாற்றப்பட்டு, அதன் அடிப்படையில் அவர்களுக்கு மாதம் 18000 ரூபாய் ஊதியம் வழங்கப்படும். அதுபோல், அங்கன்வாடி உதவியாளர்களுக்கும், சுகாதார விழிப்புணர்வுப் பணிகளை மேற்கொள்ளும் ஆஷா பணியாளர்களுக்கும் மாத ஊதியம் 10,000 ரூபாய் என்பது உறுதி செய்யப்படும்.

### 2 ஓய்வூதியப் பலன்

20 வருடங்கள் பணி நிறைவு செய்துள்ள அங்கன்வாடி மற்றும் ஆஷா பணியாளர்கள் 15 லட்சம் ரூபாய் ஓய்வூதியப் பலனாகப் பெறுவது உறுதி செய்யப்படும்.

# கண்ணியமான வாழ்வு மற்றும் சமூகப் பாதுகாப்பு



L. தூய்மைப் பணியாளர்கள் நலன்

## 1 மனிதக் கழிவுகளை மனிதர்களே அகற்றும் நிலை நீக்கம்

மனிதக் கழிவுகளை மனிதர்களே அகற்றும் அவலநிலை முற்றிலுமாக ஒழிக்கப்படும். நவீன இயந்திரங்கள் இந்தப் பணிகளுக்குப் பயன்படுத்தப்படும். இதை மீறும் தனியார் நிறுவனங்கள், ஒப்பந்ததாரர்கள் மீது ஜாமீனில் வெளிவர முடியாத அளவுக்கு கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

## 2 தூய்மைப் பணியாளர் பயிற்சி

மனிதக் கழிவுகளை அகற்றும் பணியில் இதுவரை ஈடுபட்டிருந்த பணியாளர்களுக்கு, மேற்சொன்ன நவீன இயந்திரங்களை இயக்கும் பயிற்சி அளிக்கப்பட்டு, ஆப்பரேட்டர்களாக நியமிக்கப்படுவார்கள். இதன்மூலம் அவர்களின் வேலை இழப்பு தடுக்கப்பட்டு, அவர்களின் கண்ணியமான வாழ்வு உறுதி செய்யப்படும்.

## 3 ஓய்வூதியத் திட்டம்

பணியில் இருந்து ஓய்வு பெறும் தூய்மைப் பணியாளர்களுக்கு மாதம் 4000 ரூபாய் ஓய்வூதியம் அளிக்கப்படும்.

# கண்ணியமான வாழ்வு மற்றும் சமூகப் பாதுகாப்பு

M. ஓட்டுநர் நலன்

## 1 ஓட்டுநர் நலவாரியம்

பதிவு செய்யப்பட்ட ஆட்டோ-டாக்ஸி ஓட்டுநர் நலன் காக்க, ஓட்டுநர் நல வாரியம் அமைக்கப்படும். அவர்களுக்கு 10 லட்சம் ரூபாய் மதிப்புள்ள ஆயுள் காப்பீடும், 10 லட்ச ரூபாய் விபத்துக் காப்பீடும் வழங்கப்படும்.

### 2 டிஜிட்டல் முறை பெர்மிட்

ஓட்டுநர்கள் தங்கள் வாகனங்களின் பெர்மிட்டை புதுப்பித்தல், லைசென்ஸ் புதுப்பித்தல், இன்சூரன்ஸ் புதுப்பித்தல் உள்ளிட்ட நடைமுறைகள் முற்றிலுமாக டிஜிட்டல் மயமாக்கப்படும்.

### 3 தமிழ் டாக்ஸி செயலி

தமிழகத்தின் முக்கிய நகரங்களில் 'தமிழ் டாக்ஸி செயலி' அறிமுகப்படுத்தப்படும். இதற்கு பிளாட்பார்ம் கமிஷன் உள்ளிட்ட எந்தவிதக் கட்டணங்களும் ஓட்டுனர்களிடம் இருந்து வசூலிக்கப்படமாட்டாது.

### 4 பசுமை மோட்டார் வாகனத் திட்டம்

சுற்றுச் சூழலைப் பாதுகாக்கும் வகையில், புதிதாக வாங்கப்படும் எலெக்ட்ரிக் ஆட்டோக்களுக்கு 50 சதவிகித மானியம் (ரூபாய் 75000 வரையில்) வழங்கப்படும். தற்போது பயன்பாட்டில் இருக்கும் ஆட்டோக்களை சி.என்.ஜி (கேஸ்) முறைக்கு மாற்றுவதற்கு 50 சதவிகிதம் (30000 ரூபாய் வரையில்) மானியம் வழங்கப்படும்.

### 5 சிறந்த ஓட்டுநர் விருது

ஓட்டுநர்களை கௌரவிக்கும் வகையில் ஓட்டுநர் தினம் அறிவிக்கப்படும். அந்த நாளில், நேர்மையாகச் செயல்படும் ஓட்டுநர்களுக்கு மாநில அரசு விருதும், 50 ஆயிரம் ரூபாய் சன்மானமும் வழங்கப்படும்.

# கண்ணியமான வாழ்வு மற்றும் சமூகப் பாதுகாப்பு

## N. துரித (Gig) பணியாளர் நலன்

### 1 தமிழ்நாடு துரிதப் பணியாளர் சட்டம்

தமிழ்நாட்டில் 15 லட்சத்திற்கும் மேற்பட்ட துரிதப் பணியாளர்கள் எந்தவிதமான பணிப் பாதுகாப்பும், மருத்துவக் காப்பீட்டு வசதியும் இல்லாமல் சுயாதீனமாகப் பணியாற்றி வருகின்றனர். இவர்களின் நலன் கருதி, தமிழ்நாடு துரிதப் பணியாளர் சட்டம் இயற்றப்பட்டு, அவர்களின் பணிப் பாதுகாப்பு உள்ளிட்ட சமூக அந்தஸ்து உறுதி செய்யப்படும்.

### 2 சமூகப் பாதுகாப்பு

பதிவு செய்யப்பட்ட அனைத்துத் துரிதப் பணியாளர்களுக்கும் 10 லட்ச ரூபாய் மதிப்புள்ள ஆயுள் காப்பீடும், 10 லட்ச ரூபாய் மதிப்புள்ள விபத்துக் காப்பீடும் வழங்கப்படும்.

### 3 இ–பைக் வாங்க வட்டியில்லாக் கடன்

ஸ்விகி, ஜொமேட்டோ போன்ற நிறுவனங்களில் பணியாற்றும் துரிதப் பணியாளர்கள் இ–பைக் வாங்குவதற்கு வட்டியில்லாக் கடன் வழங்கப்படும்.

# கண்ணியமான வாழ்வு மற்றும் சமூகப் பாதுகாப்பு

O. சாலையோர வியாபாரிகள் நலன்

### 1 சாலையோர வியாபாரம் முறைப்படுத்தல் மற்றும் வாழ்வாதாரப் பாதுகாப்புச் சட்டம்

சாலையோர வியாபாரம் முறைப்படுத்தல் மற்றும் வாழ்வாதாரப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ், ஒவ்வொரு நகர்ப்புற உள்ளாட்சிகளிலும் சாலையோர வியாபாரத்திற்கான சிறப்பு மண்டலங்கள் அமைக்கப்படும். அவர்களுக்கு முதலீட்டுக் கடனாக 50 ஆயிரம் ரூபாய் வரை வட்டியில்லாமல் கூட்டுறவு வங்கிகள் மூலம் வழங்கப்படும். மாற்று இடம் உறுதி செய்யப்பட்ட பின்பே சாலையோர வியாபாரிகள் இடம் மாற்றம் செய்யப்படுவார்கள்.

# கண்ணியமான வாழ்வு மற்றும் சமூகப் பாதுகாப்பு




P. பத்திரிகையாளர்கள் மற்றும் ஊடகப் பணியாளர்கள் நலன்

## 1 சமூகப் பாதுகாப்பு

அங்கீகாரம் பெற்ற அனைத்துப் பத்திரிகையாளர்களுக்கும் 15 லட்சம் ரூபாய் மதிப்புள்ள ஆயுள் காப்பீடு வழங்கப்படும். 5 லட்சம் ரூபாய்க்கும் குறைவாக ஆண்டு வருமானம் உள்ள ஓய்வு பெற்ற பத்திரிகையாளர் குடும்பங்களுக்கு மாதம் 15 ஆயிரம் ரூபாய் ஓய்வூதியம் வழங்கப்படும். தாலுகா அளவில் பணிபுரியும் உள்ளூர் பத்திரிகையாளர்களையும் அங்கீகாரம் பெற்ற பத்திரிகையாளர்களாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

# கண்ணியமான வாழ்வு மற்றும் சமூகப் பாதுகாப்பு

Q. வழக்கறிஞர் மற்றும் சட்ட ஆலோசகர்கள் நலன்

## 1 தமிழ்நாடு வழக்கறிஞர் நல நிதி

ஆண்டு வருமானம் 5 லட்சத்திற்கும் குறைவாக உள்ள, 20 வருட பயிற்சி அனுபவம் உள்ள வழக்கறிஞர்களுக்கு ஓய்வூதியமாக மாதம் 3 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும். பதிவு செய்யப்பட்ட அனைத்து வழக்கறிஞர்களுக்கும் ஆயுள் காப்பீடு வழங்கப்படும்.

## 2 சட்ட ஆலோசகர்கள் கௌரவ நிதி

கிராமப்புற மக்களுக்கு கட்டணமில்லா சட்ட ஆலோசனைகள் மற்றும் சட்ட உதவிகள் செய்யும் சட்ட ஆலோசகர்களை கௌரவிக்கும் விதமாக மாதம் 5000 ரூபாய் கௌரவ நிதி வழங்கப்படும்.

# கண்ணியமான வாழ்வு மற்றும் சமூகப் பாதுகாப்பு



R. கட்டுமானத் தொழிலாளர் நலன்

## 1 சமூகப் பாதுகாப்பு

பதிவு செய்யப்பட்ட கட்டுமானத் தொழிலாளர்களுக்கு 5 லட்சம் ரூபாய் மதிப்புள்ள விபத்துக் காப்பீடு வழங்கப்படும்.

## 2 கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தை சீரமைத்தல்

கட்டுமானத் தொழிலாளர் நலனைக் கருத்தில் கொண்டு அமைக்கப்பட்ட நலவாரியத்தில் உள்ள குறைகள் நீக்கப்பட்டு, முழுமையாகச் செயல்படும்படி சீரமைக்கப்படும்.

# கண்ணியமான வாழ்வு மற்றும் சமூகப் பாதுகாப்பு

S. பனையேறும் தொழிலாளர்கள் மற்றும் உப்பளத் தொழிலாளர்கள் நலன்

## 1 பனைமரப் பாதுகாப்பு

தமிழ்நாடு அரசின் மாநில மரமாகவும், தமிழர் வாழ்வியல் அடையாளங்களில் ஒன்றாகவும் திகழும் பனைமரம் அருகிக்கொண்டே வருகிறது. அதை மீட்டெடுக்கும் வகையில், கீழ்க்கண்ட திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

- பனைமரம் பாதுகாக்கப்பட்ட மரமாக அறிவிக்கப்படும். மேலும், தமிழ்நாடு பனைமர வளர்ச்சிக் கழகம் அமைக்கப்பட்டு 200 கோடி ரூபாய் அதற்கு நிதி ஒதுக்கப்படும். அந்த நிதியைப் பயன்படுத்தி பதனீர் பதப்படுத்துதல், பனை வெல்லம் உற்பத்தி, மதிப்புக்கூட்டப்பட்ட பனைப்பொருட்கள் ஏற்றுமதி ஆகியவை திட்டமிடப்படும்.
- பனைப் பொருள் உற்பத்தி இல்லாத பருவங்களில் பனை சார்ந்த தொழில்களில் ஈடுபட்டுவரும் தொழிலாளர்களுக்கு மாதம் 3 ஆயிரம் ரூபாய் வாழ்வாதார உதவித் தொகையாக வழங்கப்படும்.

## 2 உப்பளத் தொழிலாளர்களுக்கு மழைக்கால நிவாரணம்

உப்பளத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் மழைக்கால நிவாரணத் தொகை 7 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படும்.


பொருள்

பொருள்

03



# மகளிர் நலன்

A. மகளிர் நலன் மற்றும் பாதுகாப்பு அமைப்பு

## 1 மகளிர் நலன் மற்றும் பாதுகாப்பு அமைப்பு

முதலமைச்சரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் வயது வந்த பெண்கள், பெண் குழந்தைகளுக்கான பாதுகாப்பு மற்றும் நலனுக்கான தனிப்பிரிவு அமைக்கப்படும். இந்தப் பிரிவின் கீழ் பெண்கள் மற்றும் பெண் குழந்தைகளுக்கான நலத்திட்டங்கள், பாதுகாப்பு அம்சங்கள் உள்ளிட்ட அனைத்தும் கொண்டுவரப்பட்டு, கண்காணித்து முறைப்படுத்தப்படும்.

# மகளிர் நலன்

B. மகளிர் பொருளாதாரப் பாதுகாப்பு

## 1 மதிப்புமிகு மகளிர் திட்டம்

ஒவ்வொரு குடும்பத்தலைவிக்கும் அவர்கள் 60 வயதை எட்டும்வரையில், அவர்களுடைய வங்கிக் கணக்கில் ஒவ்வொரு மாதமும் 2500 ரூபாய் வரவு வைக்கப்படும். இதன்மூலம், குடும்பத்தலைவிகள் அவர்களுடைய அடிப்படைச் செலவுகளுக்கு மற்றவர்களை சார்ந்திருக்கும் நிலை மாறி அவர்களின் பொருளாதாரச் சுதந்திரம் காக்கப்படும்.

## 2 அன்னபூரணி சூப்பர் சிக்ஸ்

ஒவ்வொரு குடும்பத்திற்கும் வருடத்திற்கு 6 எரிவாயு சிலிண்டர்கள் வாங்குவதற்கான தொகை அவர்களின் வங்கிக் கணக்கில் நேரடியாகச் செலுத்தப்படும்.

## 3 வெற்றிப் பயணம்

தற்போது மகளிர் கட்டணமில்லாப் பயணம் குறிப்பிட்ட அரசுப் பேருந்துகளில் மட்டுமே நடைமுறையில் உள்ளது. இந்தநிலையை மாற்றி, மாநிலம் முழுவதும் இயங்கும் நகர, மாநகர, மாவட்டங்களுக்கிடையிலான அனைத்து அரசுப் பேருந்துகளிலும் மகளிர் கட்டணமில்லாமல் பயணிக்கும் வெற்றிப் பயணம் திட்டம் செயல்படுத்தப்படும்.

## 4 அண்ணன் சீர் திட்டம்

ஆண்டு வருமானம் 5 லட்சத்திற்கும் குறைவாக உள்ள குடும்பங்களில் நடைபெறும் திருமணங்களில் மணப்பெண்ணுக்கு 8 கிராம்(சவரன்) தங்கமும், பட்டுச் சேலையும் வழங்கப்படும்.

## 5 தாய்மாமன் தங்க மோதிரம் திட்டம்

தமிழ்நாட்டில் அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரு தங்க மோதிரம் மற்றும் மென்மையான துணி, டயப்பர் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய தாய்மாமன் சீர் பெட்டகம் வழங்கப்படும்.

## 6 காமராஜர் கல்வி உறுதித் திட்டம்

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் முதலாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களின் தாயார்/காப்பாளர் வங்கிக்கணக்கில் ஆண்டுக்கு 15 ஆயிரம் ரூபாய் இரண்டு தவணைகளில் வரவு வைக்கப்படும். இதன்மூலம், பொருளாதாரக் காரணங்களால் மாணவர்கள் பாதியில் படிப்பைக் கைவிடும் நிலை தடுக்கப்படும்.

## 7 கைம்பெண் மற்றும் ஆதரவற்ற பெண்கள் உதவித்தொகை

வறுமையில் வாடும் கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற பெண்களுக்கு மாத உதவித்தொகையாக 3 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும்.

## 8 சிங்கப்பெண்கள் மேம்பாட்டுத் திட்டம்

- மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 5 லட்சம் ரூபாய் வரை வட்டியில்லாக் கடன் வழங்கப்படும்
- சிறு-குறு தொழில் முனைவோராக மாற முனையும் மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு திருப்பிச் செலுத்தத் தேவையற்ற வகையில் 5 லட்சம் ரூபாய் முதலீட்டு மானியமாக வழங்கப்படும்.
- தொடர்ச்சியாக 5 ஆண்டுகள் சிறப்பாகச் செயல்பட்டுவரும் மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு 1 லட்ச ரூபாய் ஊக்கத் தொகை வழங்கப்படும்.
- மகளிர் சுய உதவிக்குழுக்கள் தயாரிக்கும் பொருட்களை சர்வதேச அளவில் சந்தைப்படுத்தும் வகையில் இ-காமர்ஸ் பிளாட்பார்ம் உருவாக்கப்படும்.

## 9 மகளிர் மகாசக்தி

அரசு நிறுவனங்கள் மற்றும் அரசு சேவை நிறுவனங்களுக்குத் தேவையான உணவுப் பொருட்கள், லினன் துணி வகைகள், பள்ளிகளுக்குத் தேவையான பொருட்கள் தற்போது பல தனியார் நிறுவனங்களிடம் இருந்து கொள்முதல் செய்யப்படுகிறது. இந்தநிலையை மாற்றி, அப்படிக் கொள்முதல் செய்யப்படும் பொருட்களில் 40 சதவிகிதம் மகளிர் சுய உதவிக்குழுக்கள் மற்றும் அவர்களால் நடத்தப்படும் சிறு-குறு நிறுவனங்களிடம் இருந்து கொள்முதல் செய்யப்படும். இதன்மூலம், ஆயிரக் கணக்கான பெண் தொழில் முனைவோருக்கு நிலையான வருமானம் உறுதி செய்யப்படும்.

## 10 சிறப்புத் தொழிற்பேட்டைகள்

சென்னை, கோவை, மதுரை, திருச்சி, சேலம், வேலூர், திருப்பூர், தஞ்சாவூர், தூத்துக்குடி, திருநெல்வேலி ஆகிய 10 நகரங்களில் பெண்களின் தேவைகளை முழுமையாகப் பூர்த்தி செய்யும் கட்டமைப்புகளுடன் கூடிய சிறப்பு தொழிற்பேட்டைகள் அமைக்கப்படும்.

பொருள்

03



# மகளிர் நலன்

C. சமரசமற்ற பெண்கள் பாதுகாப்பு

## 1 ராணி வேலுநாச்சியார் படை

பெண்களின் பாதுகாப்பை மேம்படுத்தும் வகையில், தமிழகத்தில் ராணி வேலுநாச்சியாரின் பெயரில் செயல்படும் 500 கண்காணிக்கும் குழுக்கள் அமைக்கப்படும். முழுக்க பெண்களை மட்டுமே வைத்து உருவாக்கப்படும் இந்தக் குழுக்கள் சாதாரண உடையில், உடலில் பொருத்தப்பட்ட கேமராக்களோடு கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்வார்கள்.

## 2 செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தில் செயல்படும் ஒருங்கிணைந்த கண்காணிப்பு மையம்

பெண்கள் பாதுகாப்பிற்காக தற்போது நடைமுறையில் உள்ள காவலன் செயலி மேம்படுத்தப்பட்டு, தமிழகம் முழுவதும் இயங்கும் பேருந்துகள், ஷேர் ஆட்டோக்கள் உள்ளிட்ட அனைத்து வாகனங்களிலும் 'ஸ்மார்ட் பேனிக் பட்டன்' அமைக்கப்படும். இது செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்துடன் இணைக்கப்பட்டு 24 மணிநேரமும் கண்காணிக்கப்படும். முக்கியமான பொது இடங்களில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்துடன் இணைக்கப்பட்ட சி.சி.டி.வி கேமராக்கள் பொருத்தப்படும். ஆள்நடமாட்டம் குறைவாக உள்ள, பாதுகாப்பற்ற இடங்கள் அனைத்துப் பகுதிகளும் அடையாளம் காணப்பட்டு, உரிய பாதுகாப்பு அம்சங்கள் அந்தப் பகுதிகளில் ஏற்படுத்தப்படும்.

## 3 பெண்களுக்கான சிறப்பு விரைவு நீதிமன்றங்கள்

பெண்களுக்கு எதிரான குற்றங்களை விசாரித்து விரைவில் நீதி வழங்க சிறப்பு விரைவு நீதிமன்றங்கள் அமைக்கப்படும்.

## 4 பணிபுரியும் மகளிர்–மாணவிகளுக்கான விடுதிகள்

தமிழகம் முழுவதும் முக்கிய நகரங்களில் பணிபுரியும் மகளிர் – மாணவிகள் தங்குவதற்கு உரிய பாதுகாப்பு மற்றும் நவீன வசதிகளுடன் கூடிய விடுதிகள் அமைக்கப்படும். இதில் அதிகபட்ச மாதக் கட்டணமாக 2500 ரூபாய் மட்டுமே வசூலிக்கப்படும்.

# மகளிர் நலன்

D. மகளிர் சுகாதாரம் மற்றும் ஆரோக்கியம்



## 1 கர்ப்பிணிப் பெண்கள் உதவித் தொகை

- கர்ப்பிணிப் பெண்கள், அவர்களுக்குத் தேவையான ஊட்டச்சத்து உணவுகள் வாங்குவதற்கும், மாதாந்திர மருத்துவப் பரிசோதனை செய்வது மற்றும் அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள உதவும் வகையில் 25 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும்.
- மாநிலம் முழுவதும் 'தாய் கேர்' என்ற பெயரில் கர்ப்பிணிப் பெண்களுக்கான சேவை மற்றும் உதவி மையங்கள் அமைக்கப்படும். இந்த மையங்களில் கர்ப்பிணிப் பெண்கள் அவர்களுடைய பிரசவ நாள் நெருங்கும் வேளையில் தங்கியிருந்து பயன் பெறலாம். இந்த மையங்களில் கர்ப்பிணிப் பெண்களுக்கு கட்டணமில்லாமல் உணவு மற்றும் மருத்துவ உதவிகள், தொடர் மருத்துவக் கண்காணிப்பு உள்ளிட்ட சேவைகள் வழங்கப்படும்.

## 2 விலையில்லா சானிட்டரி நாப்கின்

ரேசன் கடைகள், பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் பெண்களுக்கான விலையில்லா சானிட்டரி நாப்கின்கள் வழங்கப்படும். ஒவ்வொரு ஊர்களிலும் முக்கியமான இடங்களில் சானிட்டரி நாப்கின் வெண்டிங் மெஷின்கள் அமைக்கப்படும். அனைத்து அரசுப் பள்ளி கழிப்பறைகளிலும் பயன்படுத்தப்பட்ட சானிட்டரி நாப்கின்களை முறையாக அப்புறப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும்.

## 3 கட்டணமில்லா கர்ப்பப்பை வாய் புற்றுநோய் பரிசோதனை மற்றும் தடுப்பூசி

9 முதல் 14 வயதுள்ள சிறுமிகள் அனைவருக்கும் கட்டணமில்லாமல் ஹெச்.பி.வி (HPV) தடுப்பூசிகள் போடப்படும். மேலும், தமிழகம் முழுவதும் உள்ள ஆரம்ப சுகாதார மையங்களில், 30 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் அனைவருக்கும் கட்டணமில்லாத கர்ப்பப்பை வாய் புற்றுநோய் பரிசோதனை செய்யப்படும்.

## 4 பழங்குடியினப் பெண்களுக்கு சோலார் அடுப்புகள்:

பழங்குடியினர் மற்றும் மலைவாழ் பெண்களுக்கு விறகடுப்பு பயன்படுத்துவதில் உள்ள சிரமங்களைக் குறைக்கும் வகையில், கட்டணமில்லா சோலார் அடுப்புகள் வழங்கப்படும்.



# இளைஞர் நலன்

A.வேலைவாய்ப்பு மற்றும் திறன் மேம்பாடு

## 1 இளைஞர் வெற்றி நிதி

வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து காத்திருக்கும் வேலையில்லாப் பட்டதாரிகளுக்கு மாதம் 4 ஆயிரம் ரூபாய் உதவித் தொகை வழங்கப்படும். 12-ம் வகுப்பு, ஐ.டி.ஐ உள்ளிட்ட டிப்ளமோ படிப்புகள் முடித்துவிட்டு வேலைக்காகக் காத்திருக்கும் இளைஞர்களுக்கு மாதம் 2500 ரூபாய் உதவித்தொகை வழங்கப்படும். இந்த உதவித் தொகை பதிவு செய்ததில் இருந்து முதல் இரண்டு வருடங்களுக்கு வழங்கப்படும். இந்த உதவித் தொகை அவர்களின் திறன் மேம்பாட்டிற்கு உதவியாக இருக்கும்.

## 2 வேலைவாய்ப்பில் வெளிப்படைத்தன்மை

அரசுப் பணிகளுக்கு செய்யப்படும் நியமனங்கள் நேர்மையான முறையிலும் வெளிப்படைத்தன்மையுடனும் நடைபெறுவதை உறுதி செய்யும் வகையில், சிறப்புச் சட்டம் இயற்றப்படும். இச்சட்டத்தின் மூலம், காலிப்பணியிட அறிவிப்பு முதல் பணி நியமனங்கள் வரை உள்ள அனைத்து நடைமுறைகளும் ஓராண்டிற்குள் முடிக்கப்படும்

## 3 காலிப்பணியிடங்களை நிரப்புதல்

அரசுத் துறைகளில் உள்ள அனைத்துக் காலிப்பணியிடங்களும் விரைந்து நிரப்பப்படும்.

## 4 கல்வி உத்தரவாதம் திட்டம்

பட்டப்படிப்பு(UG) முதல் ஆராய்ச்சிப் படிப்பு (PhD) வரை படிக்கும் அனைத்து மாணவர்களுக்கும் 20 லட்சம் ரூபாய் வரை பிணையில்லா (Collateral Free) கடன் வழங்கப்படும். இதன் மூலம், மாணவர்கள் விரும்பிய படிப்பை அவர்கள் விரும்பிய கல்லூரிகளில் எந்தவித பொருளாதாரத் தடைகளும் இல்லாமல் படிப்பது உறுதி செய்யப்படும்.

## 5 வெற்றித் தொழிற் பயிற்சி

இளைஞர்கள் திறனை மேம்படுத்தும்வகையில் அரசு மற்றும் தனியார் தொழில் நிறுவனங்களுடன் இணைந்து இன்டர்ன்ஷிப் பயிற்சி வழங்கப்படும். ஒவ்வொரு ஆண்டும் 5 லட்சம் இளைஞர்கள் இந்த முயற்சியினால் பயன்பெறுவது உறுதி செய்யப்படும். இந்தப் பயிற்சிக் காலத்தில், பட்டதாரிகளுக்கு மாதம் 10 ஆயிரம் ரூபாயும், தொழிற்கல்வி பயின்றவர்களுக்கு மாதம் 8000 ரூபாயும் வழங்கப்படும்.

- நிரந்தர வேலைவாய்ப்பில்லாத குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர்களுக்கு இந்தத் திட்டத்தில் முன்னுரிமை அளிக்கப்படும்.

## 6 வெற்றி தொழில்முனைவோர் திட்டம்

தொழில் தொடங்க விரும்பும் இளைஞர்களுக்கு 25 லட்சம் ரூபாய் வரை அரசு சார்பில் பிணையில்லா (Collateral Free) கடன் வழங்கப்படும். இதன்மூலம், ஏராளமான இளைஞர்களின் தொழில்முனைவோராகும் கனவு நனவாகும்.

## 7 நம்ம ஊரில் நம்ம வேலைவாய்ப்பு திட்டம்

தமிழ்நாட்டு இளைஞர்களை தங்கள் நிறுவனங்களில் 75 சதவிகிதம் அளவுக்கு பணியமர்த்தும் தனியார் நிறுவனங்களுக்கு மாநில ஜி.எஸ்.டி வரியில் 2.5% மானியமும், மின் கட்டணத்தில் 5% மானியமும், அரசு கொள்முதலில் முன்னுரிமையும் வழங்கப்படும். இத்திட்டத்தின் மூலம், தமிழ்நாட்டு இளைஞர்கள் பெருமளவு வேலைவாய்ப்புப் பெறுவது உறுதி செய்யப்படும்.

## 8 முதலமைச்சர் மக்கள் சேவை நண்பர் திட்டம்

முதலமைச்சர் மக்கள் சேவை நண்பர் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு கிராமப் பஞ்சாயத்து மற்றும் நகர உள்ளாட்சிகளில் 5 லட்சம் இளைஞர்கள் நிரந்தரப் பணியாளர்களாக நியமிக்கப்பட்டு அவர்களுக்கு மாத ஊதியமாக 18,000 ரூபாய் வழங்கப்படும். இந்தப் பணியாளர்கள் மாநில அரசின் சேவை மற்றும் திட்டங்கள் அனைத்து வீடுகளுக்கும் சென்று சேர்வதை உறுதி செய்வார்கள். அரசுக்கும் இளைஞர்களுக்கும் இடையிலான இந்த கூட்டு முயற்சி அரசு நிர்வாகம் சிறப்பாக செயல்பட உதவும்.

## 9 டிஜிட்டல் படைப்பாளிகள் ஊக்கத் திட்டம்

டிஜிட்டல் தளங்களில் தமிழ் மண்ணின் வரலாறு, கலை, பண்பாடு, மொழி, உணவு, இசை உள்ளிட்டவற்றின் பெருமைகளை உலகளவில் கொண்டு செல்லும் படைப்பாளிகளை ஊக்கப்படுத்தும் விதமாக கீழ்க்கண்ட திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

- ஒன்றரை லட்சம் படைப்பாளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களின் மண் சார்ந்த படைப்புகளின் தயாரிப்புச் செலவுகளுக்கு நிதியுதவி செய்யப்படும்.
- தமிழகம் முழுக்க 500 படைப்புத் திறன் பயிற்சி மையங்கள் அமைக்கப்படும். இந்த மையங்களில் வீடியோ புரோடக்ஷன், டிஜிட்டல் மார்க்கெட்டிங், கன்டன்ட் ஸ்ட்ராடிஜி உள்ளிட்டவற்றுக்குப் பயிற்சிகள் வழங்கப்படும்.

## 10 தமிழ்நாடு இளைஞர் ஆலோசனைக் குழு

தமிழ்நாடு அரசு கொள்கை மற்றும் நிர்வாக முடிவுகளில் இளைஞர்களின் பங்களிப்பை உறுதி செய்யும் வகையில், தமிழ்நாடு இளைஞர் ஆலோசனைக் குழு உருவாக்கப்படும். இந்தக் குழு நேரடியாக முதலமைச்சருக்கும் மற்ற முக்கிய அரசு உயரதிகாரிகளுக்கும் தங்கள் கருத்து மற்றும் ஆலோசனைகளைத் தெரியப்படுத்தும். இந்த குழு, அரசு நிர்வாகத்திற்கும் இளைஞர்களின் சிந்தனைக்குமான இணைப்புப் பாலமாகத் திகழும்.

## 11 மைக்ரோ டெக் பார்க் (குறு தொழிற்பூங்காக்கள்)

பொள்ளாச்சி, கரூர், கோவில்பட்டி, கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, வேலூர், ஈரோடு, திண்டுக்கல், நாமக்கல், சிவகாசி உள்ளிட்ட 25 நகரங்களில் மைக்ரோ டெக் பார்க்குகள் அமைக்கப்படும். ஒவ்வொரு மைக்ரோ டெக் பார்க்கும் அதிவேக இணைய வசதி, நவீன ஆலோசனை அரங்கு, கோ-வொர்க்கிங் ஸ்பேஸ் உள்ளிட்ட கட்டமைப்பு வசதிகளுடன் அமைக்கப்படும். அந்தந்த நகரத்தைச் சார்ந்த இளைஞர்கள் சொந்த ஊரில் இருந்தபடியே(Work from Hometown) உலகளவில் பணியாற்றும் வாய்ப்பை இந்த மைக்ரோ டெக் பார்க்குகள் உருவாக்கும்.

# இளைஞர் நலன்

B. விளையாட்டில் தலைநிமிரும் தமிழ்நாடு

## 1 தமிழ்நாடு விளையாட்டுப் பல்கலைக்கழகம்

தமிழக விளையாட்டு வீரர்களை ஒலிம்பிக் பதக்க வீரர்களாக மாற்றும் அளவுக்கு, திறன் மிகுந்த விளையாட்டுப் பயிற்சிகள் வழங்கவும், விளையாட்டு வீரர்களுக்கான மருத்துவம், விளையாட்டுகளுக்கான தொழில்நுட்பம் மற்றும் சிறந்த நிர்வாகக் கட்டமைப்புகளுடன் கூடிய தமிழ்நாடு விளையாட்டுப் பல்கலைக் கழகம் அமைக்கப்படும். வளர்ந்த நாடுகளில் விளையாட்டு வீரர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சிகளுக்கு இணையான பயிற்சிகளை வழங்கும் அளவுக்கு விளையாட்டு திறன் மையங்கள் (Sports Excellence Centres) அமைக்கப்படும்.

## 2 தமிழ்நாடு வெற்றி ஒலிம்பிக் திட்டம்

இந்தியாவின் விளையாட்டுத் தலைநகராக தமிழ்நாட்டை மாற்றுவதற்காக தமிழ்நாடு ஒலிம்பிக் திறன் மேம்பாட்டுத் திட்டம் அறிமுகப்படுத்தப்படும். இதன்மூலம், தமிழகம் முழுவதும் உள்ள திறன் வாய்ந்த வீரர்கள் அடையாளம் காணப்பட்டு அவர்கள் ஒலிம்பிக் போட்டிகளில் வெற்றி பெறும் அளவுக்குச் சர்வதேச தரத்திலான பயிற்சிகள் வழங்கப்படும். தமிழகத்தில் இருந்து ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்கத் தகுதி பெறும் தனிநபர் விளையாட்டு வீரர்களுக்கு 25 லட்சம் ரூபாயும், குழு விளையாட்டு வீரர்களுக்கு 10 லட்சம் ரூபாயும் உதவித் தொகையாக வழங்கப்படும். அவர்களில், ஒலிம்பிக் போட்டிகளில் தங்கப் பதக்கம் வெல்லும் தமிழக வீரர்களுக்கு 6 கோடி ரூபாய், வெள்ளிப் பதக்கம் வெல்பவர்களுக்கு 4 கோடி ரூபாய், வெண்கலப் பதக்கம் வெல்பவர்களுக்கு 3 கோடி ரூபாய் ரொக்கப்பரிசாக வழங்கப்படும். அதுபோல், தேசிய-சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் சாதிக்கும் 500 வீரர்களுக்கு நிதியுதவி வழங்கப்படும்.

## 3 உலகத்தரத்திலான விளையாட்டு உள்கட்டமைப்புகள்

தமிழகத்தின் 10 மண்டலத் தலைநகரங்களில், உலகத் தரத்திலான பல்நோக்கு விளையாட்டு அரங்கம் (Multi-Sport Stadium), ஸ்போர்ட்ஸ் காம்ப்ளக்ஸ்கள், ஜிம்கானா, விளையாட்டு அகாடமிக்கள், பயிற்சி மையங்கள் அமைக்கப்படும்.

## 4 இளம் வீரர்கள் கண்டறிதல் திட்டம்

விளையாட்டில் ஆர்வமும், திறமையும் உள்ள 500 விளையாட்டு வீரர்கள் பள்ளிகளில் இருந்தே அடையாளம் காணப்பட்டு தேர்வு செய்யப்படுவார்கள். இப்படி தேர்வு செய்யப்படும் 8 முதல் 14 வயது வரையிலான அந்த வீரர்களுக்கு ஒலிம்பிக் போட்டிகளில் வெல்லும் அளவிற்கு உலகத்தரத்திலான பயிற்சிகள் வழங்கப்படும்.

## 5 பாராலிம்பிக்ஸ் திறன் மேம்பாட்டுத் திட்டம்

தகுதி வாய்ந்த பாராலிம்பிக்ஸ் வீரர்கள் அடையாளம் காணப்பட்டு அவர்களுக்கு உலகத் தரத்திலான பயிற்சிகளும், நிதியுதவியும் வழங்கப்படும்.

மதுரை, சேலம், திருச்சியில் உலகத்தரத்திலான பாராலிம்பிக்ஸ் பயிற்சி மையங்கள் அமைக்கப்படும்.

## 6 கடல்சார் விளையாட்டுகள்

தமிழகத்தில் நீர் விளையாட்டுக்களுக்கென (Surfing, Kayaking, Wind-Surfing, Snorkelling,Scuba Diving) 10 கடல்சார் விளையாட்டு மையங்கள் அமைக்கப்படும். இந்த விளையாட்டு மையங்களில் பயிற்சி பெற கடலோர மீனவ இளைஞர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

# விவசாயிகள், விவசாயக் கூலித் தொழிலாளர்கள் மற்றும் மீனவர் நலன்

A. விவசாயிகள் நலன்



## 1 விவசாயக் கடன் தள்ளுபடி

5 ஏக்கருக்குக் குறைவாக நிலம் வைத்துள்ள விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளில் வாங்கியுள்ள பயிர்க்கடன்கள் முற்றிலுமாகத் தள்ளுபடி செய்யப்படும். 5 ஏக்கருக்கு மேல் நிலம் வைத்துள்ள விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளில் வாங்கியுள்ள பயிர்க்கடன்களில் 50 சதவிகிதம் தள்ளுபடி செய்யப்படும்.

## 2 வெற்றி விவசாயி உரிமைத் தொகை

சொந்தமாக விவசாய நிலம் வைத்துள்ள ஒவ்வொரு விவசாயிகளின் குடும்பத்திற்கும் விதைப்புக் கால நிதியுதவியாக ஆண்டுக்கு 15 ஆயிரம் ரூபாய் இரண்டு தவணைகளில்(ஜூலை - ஆகஸ்ட் பருவம், ஜனவரி-பிப்ரவரி பருவம்) வழங்கப்படும். விதைப்புக்கால செலவுகளை சமாளிப்பதற்கு இந்த நிதி உதவியாக இருக்கும்.

## 3 உழவர் தோழர் திட்டம்

குத்தகை விவசாயிகள் மற்றும் விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்கு, உழவர் உரிமம் அட்டை வழங்கப்படும் முறை அறிமுகப்படுத்தப்படும். இந்த உரிம அட்டை வைத்திருக்கும் உழவர்களுக்கு ஆண்டுக்கு 10 ஆயிரம் ரூபாய் உதவித் தொகை நேரடியாக அவர்களின் வங்கிக் கணக்கில் செலுத்தப்படும்.

## 4 நெல்–கரும்புக்கு குறைந்தபட்ச ஆதாரவிலை உறுதியளிப்பு

நெல்லுக்கு குவிண்டாலுக்கு 3500 ரூபாயும், கரும்பு டன் ஒன்றுக்கு 4500 ரூபாயும் குறைந்த பட்ச ஆதார விலையாக வழங்கப்படும். மஞ்சள், கரும்பு, நெல் மற்றும் கொப்பரைத் தேங்காய் உள்ளிட்டவற்றின் சந்தை விலையில் சரிவு ஏற்படும்போது, அந்த இழப்பையும் அரசு ஏற்றுக் கொள்ளும். ஆதாரவிலைத் தொகை மற்றும் சந்தை இழப்பீட்டுத் தொகை உள்ளிட்ட இந்த நிதி அனைத்தும் விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நேடியாக செலுத்தப்படும்.

## 5 விவசாயிகள் வருமான உயர்வு ஆணையம்

விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கும் ஆலோசனைகள், எளிமையாகச் சந்தைப்படுத்தும் வழிமுறைகள், விலை நிர்ணயம் தொடர்பான வழிகாட்டுதல்கள் ஆகியவற்றை கண்டறிய விவசாயிகள் வருமான உயர்வு ஆணையம் அமைக்கப்படும். இது ஆண்டுதோறும் அரசுக்கு மேற்கண்டவை குறித்துப் பரிந்துரைகள் வழங்கும்.

## 6 100% சதவிகித பயிர்க் காப்பீடு

விவசாயிகளுக்குப் பயன்படும் வகையில், தமிழகம் முழுவதும் கூடுதல் வேளாண்-வானிலை அறிவியல் மையங்கள் (Agro-meteorological) அமைக்கப்படும். இதன்மூலம், மழைக்காலங்களில் பாதிக்கப்படும் பயிர்களின் இழப்பு துல்லியமாக கணக்கிடப்படும். அதன் அடிப்படையில் விவசாயிகளுக்கு இழப்பீடு விரைவாக வழங்கப்படும். வேளாண்மை நடைபெறும் நிலம் 100 சதவிகிதம் பயிர்க் காப்பீட்டில் கொண்டுவரப்படும்.

## 7 கொப்பரைத் தேங்காய் விவசாயிகள் நலன்

தேங்காய் விலையில் ஏற்படும் மாற்றங்கள் தென்னை விவசாயிகளைப் பாதிக்காதவகையில், கொப்பரைத் தேங்காய் ஆதார நிதி ஒதுக்கப்படும். கோவை, தஞ்சை, பொள்ளாச்சி, காங்கேயம் போன்ற இடங்களில் தேங்காய் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தின் மூலம் கொப்பரைத் தேங்காய்கள் கொள்முதல் செய்யப்படும். அவற்றில் இருந்து அரசு அரவை ஆலைகள் மூலம் எண்ணெய் எடுக்கப்பட்டு பொது விநியோகத் திட்டத்தின் கீழ் விற்பனை செய்யப்படும். பச்சைத் தேங்காய்க்கு குறைந்தபட்ச ஆதரவு விலையை (MSP) அறிமுகப்படுத்தவும், அதே நேரத்தில் கொப்பரைத் தேங்காய் (மிலிங் மற்றும் பால் கொப்பரை ஆகிய இரு வகைகளுக்கும்) விலை ஏற்ற இறக்கங்களில் இருந்து விவசாயிகளைப் பாதுகாக்கவும், அவர்களுக்கு லாபகரமான வருவாயை உறுதி செய்யவும், அதன் ஆதரவு விலையை உயர்த்த வேண்டும் என ஒன்றிய அரசிடம் வலுவாக வலியுறுத்தப்படும். மேலும், விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்க நீரா, தேங்காய் எண்ணெய் போன்ற மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களை உருவாக்க 'தமிழ்நாடு தேங்காய் பதப்படுத்தும் கழகம்' (Tamil Nadu Coconut Processing Corporation) உருவாக்கப்படும்.

## 8 தமிழ்நாடு இயற்கை விவசாயத் திட்டம் (Organic Farming)

தமிழ்நாட்டை இயற்கை விவசாயத்தில் முன்னணி மாநிலமாக மாற்ற கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

- செயற்கை உர விவசாயத்தில் இருந்து இயற்கை விவசாயத்திற்கு மாறும் விவசாயிகளுக்கு முதல் மூன்று வருடங்களுக்கு மாதம் இரண்டாயிரம் ரூபாய் உதவித் தொகை வழங்கப்படும்.
- இயற்கை முறையில் விளைவிக்கப்படும் பாரம்பரிய அரிசி வகைகள், மசாலாப் பொருட்கள், தேங்காய், மஞ்சள், வாழை ஆகியவற்றை சந்தைப்படுத்த புவிசார் குறியீட்டை அடிப்படையாகக் கொண்ட தமிழ் இயல் என்னும் புதிய பிராண்ட் உருவாக்கப்படும்.
- தஞ்சையில் நம்மாழ்வார் இயற்கை வேளாண் கல்லூரி அமைக்கப்படும்.

## 9 உழவர் உற்பத்தியாளர் அமைப்பு

உழவர் உற்பத்தியாளர் அமைப்பில் இணையும் விவசாயிகளை ஊக்கப்படுத்தும் விதமாக 5000 ரூபாய் ஊக்கத்தொகை வழங்கப்படும்.

## 10 விவசாயிகளின் குழந்தைகளுக்கு இலவச உயர்கல்வி

இரண்டு ஏக்கருக்கும் குறைவாக விவசாய நிலம் வைத்துள்ள விவசாயிகளின் குழந்தைகளுக்கு கட்டணமில்லா உயர்கல்வி வழங்கப்படும்.

## 11 கொள்முதல் நிலையங்களில் விளைபொருள் வீணாவதைக் குறைத்தல்

நெல் மற்றும் கொள்முதல் செய்யப்படும் பிற விளைபொருட்கள் காய்கறிகள், உணவு தானியங்கள் மற்றும் நறுமணப் பொருட்கள் உட்பட அனைத்து கொள்முதல் நிலையங்கள், தொகுப்பு மையங்கள் (Cluster hubs) மற்றும் சேமிப்புக் கொள்கலன்களில் (Silos) முறையாகக் கையாளப்பட்டு பாதுகாக்கப்படும். இதன் மூலம் அறுவடைக்குப் பிந்தைய இழப்புகள் குறைக்கப்படும். துல்லியமான எடை போடுதல் மற்றும் சேமிப்புத் தரவுகள் முறையாகப் பராமரிக்கப்படும். அதேபோல கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்வதற்கோ, மூட்டை ஏற்றி, இறக்கவோ ஒருபைசா கமிஷன் வாங்காமல் பார்த்துக்கொள்ளப்படும். அப்படி கமிஷன் வாங்குவது யாராக இருந்தாலும் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

# விவசாயிகள், விவசாயக் கூலித் தொழிலாளர்கள் மற்றும் மீனவர் நலன்



B.மீனவர் நலன்

## 1 மீனவர் பாதுகாப்பு உரிமைத் தொகை

மீன்பிடித் தடைக்கால நிவாரணத் தொகை 20 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படும். பாரம்பரிய முறையில் மீன்பிடித் தொழில் செய்யும் மீனவர்களுக்கு வடகிழக்குப் பருவ மழை நிவாரணத் தொகையாக 7000 ரூபாய் வழங்கப்படும்.

## 2 மீனவர் விபத்துக் காப்பீடு

ஒவ்வொரு பதிவு செய்யப்பட்ட மீனவருக்கும் 25 லட்சம் ரூபாய் மதிப்புள்ள விபத்துக் காப்பீடு வழங்கப்படும். மேலும், கடலில் விபத்துகளில் சிக்கி உயிருக்குப் போராடும் மீனவர்களுக்கு உதவும் வகையில் செயற்கைகோள் தொழில்நுட்பத்தோடு செயல்படும் கடல் ஆம்புலன்ஸ்கள் ஒவ்வொரு பெரிய மீன்பிடித் துறைமுகத்திலும் அமைக்கப்படும். அதுபோல், கடலில் செயலிழந்து நிற்கும் படகுகளை மீட்க இழுவைப் படகு வசதி அமைக்கப்படும்.

## 3 மீனவர் எரிபொருள் பாதுகாப்பு

மீன்பிடி படகுகளுக்கான டீசல் மானியம் 1800 லிட்டரில் இருந்து 3600 லிட்டராக உயர்த்தப்படும். கூடுதலாக ஒரு லிட்டருக்கு 15 ரூபாய் மானியம் படகு உரிமையாளர் வங்கிக் கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்படும்.

## 4 மீன்களுக்கு குறைந்தபட்ச ஆதார விலை

இந்தியாவிலேயே முதன்முறையாக இறால், மத்தி, அயிலா, கணவாய் ஆகிய மீன்களுக்கு குறைந்த பட்ச ஆதார விலை நிர்ணயம் செய்யப்படும். அதிகளவு இந்த மீன்கள் சந்தைக்கு வரும்போது ஏற்படும் விலைச்சரிவால் மீனவர்கள் பாதிக்கப்படுவதைத் தவிர்க்கும் பொருட்டு, பற்றாக்குறைத் தொகை மீனவர்களின் வங்கிக் கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்படும்.

## 5 கடல்தாய் வீடு

குடிசைகள் இல்லாத கடலோரங்களை உருவாக்குவதை உறுதி செய்யும் வகையில், கடலோர குடியிருப்புத் திட்டம் உருவாக்கப்படும். இந்தத் திட்டத்தின் கீழ், அமைக்கப்படும் வீடுகள் புயல், கடல் அரிப்பு, மோசமான வானிலை ஆகியவற்றை எதிர்கொள்ளும் தரத்தோடு அமைக்கப்படும். புயல் பாதிப்புகள் அதிகம் ஏற்படக்கூடிய நாகப்பட்டினம், கடலூர், இராமநாதபுரம், தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்ட மீனவ மக்களுக்கு இந்தத் திட்டத்தில் முன்னுரிமை வழங்கப்படும்.

## 6 காணாமல் போன மீனவர் குடும்ப நலன்

தற்போது நடைமுறையில் உள்ள விதிமுறைகளின்படி ஒரு மீனவர் கடலில் காணாமல் போனால், 7 ஆண்டுகளுக்குப் பிறகே அவர் இறந்ததாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படுகிறது. அதன்பிறகே, அவருடைய குடும்பத்திற்கு உரிய நிவாரணங்கள் வழங்கப்படுகின்றன. இந்தநிலையை மாற்றி, ஒரு மீனவர் காணாமல் போனால், அடுத்த ஆறு மாதங்களுக்குள் அவர் குடும்பத்திற்கு உரிய நிவாரணம் வழங்கப்படும்.

## 7 மீனவர் தொழில்முனைவோர் நலத் திட்டம்

படகு பழுதுநீக்கும் ஒர்க் ஷாப், கடல் உணவு ஏற்றுமதி நிறுவனம், மீன் பதப்படுத்தும் தொழில், கடல்பாசி உற்பத்தி ஆகிய மதிப்புக்கூட்டப்பட்ட கடல்சார் தொழில்களில் தொழில்முனைவோராக விரும்பும் மீனவ இளைஞர்களுக்கு 5 லட்சம் ரூபாய் முதலீட்டு மானியம் வழங்கப்படும்.

## 8 உள்ளூர் நீர்நிலை மீனவர் நலன்

கடல் தவிர்த்து ஆறு, கண்மாய், குளம், அணைகளில் மீன்பிடிக்கும் மீனவர்களுக்கு தமிழ்நாடு மீனவர் நலவாரியத்தின் எந்தவிதமான பலன்களும் கிடைப்பதில்லை. இந்த நிலையை மாற்றி, மீன்பிடித்தலை தொழிலாகக் கொண்ட அனைத்து மீனவர்களுக்கும் தமிழ்நாடு மீனவர் நலவாரியத்தின் அனைத்துப் பலன்களும் கிடைக்க வழிவகை செய்யப்படும். தகுதிவாய்ந்த இறால் உற்பத்தியாளர்களும் இந்தத்திட்டத்தின் கீழ் பலன் பெறுவார்கள். மேலும், எதிர்பாராத நோய்த் தாக்குதல்களால் நட்டத்தைச் சந்திக்கும் இறால் உற்பத்தியாளர்கள் பயன்பெறும் வகையில், இறால் நோய் காப்பீடு வழங்கப்படும்.

## 9 கடல்சார் பொருட்கள் விற்பனை நிலையம்

பால் பொருட்கள் விற்பனை செய்ய ஆவின் விற்பனை நிலையங்கள் இருப்பதுபோல, மீனவர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில், கடல்சார் உணவுப் பொருட்களை விற்பனை செய்ய தமிழகம் முழுவதும் தனி விற்பனை நிலையங்கள் அமைக்கப்படும். இவற்றில், மதிப்புக்கூட்டப்பட்ட கருவாடு, டின்களில் அடைக்கப்பட்ட மீன் உணவுகள் உள்ளிட்ட கடல்சார் உணவுப் பொருட்கள் விற்கப்படும்.

## 10 கடற்பாசி பூங்கா

ராமேஸ்வரத்தில் கடற்பாசி பதப்படுத்தும் தொழிற் பூங்கா அமைக்கப்படும். இங்கு கடற்பாசிகள் உணவாகவும், உரமாகவும், அழகுப் பொருட்களாகவும் மாற்றப்படும். இதில், மகளிர் சுய உதவிக் குழுப் பெண்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

## 11 கடல் பொற்காப்பு திட்டம்

நாகப்பட்டினம், கடலூர், விழுப்புரம், இராமநாதபுரம், கன்னியாகுமரி என கடல் அரிப்பால் அதிகம் பாதிப்படும் கடலோர மாவட்டங்களில் 200 கி.மீ நீளத்திற்கு தடுப்பரண்கள் அமைக்கப்படும்.

## 12 மீன்பிடி துறைமுகங்கள் மேம்பாடு

தமிழகம் முழுவதும் உள்ள மீன்பிடித் துறைமுகங்களில் மீன்களைப் பதப்படுத்தி வைக்கும் குளிர்சாதன கிடங்கு, நச்சுத் தன்மையுள்ள கழிவுகளை பயனுள்ள மீன் தீவனமாக மாற்றும் வசதி (Bio Floc Technology), கூண்டு மீன் வளர்ப்பு உள்ளிட்ட கட்டமைப்புகள் ஏற்படுத்தப்படும். மீனவர்களுக்கும் மீன் வணிகர்களுக்கும் இடையில் இடைத்தரகர்கள் இல்லாத வணிகச் சங்கிலி உருவாக்கப்படும். அனைத்து மீன்பிடி இறங்கு தளங்களிலும் நவீன பதப்படுத்துதல் மையங்கள் அமைக்கப்படும்.

## 13 ஆழ்கடல் படகு நிதிக்கடன்

நவீன பதப்படுத்துதல் வசதிகள் கொண்ட ஆழ்கடல் மீன்பிடிப் படகுகள் வாங்குவதற்கு மீனவர்களுக்கு வட்டியில்லாக் கடன் வழங்கப்படும்.

# விவசாயிகள், விவசாயக் கூலித் தொழிலாளர்கள் மற்றும் மீனவர் நலன்

C. நீர் மேலாண்மை மற்றும் விவசாயக் கண்டுபிடிப்புகள்.



## 1 நதிநீர் இணைப்பு

காவிரி-வைகை-குண்டாறு, தென்பெண்ணையாறு-பாலாறு, பென்னையாறு-செய்யாறு, தாமிரபரணி-வைப்பாறு இந்த நதிநீர் இணைப்புத்திட்டங்கள் அனைத்தும் அறிவிக்கப்பட்டு இன்னும் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படாமலே இருக்கின்றன. அதை உடனடியாக நடைமுறைப்படுத்தும் வகையில், 5000 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு பணிகள் விரைந்து முடிக்கப்படும்.

## 2 நீராட்சித் திட்டம்

தமிழகம் முழுவதும் 39 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நீர்பாசனத் தொட்டிகள் முறையான பராமரிப்பின்றி மோசமான நிலையில் இருக்கின்றன. இவை அனைத்தும் நீராட்சித் திட்டத்தின் கீழ் சீரமைக்கப்படும். இதன்மூலம், 5 லட்சம் புதிய விவசாயக் குளங்கள் அமைக்கப்படும்.

## 3 100% பாசனப் பரப்பை அடைய பாடுபடுதல்

மழையை மட்டுமே நம்பியிருக்கும் புன்செய் நிலங்களை, பாசன வசதி கொண்ட விளைநிலங்களாக மாற்றுவதன் மூலம், தமிழ்நாடு முழுவதும் 100% பாசனப் பரப்பை அடைவதை தமிழக வெற்றிக் கழகம் இலக்காகக் கொள்ளும். இந்த தொலைநோக்குப் பார்வையை நிறைவேற்றவும், நீர் பாதுகாப்பை உறுதி செய்யவும், இடர் அபாயங்களைக் குறைத்து விவசாயிகளின் வருமானத்தைக் கணிசமாக உயர்த்தவும் ஒரு சிறப்புத் திட்டம் (Special Mission) தொடங்கப்படும்.

## 4 துளித் துளித் தண்ணீர் திட்டம்

சிறு-குறு விவசாயிகள் சொட்டு நீர் மற்றும் தெளிப்பு நீர் பாசனம் அமைப்பதற்கு தற்போது நடைமுறையில் உள்ள 75 சதவிகித மானியம் 90 சதவிகிதமாக உயர்த்தப்படும். இதன்மூலம் நிலத்தடி நீர் விவசாயத்திற்காக எடுக்கப்படுவது 40 சதவிகிதம் குறையும். குறைந்துவரும் விவசாயப்பரப்பு 30 லட்சம் ஏக்கர் அதிகரிக்கும். பயிர் உற்பத்தியும் அதிகரிக்கும்.

## 5 நீர்ப்பாசனத் திட்டங்களை துரிதப்படுத்துதல்

தமிழ்நாடு முழுவதும் பாசனப் பாதுகாப்பு, நிலத்தடி நீர் செறிவூட்டல் மற்றும் வறட்சித் தடுப்புத் திறனை உறுதி செய்யும் வகையில், மண்டல வாரியான நீர் உள்கட்டமைப்புத் திட்டங்களை விரைந்து செயல்படுத்த தமிழக வெற்றிக் கழகம் ஒரு சிறப்புத் திட்டத்தை (Mission-mode programme) அமல்படுத்தும். இதில் ஆனைமலையாறு - நல்லாறு இணைப்புத் திட்டம்

(திருப்பூர்/கோயம்புத்தூர்), எர்தலாவ் - புலிக்கரை இணைப்புத் திட்டம் (தர்மபுரி), நாமக்கல் மாவட்டத்தின் காவிரி மற்றும் திருமணிமுத்தாறு பகுதிகளில் தடுப்பணைகள் மற்றும் கதவணைகள் கட்டுதல், மேல் வைப்பாறு மற்றும் முடங்கியார் நதி புனரமைப்பு (விருதுநகர்/ராஜபாளையம்), ராமநதி - ஜம்புநதி இணைப்பு கால்வாய் திட்டம் (தென்காசி/ஆலங்குளம்), தாமிரபரணி - கருமேனியாறு - நம்பியாறு இணைப்புத் திட்டம் (திருநெல்வேலி/தூத்துக்குடி) உள்ளிட்ட பிற முக்கிய திட்டங்கள் அனைத்தும் உள்ளடங்கும்.

## 6 கொப்பரைத் தேங்காய் விவசாயிகள் நலன்

அடுத்த 5 ஆண்டுகளில் டீசல் மற்றும் எலெக்ட்ரிக் பம்பு செட்டுகள் சோலார் பம்பு செட்டுகளாக மாற்றப்படும். இதில் உபரியாகும் மின்சாரம், மின்வாரியத்திற்கு விற்கப்பட்டு அதன் மூலம் வரும் வருவாய் விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

## 7 உழவன் செயற்கை நுண்ணறிவுத் திட்டம்

ஒவ்வொரு விவசாயிக்கும் அவருடைய நிலத்தின் தன்மை, அதில் உள்ள பூச்சிக் கொல்லி பாதிப்பு, சத்துக்குறைபாடு, எந்த நாளில் விதைப்பது, அறுவடை செய்வது உள்ளிட்ட தகவல்களை அவருக்கு வழங்க அவர்கள் பயன்படுத்தும் ஸ்மார்ட் போன்களில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப வசதி செய்து கொடுக்கப்படும். இதன்மூலம் அவர்களுடைய ஸ்மார்ட் போன்கள் மூலமே அவர்களின் நிலத்தைப் பற்றி முழுமையாக ஒவ்வொரு விவசாயியும் அறிந்து கொள்ள முடியும். விவசாயக் கூட்டுறவு சங்கங்களுக்கு பூச்சிக் கொல்லி மருந்து தெளிக்க மானிய விலையில் டிரோன்கள் வழங்கப்படும்.

## 8 வேளாண் வணிக மையங்கள்

கோவை, மதுரை, திருச்சி உள்ளிட்ட இடங்களில் வேளாண் - வணிக பாதுகாப்பு மையங்கள் ஏற்படுத்தப்படும். வேளாண் வணிகத்தில் ஸ்டார்ட்-அப் நிறுவனங்களைத் தொடங்கும் வேளாண் வணிக தொழில்முனைவோருக்கு 10 லட்சம் ரூபாய் முதலீட்டு மானியமாக வழங்கப்படும். குறிப்பாக, டிரோன்களைப் பயன்படுத்தி பூச்சிக்கொல்லி மற்றும் உரங்கள் தெளிப்பு, மதிப்புக்கூட்டப் பயன்படும் சிறு அரவை மற்றும் பதப்படுத்தும் தொழில்கள் இதன் மூலம் ஊக்குவிக்கப்படும்.

## 9 மஞ்சள், மாம்பழம், கொப்பரைத் தேங்காய் மதிப்புக்கூட்டும் மையங்கள்!

தமிழக விவசாயிகள் உற்பத்தி செய்யும் ஈரோடு மஞ்சள், கிருஷ்ணகிரி மாம்பழம், கொங்கு மண்டலத்தில் உற்பத்தியாகும் கொப்பரைத் தேங்காய்களுக்கு அதிக விலை கிடைக்கும் வகையில் அவை மதிப்புக்கூட்டப்படும்.

- ஈரோட்டில் மஞ்சள் பிரித்தெடுப்புப் பூங்கா அமைக்கப்பட்டு, அதன்மூலம் சாதாரண மஞ்சளில் இருந்து மருந்துப் பொருட்களுக்குப் பயன்படும் அதிக தரம் வாய்ந்த மஞ்சள் பிரிக்கப்படும். இதனால், விவசாயிகள் ஒரே விலையில் அனைத்து மஞ்சளையும் விற்பனை செய்யாமல்,

தரம் பிரித்து விற்பதால் கூடுதல் விலை கிடைக்கும்.

- கிருஷ்ணகிரியில் உற்பத்தியாகும் மாம்பழங்களை நேரடியாக சென்னை, பெங்களூரு விமான நிலையம் கொண்டு சென்று ஏற்றுமதி செய்வதற்கான சரக்குப் போக்குவரத்து வசதி ஏற்படுத்தப்படும். இதன்மூலம் உள்ளூர் சந்தையில் ஏற்படும் விலை வீழ்ச்சியால் மாம்பழ உற்பத்தியாளர்கள் பாதிக்கப்படுவது தவிர்க்கப்படும்.
- தேங்காய் மற்றும் தேங்காய் பொருட்களுக்கு மதிப்புக்கூட்டும் வகையில், கொங்கு மண்டலத்தில் தேங்காய் மதிப்புக்கூட்டு மையம் அமைக்கப்படும்.

## 10 காவிரி டெல்டா சுற்றுச்சூழல் சீரமைப்பு

தமிழக விவசாயத்தின் இதயமாக காவிரி டெல்டா படுகை திகழ்கிறது. ஆனால், சுற்றுச்சூழல் சீர்கேடுகளால், காவிரி டெல்டாப் படுகையின் நீர்வளம், நிலவளம், வேளாண் உற்பத்தி மிகப்பெரும் பாதிப்பை சந்தித்துள்ளது. அதைச் சரி செய்யும் விதமாக கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

- 5000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு, காவிரி டெல்டாப் படுகையின் நிலத்தடி நீர் உப்பாகி உள்ள நிலை சிறப்புக் கவனம் எடுத்து சீர் செய்யப்படும். மேலும், வற்றிப்போன நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்துவதற்கான நடவடிக்கைகள், மண் வளம் மீட்பு போன்ற நடவடிக்கைகள் தனிக் கவனம் எடுத்து சரி செய்யப்படும்.
- காவிரி டெல்டா படுகையை சீரமைக்கும் விதமாக வேளாண் நச்சுயியல் மையம் அமைக்கப்பட்டு, அந்தப் பகுதிகளில் சுற்றுச் சூழல் சீர்கேடுகளால் ஏற்பட்ட பாதிப்பு, ரசாயனங்களால் ஏற்பட்ட பாதிப்புகள் ஆராயப்பட்டு, அவற்றை சரி செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

## 11 கடற்கரையோர தோட்டக்கலைத் திட்டம்

இராமநாதபுரம், நாகப்பட்டினம், தூத்துக்குடி ஆகிய கடற்கரையோர மாவட்டங்களில் சோலார் மின்வசதியுடன் 'நீலப்பசுமை தோட்டக்கலை பூங்காக்கள்' அமைக்கப்படும். இவற்றின்மூலம் கடற்கரையோர மாவட்டங்களில் தண்ணீரில் அதிகரித்துள்ள உப்புத்தன்மை நீக்கப்படும். மிளகாய், மல்லி போன்ற பணப் பயிர்களுக்கு இந்த தண்ணீர் பயன்படுத்தப்படும்.

## 12 டெல்டா பயோ சுத்திகரிப்பு மையம்

தமிழகத்தில் நடைபெறும் ஒவ்வொரு நெல் அறுவடையின் போதும், டன் கணக்கில் வைக்கோல் கிடைக்கிறது. ஆனால், அவை பெரும்பாலும் முறையாகப் பயன்படுத்தப்படாமல் தீ வைத்து எரிக்கப்படுகிறது; அல்லது விவசாயக் கழிவுகளாக அகற்றப்படுகிறது. இந்த நிலையை மாற்றி, வைக்கோலில் இருந்து எரிவாயு தயாரிக்கும் திட்டம் செயல்படுத்தப்படும். இதற்காக தஞ்சை, திருவாரூர் மாவட்டங்களில் 10 வைக்கோல் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டு, அவற்றின் மூலம் எத்தனால் மற்றும் எரிவாயு தயாரிக்கப்படும். இதன்மூலம், நெல் விவசாயிகளுக்கு கூடுதல் வருமானம் கிடைக்க வழிவகை செய்யப்படும். மேலும், இப்படி அமைக்கப்படும் வைக்கோல் சுத்திகரிப்பு நிலையங்கள், உள்ளூர் விவசாயிகள் குழு மூலம் நிர்வகிக்கப்படும்.

### 13 வறட்சி மண்டலங்கள்!

இராமநாதபுரம், விருதுநகர் மாவட்டங்கள் வறட்சி மண்டலங்களாக அறிவிக்கப்படும். இந்த வறட்சி மண்டலங்களில் தினை, எண்ணெய் வித்துக்களை சொட்டு நீர் பாசனம், தெளிப்பு நீர் பாசன முறைகளில் குறைந்த தண்ணீரைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை வழங்கப்படும்.

### 14 குளிரூட்டப்பட்ட சேமிப்புக் கிடங்குகள்

அறுவடைக்குப் பிறகு விவசாய உற்பத்திப் பொருட்கள் பெருமளவில் வீணாவதைத் தடுக்கும் நோக்கில், தரமான குளிரூட்டப்பட்ட சேமிப்புக் கிடங்குகள் அமைக்கப்படும். மேலும், மழை, வெயில் உள்ளிட்டவற்றால் விவசாய உற்பத்திப் பொருட்கள் அழுகுதல், கெட்டுப்போவதில் இருந்து பாதுகாக்கும் வகையில், முறையான பேக்கிங் வசதிகள் செய்வதற்கும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

## விவசாயிகள், விவசாயக் கூலித் தொழிலாளர்கள் மற்றும் மீனவர் நலன்

D. கால்நடை மற்றும் பால் பொருட்கள் மேம்பாடு

### 1 கட்டணமில்லா ஆடு, மாடுகள்

இரண்டு லட்சம் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையில் அவர்களுக்கு கறவை மாடுகள் மற்றும் ஆடுகள் கட்டணமில்லாமல் வழங்கப்படும்.

### 2 பால் கொள்முதல் விலை உயர்வு

பால் உற்பத்தியாளர்களிடம் இருந்து ஆவின் நிறுவனம் வாங்கும் பாலுக்கு கொள்முதல் விலை லிட்டருக்கு 44 ரூபாயாக உயர்த்தப்படும்.

### 3 A2 பால் ஊக்கத் திட்டம்

ஆவின் மூலம் நம் நாட்டுப் பசுக்களில் இருந்து மட்டுமே கிடைக்கும் A2 ரக பால் உற்பத்தியைப் பெருக்குவதற்கும், அதில் இருந்து தயாரிக்கப்படும் நெய், பாலடைக் கட்டி, ஐஸ் கீரிம் போன்ற உணவுப் பொருட்களின் உற்பத்தியைப் பெருக்கவும், அவற்றைத் தரமான முறையில் சந்தைப்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## 4 கால்நடைகளுக்குக் காப்பீடு

கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ள வறுமைக் கோட்டிற்க்கு கீழ் உள்ள குடும்பங்களுக்கு, கால்நடைகளுக்கான முழுமையானக் காப்பீடு திட்டம் எந்தவித கட்டணமில்லாமல் வழங்கப்படும். மேலும், அந்தக் குடும்பங்களுக்கு உரிய முறையில் ஊக்கத்தொகை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பபடும்.

## 5 பாரம்பரிய கால்நடை இனங்கள் மீட்பு

தமிழகத்தின் பாரம்பரிய மாட்டினங்களான காங்கேயம், புலிக்குளம், உம்பளச்சேரி, பர்கூர், அலம்பாடி மாட்டினங்களை மீட்கும் விதமாக, அவற்றை வளர்க்கும் சுய உதவிக்குழு மகளிருக்கு 5000 ரூபாய் கால்நடை உதவித்தொகையாக வழங்கப்படும். மகளிர் சுய உதவிக்குழுவினர் தயாரிக்கும் கால்நடைப் பொருட்களை விவசாயிகளுக்கு நியாயமான விலையில் விற்பனை செய்ய கால்நடை வங்கிகள் உருவாக்கப்படும்.

## 6 கால்நடைத் தீவன வங்கி

கால்நடைகளுக்கான தீவனங்களை சேமிக்கவும் விற்பனை செய்வதற்குமான தீவன வங்கிகளும், பாலைச் சேமித்து வைப்பதற்கான குளிர்சாதன வசதிகளும் மிகப்பெரிய அளவில் ஒவ்வொரு கிராமப் பஞ்சாயத்து அளவிலும் உருவாக்கப்படும்.

## 7 கால்நடை மருத்துவ மையங்கள்

தமிழகம் முழுவதும் தேவையான அளவில், உரிய பணியாளர்களோடு கால்நடை மருத்துவமனைகள் உருவாக்கப்படும். அதுபோல், புறநகர் மாவட்டங்களில் கால்நடை பல்நோக்கு மருத்துவமனைகள் ஏற்படுத்தப்படும்.

# உலகத் தரத்தில் கல்வி

A. பள்ளிக் கல்வி




## 1 அரசுப் பள்ளிகள் நவீனமயமாக்கல்

தமிழ்நாட்டின் ஒவ்வொரு அரசு பள்ளியிலும் உலகத் தரத்தில் அறிவியல்ஆய்வகங்கள், அதிவேக இணைய வசதியோடு கூடிய கணினி ஆய்வகங்கள், டிஜிட்டல் பிரிவுகளை உள்ளடக்கிய நவீனக் நூலகங்கள், STEM (Science, Technology, Engineering, Maths) பயிற்றுவிப்பு மையங்கள், நவீன கழிப்பறைகள், சுத்தமான குடிநீர் வசதி, தரமான அறைகலன்கள், ஆலோசனை மையங்கள் ஆகியவை அமைக்கப்படும்.

2031-க்குள் தமிழ்நாட்டின் அனைத்து பள்ளி வகுப்பறைகளும் ஸ்மார்ட் க்ளாஸ்ரூம்களாக மாற்றப்படும்.

## 2 கற்றல் விளைவுகளில் முதன்மை மாநிலமாக மாற்றுதல்

மாணவர்களின் கற்றல் திறனில் பாலின, சமூக அடிப்படையிலான குறைபாடுகளைக் களைய சிறப்புத் திட்டங்கள் வகுக்கப்பட்டு முழுவீச்சில்செயல்படுத்தப்படும். இதன்மூலம் கற்றல் விளைவுகளில் (Learning Outcomes) நாட்டிலேயே முதல் மாநிலமாகவும் வளர்ந்த நாடுகளுக்கு இணையாகவும் தமிழ்நாடு மாற்றப்படும்.

## 3 காமராஜர் சிறப்புப் பள்ளிகள்

கல்வியில் சிறந்து விளங்கும் சமூக மற்றும் பொருளாதார நிலைகளில் பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கென தமிழகம் முழுக்க 100 உன்னதப் பள்ளிகள் திறக்கப்படும். இப்பள்ளிகளில் 6-ம் வகுப்பு முதல் 12 ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு கல்வி, உணவு, உறைவிடம், பாடநூல், சீருடை ஆகியவை கட்டணமில்லாமல் வழங்கப்படும். இந்த 100 பள்ளிகளில் 50 பள்ளிகள் மாணவிகளுக்கென பிரத்தியேகமாக அமைக்கப்படும்.

## 4 0% இடைநிற்றல்

அதிகரித்து வரும் பள்ளி மாணவர் இடைநிற்றலைத் தடுக்கும்பொருட்டு, தமிழகம் முழுக்க செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்ப உதவியோடு கண்காணிப்பு அமைப்புகள் உருவாக்கப்படும். சமூக, பொருளாதாரக் காரணங்களால் பள்ளிக் கல்வியை கைவிடும் மாணவர்களைக் கண்டறிந்து மீண்டும் பள்ளிகளில் சேர்க்க 1000 கல்வி ஒருங்கிணைப்பாளர்கள் நியமிக்கப்படுவார்கள்.

## 5 காலை உணவுத் திட்ட விரிவாக்கம்

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் 8-ம் வகுப்புவரை அரசு பள்ளிகள் மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டு ஊட்டச்சத்து மிக்க காலை உணவு வழங்கப்படும். இத்திட்டத்தின் மூலம் அனைத்து மாணவர்களும் சமச்சீர் ஊட்டச்சத்து பெறுவது உறுதிசெய்யப்படும்.

## 6 10 சதவீத இடஒதுக்கீடு

இளங்கலை பட்டப்படிப்பில் அரசுப் பள்ளி மாணவர்களுக்கான 7.5 சதவீத இடஒதுக்கீடு 10 சதவீதமாக உயர்த்தப்படும். மேலும், முதுகலை பட்டப்படிப்பிலும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 10 சதவீத இடஒதுக்கீடு வழங்கப்படும்.

## 7 தலைமை ஆசிரியர் திறன் மேம்பாட்டுத் திட்டம்

பள்ளித் தலைமை ஆசிரியர்களின் தலைமைப்பண்புகளை மென்மேலும் கூர்மைப்படுத்தும் விதமாக தலைமை ஆசிரியர் திறன் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும். இதற்கென பிரத்தியேகமாகத் தலைமைத்துவப் பயிற்சி நிலையம் அமைக்கப்பட்டு மாநிலம் முழுவதும் பணிபுரியும் தலைமை ஆசிரியர்களுக்கு தொடர்ச்சியாக பயிற்சிகள் வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் சிறப்பாக செயல்பட்டு கற்றல் விளைவுகளில் சிறந்து விளங்கும் பள்ளிகளுக்கு ரூ. 50 லட்சம் ஊக்கத்தொகையாக வழங்கப்படும்.

## 8 தமிழ்நாடு மாணவ தொழில்முனைவோர் திட்டம்

பள்ளிக்காலத்திலேயே மாணவர்களிடையே தொழில்முனைவை ஊக்குவிக்கும் வகையில் தமிழ்நாடு மாணவர் தொழில்முனைவோர் திட்டத்தின் கீழ் அரசுப் பள்ளிகளில் 11, 12-ம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு முதலீட்டு நிதியாக 5,100 ரூபாய் வழங்கப்படும். இந்த நிதி அம்மாணவர்கள் சிறிய அளவிலான வணிக மாதிரிகளை உருவாக்க உதவியாய் இருக்கும். மேலும், அனைத்துப் பள்ளிகளிலும் பாடநெறிக்கு அப்பாற்பட்ட செயல்பாடுகளில் ஒன்றாக சிறப்பு தொழில்முனைவோர் வகுப்புகள் எடுக்கப்படும்.

## 9 மாணவர் மனநலன் பாதுகாப்பு

அரசுப் பள்ளி மாணவர்கள், ஆசிரியர்களின் மனநலன் மற்றும் பாதுகாப்பை உறுதிசெய்யும் வகையில் 5,000 மனநல ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டு மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் உளவியல் முதலுதவிப் பயிற்சிகள் வழங்கப்படும். மாணவர்களிடையே மன அழுத்தத்தை குறைக்கவும் நினைவாற்றலை அதிகரிக்கவும் மகிழ்ச்சிப் பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப்படும்.

## 10 பள்ளிப் பாடத்திட்டத்தில் செயற்கை நுண்ணறிவுப் பிரிவு

தமிழ்நாட்டு அரசுப் பள்ளி மாணவர்களை முன்னோடி மாணவர்களாக மாற்றும்வகையில், 6-ம் வகுப்பு முதல் 12-ம் வகுப்பு வரையிலான பாடத்திட்டத்தில் செயற்கை நுண்ணறிவு அறிவியல் பயிற்றுவிக்கப்படும். மேலும், மாறிவரும் காலசூழலை உணர்ந்து மாணவர்கள் பொறுப்போடு செயல்பட 6-ம் வகுப்பு முதல் 12-ம் வகுப்பு வரையிலான பாடத்திட்டத்தில் காலநிலை அறிவியலும் பயிற்றுவிக்கப்படும்.

பொருள்

06

# உலகத் தரத்தில் கல்வி

B. உயர்கல்வி




## 1 புதிய அரசு தொழிற்கல்லூரிகள்

அரசு தொழிற்கல்லூரிகள் இல்லாத மாவட்டங்களில் புதிதாக ஐந்து பொறியியல் கல்லூரிகளும் மூன்று மருத்துவக் கல்லூரிகளும் தொடங்கப்படும். மருத்துவக் கல்லூரிகளுக்கான அனுமதி வழங்குமாறு ஒன்றிய அரசை வலியுறுத்தும் முயற்சி மேற்கொள்ளப்படும். முப்பது அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தன்னாட்சிக் கல்லூரிகளாக தரம் உயர்த்தப்படும்.

## 2 கல்வி வாழ்வு நிதி

பள்ளிப்படிப்பை முடித்து அரசு கல்லூரியில் இணையும் ஒவ்வொரு அரசுப் பள்ளி மாணவருக்கும் கல்லூரிச் சேர்க்கை செலவுகளால் ஏற்படும் பொருளாதாரச் சுமையை குறைக்கும்வகையில் 8,000 ரூபாய் வழங்கப்படும்.

## 3 அறிவாற்றலுக்கு முதல் மரியாதை

உலகின் தலைசிறந்த முதல் 100 கல்வி நிலையங்களில் பயில்வதற்கு தகுதி பெறும் தமிழக மாணவர்களின் கல்வி மற்றும் வாழ்க்கைச் செலவுகளை அரசே ஏற்றுக்கொள்ளும். பதிலுக்கு அம்மாணவர்கள் தங்கள் பட்டப்படிப்பை முடித்தபின் மூன்று ஆண்டுகளுக்கு அரசு ஆலோசகர்களாகவோ தமிழகக் கல்வி நிலையங்களில் கௌரவ ஆசிரியர்களாகவோ தமிழ்நாட்டில் முதலீடு செய்யும் தொழில்முனைவோராகவோ செயல்படுவார்கள். இந்த அறிவுப் பரிமாற்றம் அடுத்தடுத்த தலைமுறை மாணவர்களை வழிநடத்த உதவியாய் இருக்கும்.

## 4 முதல் தலைமுறை மாணவருக்கு கல்லூரிக் கட்டணம் ரத்து

அரசுப் பள்ளிகளில் பயின்று பின்னர் அரசுக் கல்லூரிகளில் இணைந்து பயிலும் ஆதிதிராவிடர், பழங்குடியினத்தைச் சேர்ந்த முதல் தலைமுறை மாணவர்களுக்கும் பொருளாதாரத்தில் பின் தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த முதல் தலைமுறை மாணவர்களுக்கும் கல்லூரிக் கட்டணம் முற்றிலுமாக ரத்து செய்யப்படும்.

## 5 வளர்ந்துவரும் தொழில்நுட்பங்களுக்கென பிரத்தியேக பல்கலைக் கழகம்

செயற்கை நுண்ணறிவு, க்வாண்டம் கம்ப்யூட்டிங், பயோடெக், காலநிலை தொழில்நுட்பம், விண்வெளித் தொழில்நுட்பம், சைபர் செக்யூரிட்டி என வளர்ந்துவரும் தொழில்நுட்பங்கள்

சார்ந்த பட்டப்படிப்புகள் பயில Periyar Institute of Emerging Technologies (PIET) உருவாக்கப்படும். இந்த பல்கலைக் கழகம் உலகின் முன்னணி பல்கலைக்கழகங்களோடும் தொழில்நுட்ப நிறுவனங்களோடும் இணைந்து செயல்படும்.

### 6 ஐ.டி.ஐ நவீனமயமாக்கல்

தமிழகம் முழுவதுமுள்ள ஐ.டி.ஐ.கள் நவீனமயமாக்கப்பட்டு புதிதாக Augmented Reality (AR), Virtual Reality (VR), செயற்கை நுண்ணறிவு (AI), Machine Learning (ML) ஆகிய பிரிவுகளின் கீழ் பாடத்திட்டங்கள் சேர்க்கப்படும். மாணவர்களின் தேவைக்கேற்ப புதிய ஐ.டி.ஐ.கள் திறக்கப்படும்.

# உலகத் தரத்தில் கல்வி

C. போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி

### 1 வளர்ந்துவரும் தொழில்நுட்பங்களுக்கான திறன் பயிற்சி மையங்கள்

தமிழகத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலும் வளர்ந்துவரும் தொழில்நுட்பங்களுக்கான திறன் பயிற்சி மையங்கள் அமைக்கப்பட்டு செயற்கை நுண்ணறிவு, EV தொழில்நுட்பம், அனிமேஷன், க்ளவுட் கம்ப்யூட்டிங், சைபர் செக்யூரிட்டி போன்ற பிரிவுகளில் கட்டணமில்லா ஆறுமாத சான்றிதழ் படிப்புகள் பயிற்றுவிக்கப்படும். தமிழகத்தின் முன்னணி நிறுவனங்களில் இந்த சான்றிதழ் படிப்புகள் அடிப்படையில் மாணவர்கள் வேலைவாய்ப்பு பெறுவது உறுதி செய்யப்படும்.

### 2 போட்டித் தேர்வுகளுக்கு கட்டணமில்லா பயிற்சி

- கிராமப்புற இளைஞர்கள் போட்டித்தேர்வுகளில் சிறப்பாக செயல்பட கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
- ஒவ்வொரு மாவட்ட நூலகமும் நவீனமயமாக்கப்பட்டு அங்கே போட்டித் தேர்வுகளுக்கான உயர்தர பயிற்சி மையங்கள் அமைக்கப்படும்.
- ஒவ்வொரு இளைஞரின் கற்றல் திறனும் செயற்கை நுண்ணறிவின் வழியே பகுப்பாய்வு செய்யப்பட்டு அவர்களுக்குத் தேவையான வழிகாட்டுதல்கள் பரிந்துரைக்கப்படும்.



# வளமான தமிழ்நாடு

A. தொழில் வளர்ச்சி - தமிழகத்தின் பொற்காலப் பத்தாண்டுகள்

## 1 1.5 ட்ரில்லியன் டாலர் பொருளாதாரம் :

2036-ஆம்ஆண்டிற்குள் தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை 1.5 ட்ரில்லியன் டாலராக உயர்த்துவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு வேண்டிய முன்னெடுப்புகள் செய்யப்படும். இதன்மூலம் இதுவரை இல்லாத அளவிற்கு மாநிலத்தின் பத்தாண்டுகால வளர்ச்சி இருப்பது உறுதி செய்யப்படும்.

## 2 டாப் 20 திட்டம்

தொழிற்வளர்ச்சியில் முன்னணியில் உள்ள, எதிர்காலத்தில் அதிவேகத்தில் வளர வாய்ப்புள்ள 20 துறைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அத்துறைகளுக்கென பிரத்தியேக செயல்திட்டங்கள் (Industry Transformation Maps) வகுக்கப்படும். இச்செயல்திட்டங்களின் வழியே அரசு - தனியார் கூட்டுப் பங்களிப்பை உறுதி செய்ய மாநிலம் முழுவதும் தொழிற்வளர்ச்சி மையங்கள் அமைக்கப்படும்.

## 3 தமிழ்நாட்டு தொழில் நிறுவனங்களை உலகமயமாக்கல்

திருப்பூரில் தயாராகும் ஜவுளி,வேலூரில் தயாரிக்கப்படும் தோல் பொருட்கள், சென்னையில் உற்பத்தி செய்யப்படும் உதிரிபாகங்கள், ஈரோட்டில் உருவாக்கப்படும் நகைகள் என தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களுக்கு உலகெங்கிலும் வரவேற்பு உள்ளது.எனவே,இப்படி உலகச் சந்தைகளில் தமிழ்நாட்டில் தயாராகும் அனைத்து பொருள்களையும் சந்தைப்படுத்தும் விதமாக தமிழ்நாட்டு நிறுவனங்கள் வளர்ச்சித் திட்டம் (EnterpriseTNPlan) அறிமுகப்படுத்தப்படும். இத்திட்டத்தின் கீழ் அதிகளவில் வெளிநாட்டு முதலீடுகள் ஈர்க்கப்படும். பன்னாட்டு நிறுவனங்களோடு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டு உள்நாட்டில் தயாராகும் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படும். தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு சிப்காட் தொழிற்பேட்டையிலும் ஏற்றுமதிக்கென சிறப்புப் பிரிவுகள் உருவாக்கப்படும்.

## 4 சிப்காட் மற்றும் தொழிற்பேட்டை சீர்திருத்தம், நவீனமயமாக்கல் மற்றும் நிலப் பயன்பாடு

தொழில் புரிவதை எளிதாக்கவும், ஏற்றுமதி திறனை மேம்படுத்தவும் தமிழகத்தின் அனைத்து சிப்காட் (SIPCOT) தொழிற்பூங்காக்களையும் தமிழக வெற்றிக் கழக அரசு விரிவான முறையில் நவீனப்படுத்தும்.

இதன் மூலம் தடையில்லா மின்சாரம், சீரான குடிநீர் வசதி, நகரங்கள் மற்றும் துறைமுகங்களுடன் இணைக்கும் வலுவான சாலைக் கட்டமைப்பு வசதிகள் உறுதி செய்யப்படும். பின்தங்கிய மாவட்டங்களில் புதிய சிப்காட் பூங்காக்கள் உருவாக்கப்படும்; அதே வேளையில், விவசாயிகளிடமிருந்து எக்காரணம் கொண்டும் விளைநிலங்கள் கையகப்படுத்தப்பட மாட்டாது என்பது உறுதி செய்யப்படும். காலியாக உள்ள சிப்காட் நிலங்கள் அனைத்தும் உற்பத்தி மற்றும் வணிகப் பயன்பாட்டிற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு, காலக்கெடுவுக்குள் ஒதுக்கீடு செய்யப்பட்டு முழுமையாகப் பயன்படுத்தப்படுவது உறுதி செய்யப்படும்.

# வளமான தமிழ்நாடு

B. குறு-சிறு-நடுத்தரத் தொழில் மறுமலர்ச்சி

## 1 காப்புக் கடனுதவித் திட்டம் – 15 ஆயிரம் கோடி கடனுதவி

தமிழகத்தில் குறு-சிறு-நடுத்தரத் தொழில்கள் மின்சார கட்டண உயர்வு, முறையற்ற விநியோக வசதிகள், பொருளாதார நெருக்கடிகளால் தள்ளாட்டத்தை சந்தித்து வருகின்றன. இதைத் தடுக்கும் விதமாக, நெருக்கடிக்குள்ளான குறு-சிறு-நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு கடன் உதவி அளிக்கும் வகையில் 15000 கோடி ரூபாய் மாநில நிதி ஒதுக்கப்படும். இந்த நிதியில் 4 சதவிகித வட்டியுடன் குறு-சிறு-நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு கடன் வழங்கப்படும்.

## 2 மின்சார உறுதியளிப்புத் திட்டம்

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான (MSMEs) மின்சார நிலைக்கட்டண (Fixed Charges) உயர்வு மற்றும் உச்சநேர மின் பயன்பாட்டுக் கட்டணங்களுக்கு (Peak-hour charges) உடனடியாகத் தடை விதிக்கப்படும். மேலும், விரிவான ஆய்வுக்குப் பிறகு மின்சாரக் கட்டணங்கள் முறைப்படுத்தப்படும். 'வெற்றி சோலார் திட்டத்தின்' (Vettri Solar Mission) கீழ், தங்கள் நிறுவனக் கூரைகளில் சூரியசக்தி மின் தகடுகளை (Rooftop Solar) நிறுவும் MSME நிறுவனங்களுக்கு ஐந்து ஆண்டுகளுக்கு 100% மின்சார வரி விலக்கு அளிக்கப்படும்.

## 3 தொழில்நுட்ப மேம்பாட்டு நிதியுதவித் திட்டம் (Technology Upgradation Fund Scheme)

தமிழகத்தில் உள்ள குறு-சிறு-நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் வளர்ந்துவரும் உலகிற்கேற்ப தொழில்நுட்பங்களை வாங்கிப் பயன்படுத்துவதில்லை. குறிப்பாக AI, சென்சார் தொழில்நுட்பம், நவீன உற்பத்தி இயந்திரங்களை வாங்க நிதி வசதி இல்லாமல் இருக்கின்றன. இதன் காரணமாக, சர்வதேச சந்தையில் தமிழகத்தின் MSME நிறுவனங்கள் போட்டியிடும் சூழல் இல்லாமல் போகிறது. இதைத் தவிர்க்கும் பொருட்டு, MSME நிறுவனங்கள் புதிய தொழில்நுட்பங்களை வாங்கிப் பயன்படுத்த நிதியுதவி செய்யும் வகையில், முதலீட்டு மானியம் அல்லது அதிகபட்சமாக 50 லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும். இதற்காக 1000 கோடி தொழில்நுட்ப மேம்பாட்டு நிதியாக ஒதுக்கப்படும்.

## 4 தமிழ்நாட்டு நிறுவனங்களுக்கு முன்னுரிமை

சிறு-குறு-நடுத்தரத் தொழில் நிறுவனங்களிடம் இருந்து அரசாங்கம் கொள்முதல் செய்யும் பொருட்களில் தமிழ்நாட்டைச் சேர்ந்த நிறுவனங்களிடம் இருந்து 40 சதவிகிதம் அளவுக்கு கொள்முதல் செய்யப்படும். இதற்கு வசதியாக, தமிழ்நாட்டைச் சேர்ந்த சிறு-குறு-நடுத்தரத் தொழில் நிறுவனங்களைப் பதிவு செய்து வைக்கும், தமிழ்நாடு விநியோகஸ்தர் பதிவேடு (Tamilnadu Supplier Register) உருவாக்கப்படும். இதன்மூலம் தமிழ்நாட்டைச் சேர்ந்த நிறுவனங்கள் எளிதாக அடையாளம் காணப்பட்டு, அவர்களுக்கு கொள்முதலில் முன்னுரிமை வழங்கப்படும்.

# வளமான தமிழ்நாடு

C .முதலீட்டு ஈர்ப்புத் திட்டம்

## 1 21 நாட்களில் உரிமம்

தொழில் வளர்ச்சியை மேம்படுத்தும்வகையில் தொழில் நிறுவனங்கள் தொடங்குவதற்கு உள்ள கடினமான நடைமுறைகள் கீழ்க்கண்டவாறு எளிமைப்படுத்தப்படும்.

- குறுந்தொழில்கள் மற்றும் குடிசைத் தொழில்கள் தொடங்க 7 வேலை நாட்களில் உரிமம் வழங்கப்படும்.
- சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் தொடங்க 15 வேலைநாட்களில் உரிமம் வழங்கப்படும்
- 200 கோடி ரூபாய்க்கும் அதிகமான மெகா தொழில் நிறுவனங்கள் தொடங்க 21 வேலை நாட்களில் உரிமம் வழங்கப்படும்.

மேலே குறிப்பிட்டுள்ள கால வரையறைக்குள் அரசு எந்தவித முடிவும் எடுக்கவில்லை என்றால், விண்ணப்பித்த நிறுவனங்கள் தன்னியல்பாக உரிமம் பெற்றவையாகக் கருதப்படும்.

## 2 முதலீட்டாளர் ஊக்குவிப்பு ஆணையம்

• பன்னாட்டு நிறுவனங்களின் வெளிநாட்டு முதலீடுகள் தமிழகத்திற்கு அதிகளவில் வருவதை உறுதி செய்யும் விதமாக, தமிழ்நாடு முதலீட்டாளர் ஊக்குவிப்பு ஆணையம் தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளரின் கீழ் உருவாக்கப்படும். தொழிற்துறை செயலாளர் இந்த ஆணையத்தின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்படுவார். இந்த ஆணையத்தின் வழியே 200 கோடி ரூபாய்க்கும் அதிகமாக முதலீடு செய்யும் நிறுவனங்கள் அல்லது 5 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கும் நிறுவனங்களுக்கு 15 வேலை நாட்களுக்குள் உரிமம் வழங்கப்படும்.

• தமிழக அரசால் தொழில் முதலீட்டு நிறுவனங்களுக்கு வழங்கப்படும் மின் மானியம், முதலீட்டு மானியம் உள்பட அனைத்து வித மானியங்களும் எந்தவித காலதாமதமின்றி உரிய நேரத்தில் வழங்கப்படும்.

## 3 வெளிநாடு வாழ் தமிழர் முதலீட்டுத் திட்டம்

வெளிநாடு வாழ் தமிழர்களையும் தமிழ்நாட்டில் ஊக்கப்படுத்தும்வகையில், கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

• உலகத் தமிழர் நலன் மற்றும் முதலீட்டு ஆணையம் - முதலமைச்சரின் நேரடிக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டு, வெளிநாடு வாழ் தமிழர்களுக்கான நலத்திட்ட உதவிகள், அவர்கள் முதலீடு செய்வதற்கான வாய்ப்புகள் விரைவாக செய்து கொடுக்கப்படும்.
• வெளிநாடுவாழ் தமிழர் முதலீட்டு மாநாடு: வெளிநாடு வாழ் தமிழர்கள் தமிழகத்தின் ஸ்டார்ட்-அப் நிறுவனங்கள், உள் கட்டமைப்புகள் மற்றும் தொழில்களில் முதலீடு செய்வதற்கு வசதியாக, ஒவ்வொரு ஆண்டும் வெளிநாடுவாழ் தமிழர் முதலீட்டு மாநாடு நடத்தப்படும்.
• வெளிநாடு வாழ் தமிழர் நலப் பிரிவு: துபாய், சிங்கப்பூர், கோலாலம்பூர், லண்டன், டொரண்டோ, நியூயார்க், சிட்னி, பிராங்க்பர்ட், பாரீஸ், பஹ்ரைன், கத்தார், குவைத், ரியாத், ஜெட்டா, வாஷிங்டன், சிகாகோ, லாஸ்-ஏஞ்சல்ஸ், டோக்கியோ, ஜோகன்ஸ்பெர்க், ஆக்லேண்ட் ஆகிய இடங்களில் வெளிநாடு வாழ் தமிழர் நலப்பிரிவு அமைக்கப்படும்.
• உங்கள் ஊரில் உங்கள் முதலீடு: வெளிநாடு வாழ் தமிழர்கள் தங்கள் சொந்த மாவட்டத்தில் முதலீடு செய்வதற்கு வசதியாக 38 மாவட்டங்களிலும் TIDCO NRI Liaison Officer நியமிக்கப்படுவார்.
• வெளிநாடு வாழ் தமிழர் உடைமைப் பாதுகாப்புத் தீர்ப்பாயம்: வெளிநாடு வாழ் தமிழர்களுக்குச் சொந்தமாக தமிழகத்தில் இருக்கும் உடைமைகள் மற்றும் சொத்துக்கள் மீதான ஆக்கிரமிப்பு உள்ளிட்ட சட்டச் சிக்கல்களை விரைந்து தீர்க்கும் விதமாக வெளிநாடு வாழ் தமிழர் உடைமைப் பாதுகாப்புத் தீர்ப்பாயம் அமைக்கப்படும். இதன்மூலம் வெளிநாடு வாழ் தமிழர்களின் சொத்து சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் ஆறே மாதங்களில் தீர்க்கப்படும்.




# வளமான தமிழ்நாடு

D. செயற்கை நுண்ணறிவுத் தலைநகர் தமிழ்நாடு

## 1 AI பொருளாதாரத் திட்டம்

2035-ஆம் ஆண்டிற்குள் AI தொழில்நுட்பம் மூலம் இந்தியாவின் பொருளாதாரம் கூடுதலாக 1.7 டிரில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு உயரும் என கணக்கிடப்பட்டுள்ளது. இதில் தமிழர்களும் பலனடையும் வகையில் AI தொழில் வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படும். அதில், கீழ்க்கண்ட முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்படும்.

- தமிழ்நாட்டில் உள்ள பாலிடெக்னிக், ஐ.டி.ஐ மற்றும் பொறியியல் கல்லூரிகள் மூலம் 2031-க்குள் AI துறையில் திறன்பெற்ற 5 லட்சம் இளைஞர்கள் உருவாக்கப்படுவார்கள்.
- மருத்துவம், விவசாயம், உற்பத்தி, தமிழ்மொழி, காலநிலை ஆகிய 5 பிரிவுகளில் AI Centres Of Excellence உருவாக்கப்படும்.
- தமிழ்நாடு AI ஏற்றுமதித் திட்டம்: AI, Deep-Tech மற்றும் GCC ஆகிய பிரிவுகளில் 2031-க்குள் 35 ஆயிரம் கோடி ரூபாய் ஏற்றுமதி இலக்காக நிர்ணயிக்கப்படும்

## 2 இந்தியாவின் முதல் AI அமைச்சகம்:

இந்தியாவில் முதல் AI அமைச்சகம் ஆரம்பிக்கப்பட்டு, அந்த அமைச்சகத்தின் சார்பில் ஒவ்வொரு அரசுத் துறையிலும் ஒரு முதன்மை AI அதிகாரி நியமிக்கப்படுவார். இந்த அமைச்சகம் AI தொழில் நுட்ப முன் முயற்சிகளை முன்னெடுக்கும்.

## 3 தமிழ்நாடு தொழில்முனைவோருக்கு கட்டணமில்லா AI சேவை :

இந்தியாவிலேயே முதன்முறையாக அரசுக்குச் சொந்தமான Ultra - High - Performance GPU Compute Cluster உருவாக்கப்படும். இந்த வசதியை தமிழகத்தில் உள்ள ஸ்டார்ட்-அப் மற்றும் சிறு-குறு-நடுத்தர நிறுவனங்கள் கட்டணமில்லாமல் AI சேவைகளுக்காகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

## 4 அறிவகம் AI நகரம்

இந்தியாவிலேயே முதன்முறையாக AI-க்கென அறிவகம் என்ற பெயரில் ஒரு சிறப்பு நகரம் உருவாக்கப்படும். இதில், AI பல்கலைக் கழகம், சர்வதேச திறன் மையம், செமிகண்டக்டர் ஹார்டுவேர் டெஸ்டிங் லேப், நவீன குடியிருப்புகள் உள்ளிட்ட வசதிகள் இடம்பெறும்.

# வளமான தமிழ்நாடு

E. மாவட்ட சமச்சீர் வளர்ச்சித் திட்டம்



## 1 பின்தங்கிய மாவட்ட வளர்ச்சி பட்ஜெட்

தமிழகத்தில் வளர்ந்த மாவட்டங்களின் தனிநபர் வருமானம், பின்தங்கிய மாவட்டங்களின் தனிநபர் வருமானத்தைவிட மூன்று மடங்கு அதிகமாக உள்ளது. இதற்குக் காரணம், அனைத்து மாவட்டங்களின் வளர்ச்சிகளையும் உள்ளடக்கிய திட்டங்களுடன் கூடிய பட்ஜெட் அறிவிக்கப்பட்டதில்லை. இதைமாற்றி, வளர்ந்த - பின்தங்கிய மாவட்டங்களுக்கு இடையிலான வேறுபாட்டைக் களையும் வகையில் சமச்சீர் வளர்ச்சி பட்ஜெட் அறிவிக்கப்படும். இந்தப் பட்ஜெட்டின் மூலம், தமிழகத்தின் 12 பின்தங்கிய மாவட்டங்களுக்கான வளர்ச்சித் திட்டங்கள் அறிவிக்கப்படும்.

## 2 மாவட்ட சிறப்புத் தொழில் வளர்ச்சித் திட்டம்

இந்தத் திட்டத்தின் கீழ் 38 மாவட்டங்களிலும் அந்தந்த மாவட்டத் தொழில் அமைப்புகள், துறைசார் நிபுணர்கள், மக்கள் பிரதிநிதிகளோடு கலந்தாலோசித்து மாவட்ட சிறப்புத் தொழில் வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படும். இத் திட்டத்தின் கீழ் 5 வருடங்களில் 23 ஆயிரம் கோடி ரூபாய் மாவட்டங்களின் வளர்ச்சிக்காக செலவழிக்கப்படும். சென்னை தவிர்த்து கோவை, மதுரை, திருச்சி, சேலம் உள்ளிட்ட மற்ற முக்கிய நகரங்களில் சுழற்சி முறையில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடத்தப்படும்.

## 3 மேற்கு மண்டலம் (கோவை, திருப்பூர், ஈரோடு, சேலம், நாமக்கல், கரூர், தர்மபுரி, கிருஷ்ணகிரி)

- **திருப்பூரில் டெக்ஸ்டைல் டெக்னாலஜி சென்டர்:** திருப்பூரில் சுற்றுச்சூழலைப் பாதிக்காதவகையில் பசுமைவழி துணி உற்பத்தியை ஊக்குவிக்க 2 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும். திருப்பூர் ஜவுளியை உலகளவில் சந்தைப்படுத்தும் வகையில் திருப்பூர் டெக்ஸ்டைல் டெக்னாலஜி சென்டர் அமைக்கப்படும்.
- **கோவையில் ரோபோட்டிக் மெஷின் மையங்கள்:** கோயம்புத்தூரில் பம்புகள், மோட்டார்கள், சி.என்.சி இயந்திரங்கள், வெட் கிரைண்டர்கள் தயாரிக்கும் சிறு-குறு நிறுவனங்கள் ஏராளமாக உள்ளன. இந்தத் தயாரிப்புகளுக்கு உதவும் வகையில் 1000 கோடி ரூபாய் மதிப்பில் அதி நவீன ரோபோட்டிக் மெஷின் மையங்கள் அமைக்கப்படும். இவற்றை சிறு-குறு தொழில் நிறுவனங்கள் தங்கள் வளர்ச்சிக்காகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

- **கரூர், நாமக்கல் EV Bus பாடி கட்டும் ஓர்க் ஷாப்கள்:** கரூர், நாமக்கல்லில் தற்போது அதிகளவில் செயல்பட்டுக் கொண்டிருக்கும் பஸ், லாரிகளுக்கு பாடி கட்டும் ஒர்க் ஷாப்கள் உள்ளன. அவற்றை EV வாகனங்களுக்கான பாடிகட்டும் ஒர்க் ஷாப்களாக தரம் உயர்த்த 300 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும்.
- **ஈரோடு ஜூவல்லரி மற்றும் டிஜிட்டல் டெக்ஸ்டைல் மையங்கள்:** ஜூவல்லரி மற்றும் டெக்ஸ்டைல் தொழில்களை மேம்படுத்தும் விதமாக, ஈரோடு Design and Commerce Hub அமைக்கப்பட்டு, அதன் கீழ் 3டி ஜூவல்லரி பிரிண்டிங் லேப்கள், துணிகளுக்கான டிஜிட்டல் டிசைன் ஸ்டூடியோக்கள் உருவாக்கப்படும். இந்தப் பொருட்களை உலகளவில் சந்தைப்படுத்தும் வகையில், நேரடி இணைய சந்தை உருவாக்கிக் கொடுக்கப்படும்.
- **சேலம் சிறப்பு பொருள் உற்பத்தி மண்டலம்:** சேலத்தில் 500 கோடி ரூபாய் மதிப்பில் சிறப்பு பொருளாதார மண்டலம் அமைக்கப்பட்டு, விண்வெளித்துறை, மருத்துவம் மற்றும் பாதுகாப்புத்துறைகளில் பயன்படுத்தப்படும் இரும்பு மற்றும் எஃகு உபகரணங்கள் தயாரிக்கும் Special Materials Valley உருவாக்கப்படும்
- **தர்மபுரி-கிருஷ்ணகிரி மாம்பழ தொழில் வழித்தடம்:** தர்மபுரி-கிருஷ்ணகிரி மாவட்டங்களில் 5 ஒருங்கிணைந்த மாம்பழ பதப்படுத்துதல் பூங்காக்கள் அமைக்கப்படும். இவற்றில், குளிரூட்டப்பட்ட கிடங்கு, மாம்பழக்கூழ் உற்பத்தி மற்றும் நேரடி ஏற்றுமதி வசதிகள் ஏற்படுத்தப்படும்.
- **ஓசூர் – கிருஷ்ணகிரி மருந்துப் பொருள் உற்பத்தி மண்டலம்:** உலக சுகாதார நிறுவனத்தின் தரக் கட்டுப்பாட்டுகளுடன் தரம் மிகுந்த மருந்துப் பொருள் தயாரிப்பு நிறுவன மண்டலங்கள் ஓசூர் – கிருஷ்ணகிரி பகுதியில் அமைக்கப்படும்.
- **பொள்ளாச்சி தென்னை தொழிற்பேட்டை** – மதிப்புக்கூட்டப்பட்ட தேங்காய் பொருட்கள், தேங்காய் எண்ணெய் ஆகியவற்றை தயாரிக்க சிறப்புத் தொழிற்பேட்டை அமைக்கப்படும்.

## 4 குறிஞ்சி மண்டலம்: நீலகிரி–கொடைக்கானல் (திண்டுக்கல்)

நீலகிரி-கொடைக்கானல் மலைப்பகுதிகளில் இயற்கை வளங்களும், மனித வளமும் அதிகளவில் இருந்தாலும், அவற்றை அந்தப் பகுதி மக்களின் பொருளாதார உயர்வுக்காகப் பயன்படுத்த முறையான திட்டங்கள் இல்லை. இதை மாற்றும் வகையில், கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

- Nilgris Premium என்னும் தனித்த டீ பிராண்டு உருவாக்கப்பட்டு, அதில் 200 கோடி ரூபாய் முதலீடு செய்யப்படும். மேலும், சர்வதேச சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் 50 தேயிலை எஸ்டேட்டுகளை உள்ளடக்கி டீ சுற்றுலா வழித்தடம் உருவாக்கப்படும்.
- கொடைக்கானல் Homemade சாக்லேட்டுகள், நீலகிரி Cheese, மலைத்தேன் ஆகியவற்றை நேடியாக சிங்கப்பூர், அரபு நாடுகள், ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய உணவுப் பதப்படுத்துதல் பூங்காக்கள் அமைக்கப்படும்.
- பழங்குடியினர் மற்றும் மலைவாழ் மக்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றும் வகையில், அவர்களே நிர்வகிக்கும் Home Stay-க்கள் உருவாக்கப்படும். இதற்காக சிறப்பு Eco-Tourism Board அமைக்கப்படும்.

- மலைவாழ் விவசாயிகளுக்கு உதவும் வகையில் 150 கோடி ரூபாய் செலவில் விவசாய தொழில்நுட்ப ஆராய்ச்சி நிலையம் நீலகிரியில் அமைக்கப்படும்

## 5 வடக்கு மண்டலம் (வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர், திருவண்ணாமலை, கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, செங்கல்பட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம், சென்னை)

- **திருப்பத்தூர்-வேலூர்-ராணிபேட்டை தோல் தொழில் மேம்பாட்டுத் திட்டம்:** திருப்பத்தூர்-வேலூர்-ராணிபேட்டை மாவட்டங்களில் தோல் பதனிடும் தொழிலை ஐரோப்பிய நாடுகளுக்கு இணையான தரத்துடன் செய்வதற்கு 500 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும். ஒவ்வொரு தோல் தொழிலாளருக்கும் திறன் பயிற்சி அளிக்கப்பட்டு, சான்றிதழ் வழங்கப்படும். தோல் பொருட்களுக்கு ISO/BRC சான்றிதழ்கள் வழங்கப்படும்.
- **சென்னை - ஓசூர் - EV வாகன உதிரிபாகங்கள் தயாரிப்பு** - ஆட்டோமொபைல் உதிரிபாகங்கள் தயாரிக்கும் சிறு-குறு தொழில் நிறுவனங்கள் EV வாகன உதிரிபாகங்கள் தயாரிப்பதை ஊக்கப்படுத்தும் வகையில் 1500 கோடி ரூபாய் ஒதுக்கப்படும்.
- **சென்னை - ஓசூர் பாதுகாப்புத்துறை தளவாடங்கள் தயாரிப்பு** - DRDO மற்றும் HAL நிறுவனங்களில் தமிழகத்தின் நிறுவனங்கள் பணிகளை செய்வதற்கு உரிய ஆதரவு மற்றும் வழிகாட்டுதல்கள் வழங்கப்படும்.ஸ்ரீபெரும்புதூர் - ஒரகடம் எலெக்ட்ரானிக் உதிரிபாகங்கள் உற்பத்திப் பூங்கா சாம்சங், பாக்ஸ்கான் போன்ற எலெக்ட்ரானிக் நிறுவனங்கள் சார்ந்து உதிரிபாகங்கள் உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் சிறு-குறு தொழில் நிறுவனங்களுக்காக 500 கோடி ரூபாய் செலவில் உதிரிபாகங்கள் உற்பத்திப் பூங்கா அமைக்கப்படும்.
- **வல்லம் - வடகல் Aerospace Park மேம்பாடு** - ஸ்ரீபெரும்புதூரில் உள்ள வல்லம்-வடகல்லில் உள்ள Aerospace Park தரம் உயர்த்தப்பட்டு, விண்வெளித்துறைக்குத் தேவையான உதிரிபாகங்கள் மற்றும் செயற்கைக் கோள் உதிரிபாகங்கள் தயாரிக்கும் மையமாக மாற்றப்படும்.
- **காஞ்சிபுரம் பட்டுச் சுற்றுலா** - புவிசார் குறியீடு பெற்றுள்ள காஞ்சிபுரம் பட்டின் பெருமையை உலகளவில் கொண்டு செல்ல இ-காமர்ஸ் ஏற்றுமதி இணையத்தளம் உருவாக்கப்படும். கைத்தறி நெசவு உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் சிறு-குறு நிறுவனங்கள் முறைப்படுத்தப்படும். பட்டுச் சுற்றுலா வழித்தடம் ஏற்படுத்தப்படும்.
- **திருவண்ணாமலை கைத்தறி நெசவு மேம்பாடு** - திருவண்ணாமலை கைத்தறி நெசவாளர்களின் பொருளாதாரத்தை உயர்த்தும் வகையில், முதலீட்டு நிதி, இ-காமர்ஸ் விற்பனை சேவைகள் வழங்கப்படும்.

- **கடலூர் சிப்காட் துய்மைப்படுத்தல்** - கடலூர் சிப்காட்டில் கழிவு நீர் சுத்திகரிப்பிற்கும், மாசு கட்டுப்பாட்டிற்காகவும் 500 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும்.
- **விழுப்புரம் - கடலூர் உயிரி எரிபொருள் மற்றும் எத்தனால் தயாரிப்பு யூனிட்** - விழுப்புரம் - கடலூர் மாவட்டங்களில் விவசாயக் கழிவுகளை பக்குவப்படுத்தி உயிரி எரிபொருள் மற்றும் எத்தனால் உற்பத்தி செய்யும் யூனிட்டுகள் அமைக்கப்படும். இதன்மூலம் விவசாயக் கழிவுகளை எரிப்பதால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்பு குறைக்கப்படும்.
- **மறைமலைநகர் சிப்காட் விரிவாக்கம்** - சென்னையில் உள்ள மோட்டார் உதிரிபாகங்கள் உற்பத்திக்கு உதவும் வகையில், மறைமலைநகரில் தற்போது உள்ள சிப்காட் விரிவுபடுத்தப்பட்டு, EV Battery Testing and Certification Lab-கள் அமைக்கப்படும்.
- **சிறுசேரி சிப்காட் ஐடி பூங்கா (Siruseri SIPCOT IT Park)** - சிறுசேரி ஐடி பூங்காவை ஒரு சாதாரணத் தகவல் தொழில்நுட்பப் பூங்காவிலிருந்து மேம்படுத்தி, ஃபின்டெக் (Fintech) மற்றும் செயற்கை நுண்ணறிவு (AI) ஆகிய துறைகளுக்கான ஒரு சிறப்பு மையமாக தமிழக வெற்றிக் கழக அரசு மாற்றும். இதற்கென பிரத்தியேக ஜிசிசி (GCC - Global Capability Centres) வசதிகள் மற்றும் ஒருங்கிணைந்த பணிச் சூழல் (Co-working infrastructure) உள்கட்டமைப்புகள் மேம்படுத்தப்படும்.
- **பசுமை வழி ஸ்டீல் உற்பத்தி** - திருவள்ளூரில் உள்ள 'ஸ்டீல் ரோலிங் மில்' காரணமாக உருவாகும் சுற்றுச்சூழல் பாதிப்பைக் கட்டுப்படுத்தும் வகையில், பசுமை வழி உற்பத்தியை உறுதி செய்ய 300 கோடி ரூபாய் ஒதுக்கப்படும்.
- **மப்பேடு சிப்காட் விரிவாக்கம்** - வாகனங்களுக்குத் தேவையான சென்சார்கள், செமிகண்டக்டர்கள், EV Control Unit ஆகியவற்றின் தேவை அதிகரித்துக் கொண்டே வருகிறது. இதை ஈடுசெய்யும் வகையில், மப்பேடு சிப்காட்டில் மோட்டார் - எலெக்ட்ரானிக்ஸ் உதிரிபாகங்கள் உற்பத்தி மண்டலம் அமைக்கப்படும்.
- **கள்ளக்குறிச்சி சர்க்கரை மற்றும் எத்தனால் உற்பத்தி மேம்பாடு** - கள்ளக்குறிச்சியில் சர்க்கரை ஆலைகளும், எத்தனால் உற்பத்தி நிறுவனங்களும் நவீனமயமாக்கப்படும்.
- **கள்ளக்குறிச்சியில் புதிய தொழிற்பேட்டை** - கள்ளக்குறிச்சியில் சிட்கோ/சிப்காட் தொழிற்பேட்டை உருவாக்கப்படும்.

## 6 மத்திய மண்டலம் (திருச்சி, தஞ்சாவூர், புதுக்கோட்டை, நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திண்டுக்கல், அரியலூர், பெரம்பலூர், திருவாரூர்)

- **திருச்சி Aerospace and Heavy Engineering மண்டலம்** - திருச்சி Aerospace and Heavy Engineering மண்டலமாக அறிவிக்கப்பட்டு, அங்கு முதலீடு செய்யும் நிறுவனங்களுக்கு 10 ஆண்டுகளுக்கு வரிவிலக்கு அளிக்கப்படும். திருச்சி சர்வதேச விமானநிலையத்திற்கு அருகில் 300 ஏக்கர் பரப்பளவில், Aerospace Fabrication பூங்கா அமைக்கப்படும்.

- **தஞ்சையில் வேளாண் உற்பத்திப் பொருள் பதப்படுத்துதல் மண்டலம்** – தஞ்சையில் ஏற்றுமதி வசதிகளுடன் கூடிய அரிசி அரவை ஆலைகள், பதப்படுத்தப்பட்ட உணவு தயாரிப்பு மையங்கள், மஞ்சள் மதிப்புக்கூட்டு மையங்கள் ஆகியவற்றை

- **புதுக்கோட்டை – பெரம்பலூர் கிரானைட் தொழில் மேம்பாடு** – புதுக்கோட்டை, பெரம்பலூரில் கிரானைட் மெருகேற்றுதல் மற்றும் வடிவமைப்பு மையம் உருவாக்கப்படும்.
- **திருச்சி – தஞ்சாவூரில் மருத்துவத் தொழில்நுட்பப் பூங்கா** – மருத்துவக் கருவி உற்பத்தியாளர்கள், மருத்துவ ஸ்டார்ட்-அப் நிறுவனங்களுக்கு உதவும் வகையில், 300 கோடி ரூபாய் செலவில் மருத்துவ தொழில்நுட்பப் பூங்கா அமைக்கப்படும்.
- **அரியலூர் கட்டுமானப் பொருட்கள் ஏற்றுமதி மையம்** – அரியலூரில் தயாரிக்கப்படும் சிமெண்ட், Hollow Blocks, Fly Ash Bricks ஆகியவற்றை அரபு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய ரயில் வசதியுடன் கூடிய ஏற்றுமதி மையம் உருவாக்கப்படும்.
- **பெரம்பலூர் நவீன வேளாண் பொருட்கள் பதப்படுத்தும் மையங்கள்** – உழவர் – உற்பத்தியாளர் கூட்டமைப்பினால் நடத்தப்படும் 5 வேளாண் பொருட்கள் பதப்படுத்தும் மையங்களை நவீனப்படுத்த அரசு நிதியுதவி வழங்கப்படும்.
- **மன்னார்குடி மீன் வளம் மற்றும் மீன் வளர்ப்பு மையம்** – மன்னார்குடி மற்றும் திருவாரூரின் கடலோரப் பகுதிகளில் அபரிமிதமான மீன் வளமும், மீன்வளர்ப்புக்கு சாதகமான சூழலும் நிலவுவதால், அங்கு மீன்வளம் மற்றும் மீன் வளர்ப்புக்கான மையம் அமைக்கப்படும். அங்கு, இறால் மற்றும் மீன்களுக்கான நவீன ஏற்றுமதி வசதிகள் உருவாக்கப்படும்.
- **திருவாரூர் காவிரி வேளாண் உற்பத்திப் பொருள் பதப்படுத்தும் மையம்** – ஏற்றுமதி வசதிகளுடன் கூடிய புழுங்கல் அரிசி அரவை மில்கள், உலர் பழங்களுக்கான யூனிட்டுகள் ஆகியவற்றை உள்ளடக்கிய வேளாண் உற்பத்திப் பொருள் பதப்படுத்தும் மையம் திருவாரூரில் அமைக்கப்படும். ஆர்கானிக் முறையில் விளைவிக்கப்படும் பொன்னி அரிசி உலகளவில் சந்தைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
- **நாகப்பட்டினம் – மயிலாடுதுறை மீன் ஏற்றுமதி மையங்கள்** – குளிரூட்டப்பட்ட சேமிப்புக் கிடங்குகள், நவீன வசதிகளுடன் கூடிய ஏல அரங்குகள், சிங்கப்பூர், மலேசியாவிற்கு ஏற்றுமதி செய்யும் தரத்திலான பதப்படுத்தும் யூனிட்டுகளை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த நவீன மயமாக்கப்பட்ட மீன் ஏற்றுமதி மையங்கள் உருவாக்கப்படும்.

## 7 தெற்கு மண்டலம் (மதுரை, தூத்துக்குடி, திருநெல்வேலி, விருதுநகர், கன்னியாகுமரி, இராமநாதபுரம், சிவகங்கை, தென்காசி, தேனி, திண்டுக்கல்)

- **தென் மண்டல தொழிற்துறை மறுமலர்ச்சி சட்டம்:** நாங்குநேரி சிறப்புப் பொருளாதார மண்டலம் உடனடியாக வரியில்லா வர்த்தகக் கிடங்கு மண்டலமாக (Free Trade Warehousing Zone) மாற்றப்படும்.
- **மதுரை-தூத்துக்குடி** ரயில் மற்றும் தொழில்வழித்தடத்தை இரண்டே ஆண்டுகளில் முடிப்பதற்கு கேபினட் அந்தஸ்துள்ள அதிகாரி தலைமையில் சிறப்பு அரசு நிறுவனம் அமைக்கப்பட்டு, நிர்வாகத் தாமதம், நிலம் கையகப்படுத்துதலில் உள்ள சிக்கல்கள் தீர்க்கப்படும்.
- **குலசேகரப்பட்டினம் விண்வெளித் தொழிற்பூங்கா விரிவாக்கம்** – தூத்துக்குடி – திருநெல்வேலி பகுதி இந்தியாவின் முதல் விண்வெளி தொழில் முதலீட்டு பகுதியாக அறிவிக்கப்படும். 2000 ஏக்கர் பரப்பளவில் விண்வெளி தொழிற்பூங்கா அமைக்கப்பட்டு, அங்கு முதலீடு செய்யும் செயற்கோள் தயாரிப்பு நிறுவனங்கள், டிரோன் தயாரிப்பாளர்கள் உள்ளிட்ட தொழில் முதலீட்டாளர்களுக்கு 10 ஆண்டுகளுக்கு வரி விலக்கு அளிக்கப்படும்.
- **தூத்துக்குடி துறைமுகத்தில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டம்** – தூத்துக்குடி துறைமுகத்தில், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களை செயல்படுத்த முதலீடுகள் செய்யப்படும். இதில் பசுமை ஹைட்ரஜன் உற்பத்தியாளர்களுக்கு பத்துவருட ஊக்கத்தொகை வழங்கப்படும்.
- **மதுரை – விருதுநகர் நெசவுத் தொழில் மறுமலர்ச்சித் திட்டம்** – மதுரை கைத்தறித் தொழிலையும் விருதுநகர் தொழில்களையும் நவீனப்படுத்தவும், விசைத்தறி தொழிற்கூடங்கள் அமைக்கவும், புவிசார் குறியீடு பெற்றுள்ள மதுரை சுங்குடி சேலைகளை சர்வதேச அளவில் சந்தைப்படுத்தவும், கைவினைப் பொருட்கள் விற்கும் மையங்கள் அமைப்பதற்கும் 400 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும்.
- **கன்னியாகுமரி – ராமேஸ்வரம் நீலப் பொருளாதார மண்டலம்** – ஆழ்கடல் மீன்பிடித்தலை நவீனப்படுத்தவும், கடற்பாசி வளர்ப்பை ஊக்கப்படுத்தவும், கடல் சுற்றுலாவை மேம்படுத்தவும், கடல் உணவுகளை பதப்படுத்தி விற்பனை செய்யவும், கடல் அலை மற்றும் காற்று மின்சாரம் தயாரிக்கவும் ஏதுவாக கன்னியாகுமரி-ராமேஸ்வரம் கடலோரப் பகுதிகள் நீலப் பொருளாதார மண்டலமாக அறிவிக்கப்படும்.
- **ஆத்தங்குடி டைல்ஸ் ஏற்றுமதித் முறைப்படுத்துதல்** – ஆத்தங்குடி டைல்ஸ் உற்பத்தி செய்யும் கலைஞர்கள் முறைப்படுத்தப்பட்டு சிறு-குறு தொழிற்துறைக்குள் கொண்டுவரப்படுவார்கள். இதன்மூலம் அவர்களுக்கு உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், ஏற்றுமதி செய்வதற்குமான உதவிகள் செய்யப்படும்.
- **சிவகங்கையில் உள்ள பாரம்பரிய கைத்தறித் தொழில் மீட்டெடுப்பு**- சிவகங்கையில் உள்ள பாரம்பரிய கைத்தறி நெசவாளர்களுக்கு அவர்களின் தொழிலை மேம்படுத்த நிதியுதவி வழங்கப்படும்.
- **திண்டுக்கல் பூட்டு உற்பத்தியாளர்கள் நலன்** – உலகப் புகழ் பெற்ற திண்டுக்கல் பூட்டுத் தயாரிப்பாளர்களை முறைப்படுத்தி அவர்களை சிறு-குறு தொழில் துறைக்குள் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படும். இதன்மூலம் அவர்களுக்கு ஏற்றுமதிச் சான்றிதழ் வழங்கப்பட்டு, சர்வதேச சந்தை வாய்ப்பு உருவாக்கிக் கொடுக்கப்படும்.

- **தென்காசி ஏலக்காய் மற்றும் மசாலாப் பொருட்கள் பதப்படுத்துதல் மையம்** – தென்காசியில் ஏலக்காய் மற்றும் மசாலாப் பொருட்கள் உற்பத்தி செய்யும் விவசாயிகள் சர்வதேச அளவில் தங்கள் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்த பதப்படுத்துதல் மையம் அமைக்கப்படும்.
- **பாபநாசம் பசுமை சுற்றுலா வழித்தடம்** – குற்றாலம் – செங்கோட்டை கணவாய் – மணிமுத்தாறு அருவி ஆகிய இடங்களை உள்ளடக்கி பாபநாசம் பசுமை சுற்றுலா வழித்தடம் அமைக்கப்படும்.
- **தென்காசி தொழிற்பேட்டை** – உணவு மற்றும் மசாலாப் பொருட்கள் பதப்படுத்துதல், கைவினைப் பொருட்கள் தயாரிப்பு ஆகியவற்றை ஊக்கப்படுத்தும் வகையில் தென்காசி அருகே சிட்கோ தொழிற்பேட்டை அமைக்கப்படும்.
- **தேனி ஏலக்காய் பதப்படுத்துதல் மற்றும் மதிப்புக்கூட்டு மையம்** – இந்தியாவின் முதல் ஏலக்காய் பதப்படுத்துதல் மற்றும் மதிப்புக்கூட்டு மையம் தேனி மாவட்டம் போடியில் தொடங்கப்படும்.
- **தேனி – உத்தமபாளையம் டீ வழித்தடம்** – சர்வதேச சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில், தேனி மலைப்பகுதிகளில் சிறு டீ எஸ்டேட்டுகளை உள்ளடக்கிய டீ சுற்றுலா வழித்தடம் அமைக்கப்படும்.
- **தேனி திராட்சை ஒயின் பதப்படுத்துதல் மண்டலம்** – ஒயின் மற்றும் பழச்சாறு தயாரிக்கும் யூனிட்டுகள், ஏற்றுமதி செய்யும் தரத்திலான ஒயின் தயாரிக்கும் வசதிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய தோட்டக்கலை பதப்படுத்துதல் மண்டலம் அமைக்கப்படும்

# வளமான தமிழ்நாடு

F. இந்தியாவின் ஸ்டார்ட்-அப் தலைநகர்

1 **ஸ்டார்ட் – ஸ்மார்ட் தமிழ்நாடு:** இத்திட்டத்தின் கீழ், தமிழகத்தில் 5 ஆண்டுகளில் 10 ஆயிரம் ஸ்டார்ட்-அப் நிறுவனங்களுக்கு 50 லட்சம் வரை முதலீட்டு உதவி, தேவையான பயிற்சி, உரிய ஆலோசனை மற்றும் வழிகாட்டுதல்கள், விரிவான வர்த்தக ஆதரவு உள்ளிட்டவை வழங்கப்படும்.

2 **சர்வதேச தரத்திலான 5 இன்குபேட்டர்கள்:** சென்னை, கோவை, மதுரை, திருச்சி, சேலம் ஆகிய மாவட்டங்களில் இன்குபேட்டர் அமைக்கப்படும். இவற்றின் மூலம், தொழில்முனைவோருக்கு கட்டணமில்லா பணியிடம், முதலீட்டாளர்கள் தொடர்பு, அதி நவீன சாதனங்கள், சட்ட உதவிகள், ஏற்றுமதிக்கான ஆலோசனைகள் ஆகியவை வழங்கப்படும்.

3 **ஸ்டார்ட் – அப் நிறுவனங்களுக்கு Venture Capital Fund:** AI, Deep-Tech, FinTech ஸ்டார்ட் அப் நிறுவனங்களுக்கு அரசு சார்பில் 500 கோடி ரூபாய் Venture Capital Fund வழங்கப்படும். இதை நிர்வகிக்க தொழில் வல்லுநர்களைக் கொண்ட சுயாதீன ஆணையம் அமைக்கப்படும்.

4 **தமிழ்நாடு ஸ்டார்ட்–அப் மாநாடு:** உலகளவில் உள்ள ஸ்டார்ட்-அப் நிறுவனர்கள், முதலீட்டாளர்கள், தொழிற்துறை வல்லுநர்களை ஒருங்கிணைக்கும் வகையில், தமிழ்நாடு ஸ்டார்ட்-அப் மாநாடு ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்படும்.

# வளமான தமிழ்நாடு

G. வழிகாட்டும் தமிழ்நாடு




## 1 EV வாகனங்கள் மற்றும் பேட்டரி தயாரிப்பு

- **2031-க்குள் 20 ஆயிரம் பொது EV சார்ஜிங் ஸ்டேஷன்கள்:** தமிழகம் முழுவதும் 2031-க்குள் 20 ஆயிரம் Fast Charging நிலையங்கள் அமைக்கப்படும்.
- **பேட்டரி செல் தொழிற்சாலைகள்:** பேட்டரி செல் உற்பத்தியில் பிரம்மாண்ட தொழிற்சாலைகள் அமைக்கும் நிறுவனங்களுக்கு 20 சதவீதம் ரொக்க மானியம் வழங்கப்படும். இதன்மூலம், தமிழ்நாடு இந்தியாவில் நம்பர் 1 பேட்டரி உற்பத்தி மாநிலமாக மாறும்.
- லித்தியம் மற்றும் கோபால்ட் மறுசுழற்சி செய்யும் ஆலைகளுக்கு உற்பத்தியுடன் இணைக்கப்பட்ட ஊக்கத்தொகை(PLI Scheme) வழங்கப்படும்.
- பாரம்பரிய மெக்கானிக்குகள் EV மெக்கானிக்குகளாக மாறுவதற்கு பயிற்சி பெற உதவும் வகையில், 10 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும்.
- அடுக்குமாடி குடியிருப்புகளில் EV சார்ஜிங் கட்டமைப்புகளை உருவாக்கும் குடியிருப்போர் நலச் சங்கங்களுக்கு 50 சதவிகித மானியம்(ரூ.50000 வரை) வழங்கப்படும்.
- வணிகப் பயன்பாட்டுக்காக EV வாகனங்களைப் பயன்படுத்துபவர்களுக்கு 5 ஆண்டுகளுக்கு நூறு சதவிகித மோட்டார் வாகன வரி விலக்கு அளிக்கப்படும்.

## 2 இந்தியாவின் முதல் வணிக டிரோன் வழித்தடம்

தமிழ்நாட்டின் 10 மாவட்டங்களில் சிறப்பு வணிக டிரோன் வழித்தடங்கள் உருவாக்கப்படும். இந்த வழித்தடங்களில், டிரோன்களை வைத்து பொருட்களை விநியோகம் செய்வதற்கும், விவசாய நிலங்களில் உரம் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்து தெளிப்பதற்கும், கட்டுமானப் பணிகளை மேற்பார்வையிடுவதற்கும், பேரிடர் மேலாண்மைப் பணிகளைச் செய்வதற்கும் காவல்துறையிடம் அனுமதி பெறத் தேவையில்லை. உள்ளூரில் தயாரிக்கப்படும் டிரோன்களையே காவல்துறை கண்காணிப்புப் பணிகளுக்கும், விவசாய பணிகளுக்கும் பயன்படுத்த வேண்டுமென்பது கட்டாயமாக்கப்படும். இதன்மூலம், டிரோன் தயாரிக்கும் உள்ளூர் ஸ்டார்ட்-அப் நிறுவனங்களின் வளர்ச்சி உறுதி செய்யப்படும்.

## 3 இந்தியாவின் முதல் டிஜிட்டல் நிதி மையம்

கோவையில் i-Tamil FinTech Corridor அமைக்கப்படும். இந்த FinTech ஸ்டார்ட்-அப்கள் Cloud Server-கள் அமைப்பதற்கான செலவுகளில் 30 சதவிகிதம் முதல் மூன்று வருடங்களில் திருப்பிக் கொடுக்கப்படும்.

## 4 உலக கன்டென்ட் மையமாகத் தமிழ்நாடு; AVGC–XR கிரியேட்டிவ் பொருளாதாரம்

அனிமேஷன், விஷுவல் எஃபெக்ட், கேமிங் மற்றும் காமிக்ஸ் (AVGC) ஆகியவை ஒன்றிணைந்த Extended Reality (XR) என்ற பல்திறன் டிஜிட்டல் தொழில்நுட்பம் இன்று வளர்ந்துவரும் துறையாக இருக்கிறது. தமிழ்நாடு, இதில் குறிப்பிடத்தக்க ஆற்றலைக் கொண்டுள்ளது. த.வெ.க. அரசு தமிழகத்தை இதில் உலக அளவிலான படைப்பு மையமாக உயர்த்தும். நமது இளைஞர்களின் திறனை உலகளவில் கொண்டு செல்லவும், நமது பண்பாட்டுப் பெருமையை உலக அரங்கில் எடுத்துக்காட்டவும் இதற்கான பொருளாதாரத் திட்டங்கள் ( Creative Economy Policy) வடிவமைக்கப்படும்.

- **தமிழ்நாட்டில் உருவாகும் படைப்புகளுக்கு மானியம்** – சர்வதேச மற்றும் தேசிய நிறுவனங்கள் தமிழ்நாட்டிலிருந்து மேற்கொள்ளும் அனிமேஷன், கேமிங் மற்றும் திரைப்பட உருவாக்கம் ஆகியவற்றுக்கு அதன் திட்டச் செலவிலிருந்து 25% தொகையை அரசு மானியமாக வழங்கும்.
- **படைப்பாளர் மையம்** – 500 அரசுப்பள்ளிகளில் சிறப்புச் செயல்திறனோடு கூடிய கணினியோடு AVGC மையம் நிறுவப்படும்.
- **முறைசார் டிஜிட்டல் படைப்பாளர்கள்** – யூடியூபர், பாட்காஸ்டர், டிஜிட்டல் கலைஞர் ஆகியோர் MSME போன்று தொழில்சார் அடையாளத்துக்குள் முறைப்படுத்தப்படுவார்கள். இதன்மூலம், அவர்கள் ஜிஎஸ்டி சலுகைகள், மருத்துவ காப்பீடு போன்ற அரசு பலன்களைப் பெறமுடியும்.
- **கேமிங் ஸ்டார்ட்அப்** – கேமிங் ஸ்டார்ட்அப்-களை ஊக்குவிக்க motion-capture ஸ்டுடியோவுடன் கூடிய பயிற்சி மையங்கள்
- **IP பாதுகாப்பு நிதி** – தமிழ் டிஜிட்டல் படைப்பாளர்கள் தங்கள் படைப்புகளை பாதுகாக்க, உலகளவிலான காப்புரிமைகளைக் கொண்டிருக்க IP பாதுகாப்பு நிதி
- **VFX ஸ்டுடியோக்களுக்கு வரிவிலக்கு** – தமிழ்நாட்டின் சிறு நகரங்களில் திறக்கப்படும் VFX ஸ்டுடியோக்களுக்கு ஐந்தாண்டு மாநில ஜிஎஸ்டி திரும்பத் தரப்படும்.

## 5 விண்வெளி தொழில்நுட்பம்; குலசேகரப்பட்டினம் விண்வெளி ஆராய்ச்சி முதலீடு

- இஸ்ரோவின் புதிய விமான ஏவுதளம் தூத்துக்குடி மாவட்டம் குலசேகரப்பட்டினத்தில் அமையவிருக்கும் நிலையில், இந்தியாவிலேயே தமிழ்நாடு விண்வெளி தொழில்நுட்பத்தில் முதன்மை மாநிலமாக மாற த.வெ.க. அரசு கீழ்க்கண்ட முன்னெடுப்புகளை மேற்கொள்ளும்.
- தூத்துக்குடி – திருநெல்வேலி வட்டாரம் இந்தியாவிலேயே முதல் விண்வெளி தொழில்நுட்ப சிறப்பு முதலீட்டுப் பிராந்தியமாக மாற்றப்படும். அடுத்த பத்தாண்டுக்கு இங்கு இது தொடர்பாக முதலீடு செய்பவர்களுக்கு வரி விலக்கு அளிக்கப்படும்.
- செயற்கைக்கோள் (Satellite) & (Propulsion System) மற்றும் ட்ரோன் (Drone) சார்ந்த ஸ்டார்ட்-அப் நிறுவனங்களை ஊக்குவிக்க ரூ.100 கோடி மதிப்பிலான ஸ்கை ஸ்டார்ட் சீட் ஃபண்ட் (Sky Start Seed Fund) உருவாக்கப்படும்.

- அரசின் கட்டமைப்பு உதவி - அரசு சார்பாக விண்வெளி சோதனை மையங்கள் கட்டமைக்கப்படும். விண்வெளி ஆராய்ச்சி தொழில்முனைவோர்கள் இதனை மானிய விலையில் பயன்படுத்திக்கொள்ளலாம்.
- மாணவர்கள் ஆராய்ச்சித் திட்டம் - ஒவ்வொரு ஆண்டும் பொறியியல் கல்லூரியைச் சேர்ந்த பத்து மாணவர்கள் வடிவமைக்கும் செயற்கைக்கோளுக்கு அரசு நிதி ஒதுக்கீடு.

## 6 தூத்துக்குடி துறைமுகத்தில் பசுமை ஹைட்ரஜன் மையம்

சர்வதேச கப்பல் துறையில் முதன்மை எரிபொருளாகப் பசுமை ஹைட்ரஜன் மாறிவருகிறது. காலநிலை மற்றும் நிலவியல் அமைப்பு காரணமாக தூத்துக்குடி முக்கிய கப்பல் சந்திப்பு மையமாக இருக்கிறது. தெற்கு ஆசியாவிலேயே தூத்துக்குடி முதன்மை துறைமுகமாக மாறும் திட்டத்தின் ஒரு படியாக, சர்வதேச கப்பல்களுக்குப் பசுமை அமோனியம் நிரப்பும் மையமாகத் தூத்துக்குடி இருக்க, முதலீடு செய்பவர்களுக்கு, கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய பத்தாண்டுகளுக்கு ஊக்கத்தொகை மற்றும் மானியம் வழங்கப்படும்.


இன்பம்

# மருத்துவம் மற்றும் சுற்றுச்சூழல்



A. அனைத்து குடும்பங்களுக்கும் உலகத்தரமான மருத்துவம்

## 1 மக்கள்நலன் பாதுகாப்பு; அனைத்து குடும்பங்களுக்கும் ரூ.25 லட்சம் மருத்துவக் காப்பீடு

ஒரு சாதாரண குடும்பத்தினர் தரமான மருத்துவத்திற்காக தங்கள் வாழ்நாள் சேமிப்பை அப்படியே செலவு செய்ய வேண்டிய நிலை உள்ளது. த.வெ.க. அரசு அமைந்தவுடன், ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ. 25 லட்சம் மதிப்பிலான 'மக்கள் நலன் காப்பீடு' அட்டை வழங்கப்படும். கேன்சர், இதய அறுவை சிகிச்சை, டயாலிசிஸ், ரோபோடிக் அறுவை சிகிச்சை உட்பட அனைத்து விதமான மருத்துவ சேவைகளுக்கும் இந்த காப்பீடு மூலம் சிகிச்சை பெறலாம்.

## 2 கட்டணமில்லா முழு உடல் பரிசோதனை

தமிழக மக்கள் ஒவ்வொருவருக்கும் வருடத்திற்கு ஒருமுறை கட்டணமில்லா முழு உடல் பரிசோதனை செய்யப்படும். இதன்மூலம், மக்கள் உடல்நிலையை கண்காணித்துக்கொண்டு, புற்றுநோய், சர்க்கரை போன்ற நோய்க்கூறிலிருந்து முன்னெச்சரிக்கையாக இருக்க முடியும்.

## 3 ஐந்து புதிய பன்னோக்கு மருத்துவமனை

தமிழ்நாட்டின் தென்பகுதி தொடங்கி பின்தங்கிய ஐந்து பகுதிகளைத் தேர்ந்தெடுத்து 500 படுக்கைகள், டிஜிட்டல் ஐசியு, நவீன நோய் கண்டறியும் வசதிகள் ஆகியவை கொண்ட ஐந்து பன்னோக்கு சிறப்பு மருத்துவமனைகள் திறக்கப்படும்.

## 4 நவீன ஆரம்ப சுகாதார நிலையங்கள்

அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களும் 'IPHS - 2025' என்ற நிலைக்குத் தரம் உயர்த்தப்படும். மூன்று மருத்துவர்கள், ஒரு லேப் டெக்னீசியன், ஒரு மனநல ஆலோசகர் என மருத்துவ ஊழியர்கள் 24*7 நேரமும் தயாராக இருப்பார்கள்.

## 5 மக்கள் நல நிலையம்; 3000 டெலி மருத்துவத்தோடு கூடிய க்ளினிக்

ஒரு செவிலியர், அருகில் இருக்கும் ஆரம்ப சுகாதார நிலையத்தோடு கலந்தாலோசிக்க டெலி மெடிசின் வசதிகள், நோய் கண்டறியும் கருவிகள் ஆகியவற்றோடு 3,000 மக்கள் நல நிலையங்கள் அமைக்கப்படும். இந்த மக்கள் நல நிலையங்கள் வாரம் முழுவதும் காலை 7 மணி முதல் இரவு 9 மணிவரை செயல்படும்.

# வெற்றித் தமிழ்நாடு

## 6 IVF சந்ததி திட்டம்; குழந்தையில்லா இணையர்களுக்குச் சிகிச்சை

தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து அரசு மாவட்டத் தலைமை மருத்துவமனைகள் மற்றும் அரசு மருத்துவக் கல்லூரிகளில் இலவச ஐவிஎஃப் (IVF - செயற்கை கருத்தரிப்பு) மையங்கள் நிறுவப்படும். இதன் மூலம் ஐவிஎஃப் தொடர்பான அனைத்து சிகிச்சைகளும் கட்டணமில்லாமல் இலவசமாக வழங்கப்படும்.

## 7 கிராம மருத்துவமனைகளை நவீனமாக மாற்றுதல்

இரண்டு படுக்கையுடன் கூடிய டயாலிசிஸ் பிரிவு, நான்கு படுக்கையுடன் கூடிய அவசர சிகிச்சைப் பிரிவு, மகப்பேறு பரிசோதனை மற்றும் ஆப்ரேசன் தியேட்டர், அதிகரிக்கப்பட்ட துரித ஆம்புலன்ஸ் ஆகியவற்றோடு அனைத்து கிராம மருத்துவமனைகளும் நவீனமயமாக்கப்படும்.

## 8 குறைந்த விலையில் மருந்துகள்

அனைத்து அரசு மருத்துவமனைகள் மற்றும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் உயர் ரக கட்டண மருந்துகள், வெளியே கிடைப்பதைவிட 50 சதவீதத்திலிருந்து 90 சதவீதம் வரை மலிவு விலையில் கிடைக்கும்.

## 9 மகிழ்ச்சியான தமிழ்நாடு திட்டம் (Happy Tamil Nadu Mission)

மனநலம், சமூக நல்லிணக்கம் மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காகப் பெருநிறுவனங்கள், சமூக அமைப்புகள் மற்றும் கல்வி நிறுவனங்களுடன் இணைந்து மாநிலம் தழுவிய 'மகிழ்ச்சிச் சூழல் அமைப்பை' (Happiness Ecosystem) தமிழக வெற்றிக் கழக அரசு உருவாக்கும். அளவிடக்கூடிய முடிவுகள் மற்றும் மக்கள் நலனை மையமாகக் கொண்ட நிர்வாகத்தின் மூலம், குடிமக்களின் நல்வாழ்வு மற்றும் மகிழ்ச்சியில் தமிழகத்தைச் சிறந்த மாநிலமாக தவெக முன்னிறுத்தும். இது கருணை மிகுந்த ஆட்சி நிர்வாகத்திற்கு ஒரு தேசிய அளவிலான முன்மாதிரியாக அமையும்.

## 10 மனநல மருத்துவத் திட்டம்

தமிழ்நாட்டில் இன்று பெரிதும் கவனிக்கப்படாத மருத்துவ நெருக்கடியாக மனநல மருத்துவம் இருக்கிறது. ஒவ்வொரு சமுதாய மருத்துவமனைகளுடன் 10 படுக்கைகளுடன் கூடிய மனநல ஆலோசனை மருத்துவ பிரிவு திறக்கப்படும். ஒவ்வொரு உயர்நிலைப்பள்ளியிலும் ஒரு மனநல ஆலோசகர் பணிக்கு அமர்த்தப்படுவார். மனநல மருத்துவத்துக்காக ஆண்டுக்கு ரூ.500 கோடி பட்ஜெட்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

### 11 சித்தாவில் உலக புகழ்பெற்ற அடையாளமாகத் தமிழ்நாடு

சித்தா நலன் சுற்றுலா திட்டத்தைக் த.வெ.க. அரசு வகுக்கும். அரசு அங்கீகாரம் பெற்ற சித்தா மறுசீரமைப்பு சான்றிதழ் வழங்கப்படும். நீலகிரி, கொடைக்கானல், ஏற்காடு, குற்றாலம் ஆகிய இடங்களில் சித்தா மையம் நிறுவப்படும். சித்தா சுற்றுலா நகரங்களான திருவண்ணாமலை, சிதம்பரம், குற்றாலம் ஆகியவற்றோடு இவை இணைக்கப்படும்.

# மருத்துவம் மற்றும் சுற்றுச்சூழல்

## B. தமிழ்நாட்டின் வருங்காலத்தைக் காப்போம்; சுற்றுச்சூழல், காடுகள் மற்றும் காலநிலை மாற்றம் குறித்த அக்கறைகள்

### 1 தமிழ்நாடு காலநிலை பட்ஜெட் ரூ.3000 கோடி

ஐ.நா. குறிப்பிடும் காலநிலை மாற்றத்திற்கு எதிரான நடவடிக்கைகளில் தமிழ்நாடு சிறந்து விளங்கக் காலநிலை பட்ஜெட்டாக ரூ.3000 கோடி ஒதுக்கப்படும். வேறு எதற்கும் பயன்படுத்த முடியாத இந்த நிதி, புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வளத்தை நோக்கி மாநிலத்தை அழைத்துச் செல்லவும், பசுமை முதலீட்டை ஈர்க்கவும் மட்டும் செலவிடப்படும்.

### 2 மரணத்தைத் தவிர்க்கும் பேரிடர் மேலாண்மை

புயல், வெள்ளம், வெப்ப அலை போன்ற சூழலியல் பேரிடர்களுக்கு எதிராகச் சரியான முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்காததால் அதிக உயிரிழப்புகள் ஏற்படுகிறது.
38 மாவட்டங்களிலும் ஒருங்கிணைந்த பேரிடர் மேலாண்மை அலுவலகம், சென்னை உள்ளிட்ட 5 கடலோர நகரங்களில் வெள்ள தடுப்பு கட்டமைப்பு, உள்ளூர் வெப்ப அலையைக் கணிப்பது தொடங்கி உடனடி மருத்துவ பரிசோதனை வரை மேற்கொள்ள 38 மாவட்டங்களிலும் வெப்ப அலைக்கு பிரத்தியேக பேரிடர் மேலாண்மை அலுவலகம் போன்றவை உருவாக்கப்படும்.

### 3 நீடித்த ஆற்றல் பொருளாதார பிரிவு

முதலமைச்சரின் அலுவலகத்தின் கீழ் நேரடியாக இயங்கும் நீடித்த ஆற்றல் பொருளாதாரப் பிரிவு உருவாக்கப்படும். நீடித்த ஆற்றலுக்கான பொருளாதாரத்தை வளர்க்கப் பசுமைப் பத்திரங்களை வழங்குவது, காலநிலை பாதுகாப்போடு தொடர்புடைய புதிய கண்டுபிடிப்புகளுக்காக நிதி ஒதுக்குவது, நீராதாரங்களை மீட்டுருவாக்குவது மற்றும் கார்பன் உமிழ்வைக் கட்டுப்படுத்துவது போன்ற காலநிலைப் பாதுகாப்பு செயல்பாடுகளுக்கு நிதி ஒதுக்கீட்டுடன் திட்டம் வகுக்கப்படும்.

## 4 பசுமை தமிழ்நாடு திட்டம்; ஐந்தாண்டில் 33% காடுகள்

2031-ஆம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டின் காடுகளின் பரப்பை 33% ஆக அதிகரிக்க த.வெ.க. அரசு உறுதி கொண்டுள்ளது.

- பழங்குடியினருடன் இணைந்து கிழக்குத் தொடர்ச்சி மலைகளில் உள்ள சந்தன மரங்கள் சீரமைப்பு மற்றும் அதனால் உருவாகும் பொருளாதார வாய்ப்புகள் போன்றவை ஒழுங்குபடுத்தப்படும்.
- காடுகளுக்குத் தொடர்பற்ற வெளிநாட்டு விலங்குகளுக்குப் பதிலாகக் காடுகளுடன் அதிகம் தொடர்புடைய உள்ளூர் விலங்குகள் வாழ்வமர்த்தப்படும்.

## 5 சுத்தமான ஆறுகள்

தொழிற்சாலைகளுக்கு உரியக் காலநிலை கட்டுப்பாடுகளை இதுவரை ஆண்ட அரசுகள் பின்பற்றாததால் தமிழ்நாட்டின் மூன்று பெரும் ஆறுகளான காவிரி, வைகை, தாமிரபரணி ஆகியவை அழிவைச் சந்தித்துள்ளன. த.வெ.க. அரசில் இது உறுதியாகத் தடுக்கப்படும். ஈரோடு, திருப்பூர் ஆகிய பகுதிகளில் நெசவாலைக் கழிவுகள் ஆற்றில் கலப்பது முற்றிலும் தடுக்கப்பட்டு, மாற்று ஏற்பாடுகளில் கவனம் செலுத்தப்படும். திருச்சியில் காவிரிக் கரை பூங்கா, மதுரையில் வைகைக் கரை பூங்கா, திருநெல்வேலியில் தாமிரபரணிக் கரை பூங்கா ஆகியவை கட்டப்படும்.

## 6 காடுகள் மற்றும் மனிதர்கள்

நீலகிரி, கோவை, தருமபுரி, கிருஷ்ணகிரி, சேலம் மற்றும் ஈரோடு ஆகிய மாவட்டங்களில் உள்ள காடுகளில் பழங்குடியின மக்களுக்காக 50 கிமீ நீளமுள்ள சோலார் ஆற்றல் முனையம், இரவுகளில் ஜிபிஎஸ் தொடர்பு வாகனங்களுடன் 500 வனப்பாதுகாப்பு அதிகாரிகள் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுவர், வனவிலங்குகளால் பலியாகும் மக்களுக்கு ரூ. 10 லட்சம் நிவாரணம், கடும் காயமடைபவர்களுக்கு ரூ.5 லட்சம் நிவாரணம் வழங்கப்படும். பயிரிழப்புகளுக்கு உடனடியாக நிவாரணம் வழங்கப்படும்.

## 7 சதுப்புநில காடுகள் பாதுகாப்பு

2004-ஆம் ஆண்டு சுனாமியிலிருந்து பெருவாரியான மக்களை காப்பாற்றிய காரணியாகச் சதுப்புநில காடுகள் இருக்கின்றன. அவை, வனத்துறையுடன் இணைக்கப்பட்டுப் பாதுகாப்பு மண்டலமாக காக்கப்படும்.

## 8 தூய காற்று

தமிழ்நாட்டின் காற்று மாசு அளவீடு பலநேரங்களில் அபாய நிலையை அடைகிறது. காற்று மாசை கட்டுப்படுத்த ஆண்டுக்கு ரூ. 500 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, திட்டங்கள் வகுக்கப்பட்டுக் கண்காணிக்கப்படும்.

## 9 கூவம் மற்றும் அடையாறு நதிகள் மீட்பு இயக்கம்

சென்னை கூவம் மற்றும் அடையாறு ஆறுகள், சூழலியல் மறுமலர்ச்சி மற்றும் மாசுக்கட்டுப்பாட்டை உறுதி செய்வதற்காக, 'இயக்க வடிவிலான' (Mission-mode) அணுகுமுறையின் மூலம் மீட்டெடுக்கப்படும்.

## 10 பள்ளிக்கரணை சதுப்புநிலப் பாதுகாப்பு மற்றும் மறுசீரமைப்பு

பள்ளிக்கரணை சதுப்புநிலத்தில் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்படும்; மேலும், ஒரு முக்கியமான நகர்ப்புற ஈரநிலம் மற்றும் பல்லுயிர் மண்டலமாக இந்தச் சதுப்புநிலம் பாதுகாக்கப்பட்டு மீட்டெடுக்கப்படும்.



# உலகத்தரமான கட்டமைப்பு



A. மின்சாரம் மற்றும் பசுமை ஆற்றல்

## 1 24 மணிநேரமும் தங்குதடையற்ற மின்சாரம்

இன்றைய தேதியில் தமிழ்நாட்டின் கிராமங்களில் 2 மணிநேரத்திலிருந்து 8 மணிநேரம் வரை அறிவிக்கப்படாத மின்தடை நெருக்கடி இருக்கிறது. நமது த.வெ.க. ஆட்சியில், 24 மணிநேரமும் தங்குதடையற்ற மின்சாரம் உறுதி செய்யப்படும். 10 ஆயிரம் overloaded feeders இணைப்போடு மேற்கொள்ளும் உற்பத்தி மூலம் TANGEDCO மின்தடையில்லாத நிலையைச் சாதிக்கும்.

## 2 சோலார் மானியம்; 1kW—க்கு ரூ. 35,000, 2kW—க்கு ரூ.70,000, 3kW+க்கு ரூ.1 லட்சம்

ஒவ்வொரு வீட்டின் கூரையிலும் சோலார் பேனல் பொருத்துவதன் மூலம் நம் மாநிலம் மின்சாரத்தில் தன்னிறைவு பெற்ற மாநிலமாக மாறும். த.வெ.க. அரசு சோலார் மின்சாரத்திற்கு மாறுபவர்களுக்கு 1kW-க்கு ரூ. 35,000, 2kW-க்கு ரூ.70,000, 3kW+க்கு ரூ.1 லட்சம் என்ற வீதத்தில் மானியம் வழங்கும்.

## 3 மாதம் ஒருமுறை மின்கட்டணம்

தற்போது இருக்கும் இரண்டு மாதத்திற்கு ஒருமுறை மின்கட்டணக் கணக்கீடு நீக்கப்பட்டு, மாதம் ஒருமுறை மின்கட்டணம் கணக்கிடுவது அமல்படுத்தப்படும்.

## 4 TANGEDCO சீர்திருத்தம்; அடுக்குமாடிக் குடியிருப்பு மற்றும் சிறுகுறு தொழில்களுக்கான மின்கட்டணத்தைக் குறைத்தல்

TANGEDCO மின் பகிர்மானத்தின் முறையற்ற செயல்திறன் மற்றும் திருட்டு காரணமாக 16% வரை மின்சாரம் இழப்பு ஏற்படுகிறது. இதன் மதிப்பு ஆண்டுக்கு சுமார் ரூ.3000 கோடி. இதனைத் தடுக்க ஐந்தாண்டு சீரமைப்பு திட்டத்தைக் த.வெ.க. அரசு கொண்டுவரும். இதன்மூலம் - 18 ஆயிரம் பழைய மின்மாற்றிகள் மாற்றப்படும்; AT&C இழப்புகளை 16% லிருந்து 10% ஆக குறைக்க நேரத்திற்கு ஏற்ப மின்கட்டண முறை, அடுக்குமாடிக் குடியிருப்பு பொதுப் பகுதிகளில் தற்போது வசூலிக்கப்படும் வணிக கட்டணத்திற்குப் பதிலாகக் குடியிருப்பு கட்டணம் வசூலிப்பது ஆகியவற்றின் மூலம் 30 லட்சம் நகர அடுக்குமாடி குடியிருப்புவாசிகளின் மின்கட்டணம் குறைக்கப்படும்.

### 5 2031–ஆம் ஆண்டுக்குள் 50% புதுப்பிக்கத்தக்க வளங்கள் பயன்பாடு மற்றும் முழுவதும் மின்சார பேருந்துகள் இயக்கம்

2031-ம் ஆண்டுக்குள் தமிழகப் பயன்பாட்டின் 50%-ஐ புதுப்பிக்கத்தக்க வளங்கள் மூலம் பெற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுச் செயல்படுத்தப்படும். நகர காற்று மாசு, எரிசக்தி விலைவாசி, கார்பன் உமிழ்வு ஆகியவற்றைக் கட்டுப்படுத்த TNSTC கீழ் இயங்கும் 5000 பேருந்துகளும் முழுவதும் மின்மயமாக்கப்படும்.

# உலகத்தரமான கட்டமைப்பு

## B. நவீன கட்டமைப்பு

### 1 மெட்ரோ பரவலாக்கம்; சென்னை மெட்ரோ 2–ஆவது கட்டம், கோவை மெட்ரோ முதல்கட்டம் மற்றும் மதுரை மெட்ரோ திட்ட வரைவு

த.வெ.க. அரசு 118.9 கி.மீ தூரம் கொண்ட சென்னை மெட்ரோ ரயில் 2-வது கட்டத்தை விரைவில் நிறைவு செய்யும், 40 கி. மீ தொலைவு கொண்ட கோவை மெட்ரோ ரயில் முதல் கட்டத்தைத் தொடங்கி நிறைவு செய்யும். பதவியேற்ற 18 மாதங்களில் மதுரை மெட்ரோ ரயில் திட்டத்திற்கான விரிவான வரைவு அறிக்கை தாக்கல் செய்யப்படும். ஒவ்வொரு மெட்ரோ நிலையத்திலிருந்தும் அருகே உள்ள முக்கிய சந்திப்புகளுக்கு மின்சார ஆட்டோ சேவை வழங்கப்படும்.

### 2 தூத்துக்குடி விமான நிலையத்தில் இரவில் விமான சேவை, சரக்கு முனையம் மற்றும் கோவை விமான நிலையம் அரசு–தனியார் பங்களிப்பில் விரிவாக்கம்

தூத்துக்குடி விமான நிலையத்தில் இரவில் விமான சேவை வழங்கவும், சரக்கு பரிமாற்றத்திற்கான தனி முனையம் நிறுவ வேண்டும் என்றும், கோவை விமான நிலையத்தை அரசு-தனியார் பங்களிப்பில் சர்வதேச தரத்திற்கு விரிவாக்கம் செய்யவும் ஒன்றிய அரசிடம் வலியுறுத்தப்படும்.

### 3 ரயில் இணைப்புப் பாதை திட்டம்

தமிழ்நாட்டில் ரயில்வே இணைப்பு பாதைகள் தொடர்ந்து ஒன்றிய அரசுகளால் புறக்கணிக்கப்பட்டு வருகின்றன. திண்டிவனம் - திருவண்ணாமலை பாதை, அருப்புக்கோட்டை வழியாகத் தூத்துக்குடி-மதுரை பாதை, தாம்பரம் - செங்கல்பட்டு இடையேயான நான்காவது பாதை ஆகியவை அறிவிக்கப்பட்டு இன்னும் நிதி ஒதுக்கப்படாமல் இருக்கிறது. த.வெ.க. அரசு, 'தமிழ்நாடு ரயில் இணைப்புப் பாதை திட்டத்தை' தயார் செய்து, குறிப்பிட்ட கால அளவில் திட்டத்தை நடைமுறைப்படுத்தி நிறைவு செய்யுமாறு ஒன்றிய அரசை வலியுறுத்தும்.

# வெற்றித் தமிழ்நாடு

## 4 துறைமுகம்

கன்னியாகுமரி மாவட்டத்தில் எட்டு ஆண்டுகளாகக் கிடப்பில் இருக்கும் இனயம் சந்திப்பு துறைமுகம் முழுவதுமாக செயல்பாட்டுக்கு வரவும், கடலூர் துறைமுகத்தை புது தொழில்துறை துறைமுகமாக மேம்படுத்தவும் த.வெ.க. அரசு நடவடிக்கை எடுக்கும்.

## 5 பல்திறன் சேவை பரிமாற்ற பூங்கா

சென்னை துறைமுகம்-ரயில் சுற்று வட்டாரப் பகுதி, மேற்கில் கோவை தொழில்சாலை வட்டார இடத்தில், தெற்கில் தூத்துக்குடியில் என மூன்று இடங்களில் சரக்கு போக்குவரத்து மற்றும் சரக்கு பாதுகாப்புப் பணிகளை ஒருங்கிணைக்கும் பல்திறன் சேவை பரிமாற்ற பூங்கா நிறுவப்படும். இதன்மூலம், தமிழக வர்த்தகர்களின் ஏற்றுமதி செலவுகள் 20%-லிருந்து 30% வரை குறையும் மற்றும் தென்கிழக்கு ஆசியாவில் தமிழ்நாடு சிறந்த வர்த்தக பரிமாற்ற மையமாக வளர்ச்சியடையும்.

## 6 தொழில்நுட்பத்துடன் கூடிய சாலைகள் மற்றும் விபத்தில்லா போக்குவரத்து

தமிழ்நாடு நெடுஞ்சாலைகளில் தொழில்நுட்பக் கண்காணிப்புகள் மற்றும் விபத்து பகுதிகளில் ஏஐ தொழில்நுட்ப உதவியுடன் கூடிய வேகக் கட்டுப்பாடுக் கேமராக்கள் மூலம் போக்குவரத்து முறைகேடுகள் மற்றும் விபத்துகள் தடுக்கப்படும்.

விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் ஆட்டோ, வாடகை கார் (Cab) மற்றும் தனியார் வாகன உரிமையாளர்கள் போன்ற தனிநபர்களுக்கு நிதி ஊக்கத்தொகை வழங்கப்படுவதோடு, அவர்கள் 'நல்ல சமாரியன் உயிர் காப்பாளர் விருது' (Good Samaritan Life-Saver Award) வழங்கி கௌரவிக்கப்படுவார்கள்.

## 7 சேதமற்ற நெடுஞ்சாலைகள்

தமிழ்நாடு நெடுஞ்சாலைகள், மாவட்ட மற்றும் கிராம சாலைகளுக்காக தற்போது ஆண்டுக்கு ரூ.20,000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படுகிறது. ஆனால், இன்னும் சாலைகள் குண்டும் குழியுமாக இருப்பதால் இருசக்கர வாகனங்கள் விபத்துக்குள்ளாவது போன்ற நிலையே நீடிக்கிறது. த.வெ.க. ஆட்சியில், உடனுக்குடன் சாலைகளின் சேதங்களைச் சரிசெய்ய மட்டும் ஆண்டுக்கு ரூ. 2000 கோடி செலவிடப்படும். அரசு அறிமுகப்படுத்தும் செயலியின் மூலம், சாலைகளில் குறைபாடுகள் தென்பட்டால் மக்கள் உடனுக்குடன் போட்டோவுடன் தகவல் தெரிவிக்கலாம்.

## 8 நாகப்பட்டினத்திலிருந்து இலங்கை, மலேசியாவுக்குக் கப்பல் போக்குவரத்து

பண்டைய தமிழர்களின் கடல்சார் பயணங்களை மீட்டுருவாக்கம் செய்யும் விதமாக நாகை துறைமுகத்திலிருந்து கொழும்பு மற்றும் கோலாலம்பூர் ஆகிய நகரங்களுக்கு கடல்சார் பயண போக்குவரத்தைத் தொடங்க தேவையான ஏற்பாடுகளைக் த.வெ.க. அரசு மேற்கொள்ளும்.

# உலகத்தரமான கட்டமைப்பு

C. கிராம வளர்ச்சி

## 1 அனைத்து பஞ்சாயத்துகளையும் இணைக்கும் சாலை

அடுத்த ஐந்தாண்டில் அனைத்து பஞ்சாயத்துகளும் நெடுஞ்சாலைகளுடன் இணைக்கப்படும். பள்ளி, ஆரம்பச் சுகாதார நிலையம், முக்கிய இடங்கள் ஆகிய அனைத்தையும் தொடர்புகொள்ளும் விதமாக ஒட்டுமொத்த இடங்களையும் சாலைகள் இணைக்கும்.

## 2 கிராமப்புற ஊரக வேலை உறுதித்திட்டம் 150 நாட்களாக உயர்த்தப்படும்

கிராமப்புற ஊரக வேலை உறுதித்திட்டம் 150 நாட்களாக உயர்த்தி, உரிய வருவாய் நிர்ணயிக்க முயற்சி செய்யப்படும்.

## 3 மாதிரி கிராமங்கள்; 5000 கிராமங்களுக்கு நகர்ப்புற நவீன கட்டமைப்பு

தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டத்தின் ஒருபகுதியாக முதலில் 5000 கிராமங்களை மாதிரியாக எடுத்துக்கொண்டு, அங்கு நகர்ப்புறத்தைப் போல் மேம்பட்ட அதிநவீன கட்டமைப்புகள் மேற்கொள்ளப்படும். அனைத்து நீர்வளங்களையும் புதுப்பிப்பது, விளையாட்டு மைதானங்கள், பூங்காக்கள், சமுதாயக்கூடங்கள், அனைத்து தெருக்களிலும் தெருவிளக்கு, வீட்டுக்கு வீடு சென்று திடக்கழிவுகளை பெறுவது மற்றும் கிராமத்தின் அடையாளமான இயற்கை வளங்களை வைத்து கிராம காடுகளை உருவாக்குவது ஆகியவை உருவாக்கப்படும். ஒவ்வொரு ஆண்டு பொங்கலின்போதும் மாதிரி கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்படும். சிறந்த அளவில் செயல்படும் கிராமத்திற்கு வளர்ச்சிக்காக ரூ.50 லட்சம் பரிசு வழங்கப்படும்.

## 4 கிராமப்புறத் தொழில் உள்கட்டமைப்புத் திட்டம்

தொழில்முறை கொட்டகைகள், மின்சாரம், குடிநீர், சாலைகள், தளவாடங்கள் (Logistics), சேமிப்புக் கிடங்குகள், டிஜிட்டல் இணைப்பு மற்றும் தொழிலாளர்களுக்கான அடிப்படை வசதிகள் உள்ளிட்ட ஒருங்கிணைந்த உள்கட்டமைப்புகளுடன் கூடிய 1,000 கிராமப்புறத் தொழில் தொகுப்புகளை (Village Industry Clusters) தமிழக வெற்றிக் கழக அரசு உருவாக்கும். இந்தத் தொகுப்புகள் சுயசார்பு கொண்ட கிராமப்புறப் பொருளாதார மையங்களாகச் செயல்பட்டு, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களையும் (MSMEs) ஸ்டார்ட்-அப்களையும் ஈர்க்கும். இதன் மூலம் லட்சக்கணக்கான வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படுவதோடு, சீரான பிராந்திய வளர்ச்சியும் உறுதி செய்யப்படும்.

## 5 கிராம சந்தைகள்

ஒவ்வொரு கிராமங்களிலும் நிரந்தர மற்றும் வாரச் சந்தைகள் நவீன கட்டமைப்புடன் மேம்படுத்தப்படும். எடை இயந்திரம், விலை காட்டும் அறிவிப்புகள், பசுமை பொருட்களைச் சேமிக்க குளிர்பதன சேமிப்பான், நகரங்களின் மொத்த வியாபாரிகளுடன் நேரடி இணைப்பு வசதி, அரசு டிஜிட்டல் விற்பனை தளங்களுடன் இணைந்த சேவை ஆகியவற்றுடன் சந்தைகள் செயல்படும்.

# உலகத்தரமான கட்டமைப்பு

D. நகர வளர்ச்சி

## 1 2031–க்குள் சேரியில்லா நகரங்கள்

2031-ம் ஆண்டுக்குள் அனைவருக்கும் முறையான வீடு, வடிகால் மேலாண்மை மற்றும் வீடுகளுக்கு உரிய உரிமம் ஆகியவை ஒப்படைக்கப்பட்டு சேரியில்லா நகரங்கள் என்ற குறிக்கோள் நிறைவு செய்யப்படும்.

## 2 பண்பாட்டு நகரங்கள் திட்டம்; தஞ்சாவூர், மதுரை, காஞ்சிபுரம் மற்றும் மகாபலிபுரம் போன்ற பண்பாட்டு நகரங்களை பாதுகாத்தல்

தஞ்சாவூர், மதுரை, காஞ்சிபுரம் மற்றும் மகாபலிபுரம் ஆகிய பண்பாட்டு நகரங்களின் பெருமையைப் பாதுகாக்கும் மற்றும் மேம்படுத்தும் விதமாகக் கட்டமைப்புகளைப் பாதிக்காத புதுப்பிப்பு, வடிகால் சீரமைப்பு, உள்ளூர் கலைஞர்கள் மற்றும் கைவினைகளுக்குச் சிறப்புப் பயிற்சிகள் மற்றும் உள்ளூர் பொருளாதாரத்தை உயர்த்தும் கலாசார சுற்றுலா ஆகியவற்றை நோக்கிய சிறப்புத் திட்டங்கள் வகுக்கப்படும். அதற்காக, 'தமிழ்நாடு பண்பாட்டு நகரங்கள் ஆணையம்' உருவாக்கப்படும்.

# வெற்றித் தமிழ்நாடு

## 3 காலநிலை மாற்றத்தைச் சமாளிக்கும் தமிழ்நாடு பெருந்திட்ட வரைவு 2045 (Climate–Resilient Tamil Nadu Master Plan 2045)

அனைத்து மாவட்டங்களுக்குமான நிலையான மற்றும் காலநிலை மாற்றத்தைச் சமாளிக்கக்கூடிய ஒரு யதார்த்தமான 'காலநிலை மாற்றத்தைச் சமாளிக்கும் பெருந்திட்ட வரைவு 2045'-ஐ தமிழக வெற்றிக் கழக அரசு உருவாக்கும். எஞ்சியுள்ள நீர்நிலைகள் மற்றும் இயற்கை சுற்றுச்சூழல் அமைப்புகளைக் கண்டறிந்து மீட்டு சீரமைப்பதோடு, நீர்நிலை ஆக்கிரமிப்புகளுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

## 4 சென்னை, தூத்துக்குடி, கடலூர், நாகை மற்றும் கன்னியாகுமரி ஆகிய நகரங்கள் வெள்ள அபாயத்திலிருந்து தடுக்கப்படும்

சென்னை உள்ளிட்ட வெள்ள அபாய நகரங்களில் மேம்பட்ட மழைநீர் வடிகால்கள் நிறுவப்படும். அனைத்து மாநகராட்சிகளிலும் குறைந்தது 3% நிலங்கள் சதுப்பு நிலமாக பாதுகாக்கப்பட்டு, மழைநீர் வெள்ளமாகத் தேங்காமல் நிலத்தடியில் பாதுகாக்கப்படும்.

## 5 உலகத்தரத்தில் சென்னை, திருச்சி, மதுரை, கோவை மாநகரங்கள்

எதிர்காலத்திற்கான நீடித்த திட்டங்கள், குடியிருப்பு நெருக்கடிகளை போக்கும் விதமாகத் திட்டமிட்ட வளர்ச்சி, நவீன கட்டமைப்பு மற்றும் மேம்பட்ட வாழ்க்கை ஆகியவற்றோடு சென்னை, திருச்சி, மதுரை, கோவை ஆகிய மாநகரங்கள் உலகத்தரத்தில் உருவாக்கப்படும்.

## 6 பல்வேறு வகையான பார்க்கிங்

அரசு மற்றும் தனியார் பங்களிப்போடு மாநகரங்களில் பல்வேறு வகையான நவீன பார்க்கிங் வசதிகள் கொண்டுவரப்படும்.

## 7 மக்களுக்கான நவீன தெருக்கள்

25 மாநகராட்சிகளிலும் சாலைகளோடு நேரடியாக இணைந்த தெருக்கள், உரிய நடைபாதை, மிதிவண்டி செல்வதற்கான தனி வழி, குறுக்குத் தெருக்கள் சரியான இணைப்பு, எல்.இ.டி நவீன தெருவிளக்கு ஆகியவற்றோடு மக்களுக்கான நவீன தெருக்களாக உருவாக்கப்படும்.

## 8 பொதுக் கழிப்பறை உள்கட்டமைப்புத் திட்டம்

நகரச் சாலைகளின் இருபுறமும் தலா 1 லட்சம் கிலோமீட்டர் தூரத்தை உள்ளடக்கி, சுமார் 1.5 லட்சம் பொதுக் கழிப்பறைகளை தமிழக வெற்றிக் கழக அரசு கட்டும். இதன் மூலம் 500 மீட்டர் முதல் 1 கிலோமீட்டர் தொலைவிற்குள் கழிப்பறை வசதி கிடைப்பது உறுதி செய்யப்படும். மேலும், அனைத்து பெட்ரோல் பங்குகள், பேருந்து நிலையங்கள், மெட்ரோ மற்றும் இரயில் நிலையங்களில் பாதுகாப்பான மற்றும் சுகாதாரமான கழிப்பறை வசதிகள் ஏற்படுத்தப்படும்.

## 9 சொத்து வரி குறைப்பு

திமுக அரசால் விதிக்கப்பட்ட கடுமையான சொத்து வரி உயர்வைக் குறைக்கும் வகையில், புதிய மற்றும் நியாயமான சொத்து வரி கட்டமைப்பை தமிழக வெற்றிக் கழக அரசு அறிமுகப்படுத்தும். இது குடியிருப்பு உரிமையாளர்களின் வரிச் சுமையைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டு செயல்படுத்தப்படும்.




## மக்கள் அரசு; உண்மை மற்றும் நேர்மையான நிர்வாகம்

A. 21-ம் நூற்றாண்டிற்கான அரசு; நமது அரசாங்கம் நேர்மை, பொறுப்புடைமை, வெளிப்படைத்தன்மை மற்றும் மக்கள் நலனை முதன்மையாகக் கொண்டிருக்கும்.

### 1 நமது ஒவ்வொரு அரசுத் திட்டமும் உறுதியாகவும், நேரடியாகவும் மக்களுக்குச் சென்றடையும் வகையில் இருக்கும். அந்தவகையில், இந்தியாவிலேயே முதன்முதலாக எந்தவித ஆவணங்களையும் வலுக்கட்டாயமாக மக்களிடம் நிரபந்திக்காமல் (No-Application) மக்களுக்கு நேரடியாக மக்கள் நலத்திட்டங்களைக் கொண்டுசெல்லும் அரசாக நமது அரசு இருக்கும்.

இன்று, அரசின் திட்டங்களை மக்கள் பெறுவதற்குத் தகுதி, விண்ணப்பங்களைச் சரியாகப் பூர்த்தி செய்வது, சமபந்தப்பட்ட அலுவலகத்தைத் தொடர்பு கொள்வது, அலுவலர்களுக்கு லஞ்சம் கொடுப்பது ஆகிய பல்வேறு நிர்பந்தங்கள் ஏற்படுகிறது. இது நியாயமற்ற வகையில் மக்களை ஏமாற்றும் முறையே தவிர, மக்கள்நல அரசியல் கிடையாது. இந்நிலையில், அடுத்த ஐந்திலிருந்து ஏழாண்டுக்குள் நமது த.வெ.க. ஆட்சி, தமிழ்நாட்டை இந்தியாவிலேயே முதன்முதலாக எந்தவித 'ஆவணங்களையும் வலுக்கட்டாயமாக மக்களிடம் நிர்பந்திக்காமல் (No-Application) மக்கள் நலத்திட்டங்கள் செயல்படுத்தும் மாநிலமாக' முன்னேற்றும். தொழில்நுட்பத்தின் உதவியில் ஆதார், குடும்ப அட்டை, குடும்ப தகவல்கள் மற்றும் செயல்பாடுகள் ஆகியவை அடங்கிய டிஜிட்டல் தகவல்கள் மூலம், நலத்திட்டங்களுக்குத் தகுதியான நபரைக் கண்டறிவோம். தகுதிவாய்ந்த பயனாளர்கள் எந்தவித விண்ணப்ப நடைமுறையும் இல்லாமல் திட்டங்களின் பலனைப் பெறுவார்கள்.

"முதல்வரின் மக்கள் சேவை நண்பர்" மூலம் திட்டத்தின் பயன்கள் பயனாளர்களின் வீடுத் தேடிக் கொண்டு சேர்க்கப்படும்.

### 2 சேவை உரிமைச் சட்டம்; சட்டப்படி உரிய நேரத்தில் அனைவருக்கும் சேவை

பிறப்புச் சான்றிதழ், நிலத்திற்கான பட்டா, சாதிச் சான்றிதழ் போன்ற அரசின் அடிப்படை ஆவணங்களை மக்கள் பெறுவதற்கு இப்போது வாரக்கணக்கில் செலவாகிறது. 500 அரசு சேவைகளின் பலனை, குறித்த நேரத்தில் மக்கள் பெறுவதற்கு, த.வெ.க. அரசு பொறுப்பேற்ற நூறு நாட்களுக்குள் சட்டம் இயற்றப்படும்.

## 3 வெற்றித் தமிழ்நாடு சூப்பர் செயலி; உங்கள் மொபைலில் அரசு

அரசு சேவையைப் பெற மக்கள், அரசு அலுவலகங்களில் அலைவதைத் தடுக்கும் விதமாக, 'வெற்றித் தமிழ்நாடு சூப்பர் செயலி' மூலம் பிறப்புச் சான்றிதழ், குடும்ப அட்டை, ஓட்டுநர் உரிமம் புதுப்பிப்பு ஆகியவை அடங்கிய 500 சேவைகளை ஒவ்வொருவரும் தங்கள் மொபைலிருந்தே பெறலாம்.

## 4 உரிமை அட்டைகள் மூலம் புறக்கணிப்பு இல்லாத சேவை

ஆதார் அட்டையைப் போல் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு உரிமை அட்டை வழங்கப்படும். இதன்மூலம், தகுதிவாய்ந்த குடும்பங்கள் அனைத்தும் தங்கள் சேவைகளுக்கான பலனை எளிமையாகப் பெறமுடியும். இதன்மூலம், நம் அரசு நிர்வாகம் எந்தவித அரசியல் தலையீடுகளுக்கும் இடமில்லாத வகையில் அனைவருக்குமானதாக இருக்கும்.

## 5 தமிழ்நாடு அலுவல் கண்காணிப்புத் தளம்

த.வெ.க. அரசு 'தமிழ்நாடு அலுவல் கண்காணிப்புத் தளம்' (Real Time Governance Dashboard) என்ற இணையத் தகவல் அமைப்பைச் செயல்பாட்டுக்குக் கொண்டுவரும். இதன்மூலம், அரசின் வரவு செலவு கணக்குகள், ஒரு தொகுதி மற்றும் மாவட்டத்திற்கு செலவிடப்படும் திட்டங்களுக்கானத் தொகை, அதுகுறித்து பொதுமக்களுக்கு எழும் புகார்கள்-கேள்விகள், அதற்கு அரசின் பதில்கள் ஆகியவை அனைத்தும் நேரடியாக உடனுக்குடன் பதிவேற்றப்படும்.

---

# மக்கள் அரசு; உண்மை மற்றும் நேர்மையான நிர்வாகம்

B. குடிமக்களே அரசின் வழிகாட்டிகள்

---

## 1 மக்கள் அரங்கம்; மக்கள் வழங்கும் நேரடி புகார்கள் ஒரு முழுநாள் சட்டமன்றத்தில் விவாதிக்கப்படும்

மக்கள் தங்கள் கோரிக்கைகளை அவர்கள் சட்டமன்ற உறுப்பினரைத் தாண்டி நேரடியாக அரசுக்குத் தெரிவிக்கும் வகையில், 'மக்கள் அரங்கம்' என்ற டிஜிட்டல் தளம் உருவாக்கப்படும். இதன் மூலம் மக்கள் நேரடியாக தங்கள் புகார்களைத் தெரிவிக்கலாம்.

- 10,000 பேர் ஒன்றுசேர்ந்து கையொப்பமிட்டுப் பதிவேற்றும் கோரிக்கைகளை அரசு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளும்.
- 5 லட்சம் மக்கள் ஒன்றுசேர்ந்து கையொப்பமிட்டுப் பதிவேற்றும் கோரிக்கைகள், சட்டமன்றத்தில் ஒருநாள் மக்கள் அரங்கத்திற்கான விவாதமாக எடுத்து கவனம் செலுத்தப்படும்.

## 2 வெற்றித் தமிழ்நாடு தளம்

'வெற்றித் தமிழ்நாடு தளம்' மூலம் மக்கள் அனைவரும் அரசுக்கு தங்கள் ஐடியாக்களை சொல்வது, அரசுத் திட்டங்கள் மீதான ஏற்பு அல்லது மறுப்பைத் தெரிவிப்பது, அரசு சேவைகளை அவ்வப்போது மதிப்பிடுவது ஆகியவற்றை மேற்கொள்ள முடியும்.

## 3 மக்கள் தேர்ந்தெடுக்கும் உரிமை; மாவட்ட அளவிலான செலவினத்தில் 10% நிதி மக்கள் விரும்பும் திட்டங்களுக்கு ஒதுக்கப்படும்

அனைத்து மாவட்டங்களிலும் வளர்ச்சித் திட்டங்களுக்கு ஒதுக்கப்படும் 10% நிதியை எந்தெந்த திட்டங்களுக்கு ஒதுக்க வேண்டும் என்பதை மக்கள் முடிவு செய்வார்கள். நிதிநிலை அறிக்கையின்போது 'பங்களிப்பு பட்ஜெட்' என்று இது தனியாக வகைப்படுத்தப்பட்டு திட்டங்கள் மேற்கொள்ளப்படும். ஒவ்வொரு மாவட்டத்திலும் பெண்கள், இளைஞர்கள், பட்டியலின மற்றும் பழங்குடியின மக்கள், துறைசார் வல்லுநர்கள் ஆகியோர் அடங்கிய 10 பேர் கொண்ட குழு உருவாக்கப்படும். மாவட்ட செலவினத்தைக் கண்காணித்து மதிப்பிடுவது, மக்கள் கோரிக்கைகளை அரசுக்கு எடுத்துச் செல்வது இவர்கள் பணியாகும்.

# மக்கள் அரசு; உண்மை மற்றும் நேர்மையான நிர்வாகம்

C. லஞ்சத்திற்கு எதிராக ஜீரோ சகிப்புத்தன்மை

## 1 லஞ்சத்திற்கு எதிராக மக்களுக்கான உதவி எண்

லஞ்சத்தை எதிர்த்து மக்கள் தைரியமாக புகார் அளிக்க முடியாததால் லஞ்சம் தொடர்ந்து தலைவிரித்து ஆடுகிறது. அதற்கு எதிராக த.வெ.க. ஆட்சியில், அனைத்து அரசு அலுவலக மையப் பகுதியிலும் புகார் எண் ஒட்டப்பட்டிருக்கும். லஞ்சம் கேட்கும் அதிகாரிகளின் போக்கைப் பதிவு செய்துகொண்டு, முதல்வர் அலுவலகத்தோடு தொடர்பில் உள்ள அந்த எண்ணுக்கு மக்கள் புகார் அனுப்பினால், புகார் அளிக்கும் மக்களுக்கு உரிய அங்கீகாரம் கொடுப்பது மட்டுமல்லாமல், State Whistleblower Protection Act சட்டத்தின் மூலம் புகார் அளித்தவர் பாதுகாக்கப்படுவார்.

## 2 லோக்ஆயுக்தாவை வலுப்படுத்துதல்

வெளிப்படையான நியமன முறை மற்றும் தவறு செய்யும் அதிகாரிகள், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் மீது வழக்குத் தொடரும் அதிகாரத்தை வழங்குவதன் மூலம் லோக்ஆயுக்தா வலுப்படுத்தப்படும்

## 3 தமிழக லஞ்ச ஒழிப்பு கண்காணிப்பு பிரிவு; லஞ்சம் நடைபெறும் முன் தடுக்கப்படும்

முறைகேடு நடந்தபிறகு அதன்மீது நடவடிக்கை எடுப்பதைத் தாண்டி, த.வெ.க. ஆட்சியில் தொழில்நுட்ப உதவியுடன் செயல்படும் லஞ்ச ஒழிப்பு கண்காணிப்பு பிரிவானது - அரசு கொள்முதல், நலத்திட்ட விநியோகங்கள் பற்றிய பதிவேடுகள், பணப்பரிமாற்றம் ஆகியவற்றைத் தொடர்ந்து கண்காணித்து குற்றம் நடக்கும் முன் முறைகேடுகளைத் தடுக்கும்.

## 4 மணல் கொள்ளை ஒழிப்பு

கனிமவளம் மற்றும் மணல் எடுக்கும் முறை வெளிப்படையான ஏலம் மூலம், நியாயமான முறையில் சட்டப்படி மட்டுமே அனுமதிக்கப்படும்.

# மக்கள் அரசு; உண்மை மற்றும் நேர்மையான நிர்வாகம்

D. சட்டம்-ஒழுங்கு மற்றும் நீதி

## 1 போதைப்பொருள் இல்லாத தமிழ்நாடு

முதலமைச்சரின் நேரடி கண்காணிப்பில் போதைப்பொருள் தடுப்பு படை உருவாக்கப்படும். இதன்மூலம், போர்க்கால அடிப்படையில் செயல்பட்டு போதைப் பொருள் பயன்பாடு அறவே நீக்கப்படும். போதைப் பொருட்கள் விற்பனை செய்பவர்கள் கைது செய்யப்படுவதோடு மட்டுமல்லாமல், குண்டர் சட்டத்தில் அடைக்கப்படுவார்கள். ஒவ்வொரு பள்ளியிலும் போதை எதிர்ப்பு மன்றம் அமைக்கப்படும். த.வெ.க. அரசு போதையிலிருந்து மீள்பவர்களுக்கு உதவ "மறுவாழ்வு நிதி" உருவாக்கும். மேலும், போதையை ஒழிக்கும் கிராமங்களுக்கு அரசின் மதிப்பீடு சான்றிதழோடு ரூ. 10 லட்சம் கட்டமைப்பு திட்டங்களுக்காகச் சிறப்பு நிதி வழங்கப்படும்.

## 2 ஆரோக்கியமான போதையில்லா தமிழ்நாடு

பெண்கள், குடும்பங்கள் மற்றும் இல்லங்களின் நலனைப் பாதுகாப்பதையே முதன்மை நோக்கமாகக் கொண்டு, மது அருந்துவதைக் குறைக்க ஒரு சீரான மற்றும் படிப்படியான அணுகுமுறையை தமிழக வெற்றிக் கழக அரசு பின்பற்றும். மது கிடைப்பதைக் கட்டுப்படுத்தப்பட்ட முறையில் குறைத்தல், வலுவான போதை மீட்புத் திட்டங்கள் மற்றும் மகளிர் குழுக்களின் தலைமையிலான விழிப்புணர்வு மூலம் மதுவினால் ஏற்படும் சமூக மற்றும் நிதிச் சுமைகளைக் குறைக்க த.வெ.க. அரசு பாடுபடும். குறிப்பாக, பள்ளிகள் மற்றும் கோயில்களுக்கு அருகாமையில் அமைந்துள்ள டாஸ்மாக் (TASMAC) கடைகள் உடனடியாக மூடப்படும் அல்லது இடமாற்றம் செய்யப்படுவது உறுதி செய்யப்பட்டு, பாதுகாப்பான சூழல் நிலைநாட்டப்படும்.

## 3 காவல் படுகொலையில் கொல்லப்பட்டவர்களுக்கு நீதி

ஒரு மாநிலத்தில் நடக்கும் ஒவ்வொரு காவல் படுகொலையும் அந்த மாநிலத்தை நிர்வகிக்கும் அரசின் தோல்வியைக் காட்டுகிறது. நமது த.வெ.க. ஆட்சியில் – திமுக ஆட்சியில் நடத்தப்பட்ட காவல் மரணங்களால் பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு நீதியைப் பெற்றுத் தர – சுதந்திர விசாரணை மேற்கொள்ளப்படும். இத்தகைய கொடும் வன்முறையில் ஈடுபட்டவர்கள் அனைவர் மீதும் எந்தவித பாரபட்சமும் இன்றி கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

## 4 நீதித்துறை உட்கட்டமைப்பு மேம்பாடு & வழக்குகள் நிலுவை குறைப்பு

நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கையை குறைப்பதற்கும், பொதுமக்களுக்கு நீதியை எளிதாக அணுகக்கூடியதாக மாற்றுவதற்கும், புதிய உள்ளூர் நீதிமன்றங்கள் நிறுவப்படும்.

## 5 சட்டவிரோத மதுபான விற்பனைக்கு பூஜ்ய சகிப்புத்தன்மை

போலி, சட்டவிரோத மற்றும் கருப்புச் சந்தை மதுபானங்களின் உற்பத்தி மற்றும் விற்பனையை முழுமையாக ஒழிக்க த.வெ.க. அரசு உறுதிபூண்டுள்ளது. இதனை மிகக் கடுமையான குற்றமாகக் கருதி, சம்பந்தப்பட்ட விற்பனையாளர்கள், வழங்குநர்கள் மற்றும் துணைபுரிபவர்கள்மீது கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

# மக்கள் அரசு; உண்மை மற்றும் நேர்மையான நிர்வாகம்

E. ஐந்து சிறப்புத் திட்ட நிதிநிலை அறிக்கை

## 1 இந்தியாவில் முதன்முறையாக ஐந்து சிறப்புத் திட்ட நிதிநிலை அறிக்கை

இந்த நிதிநிலை அறிக்கையின் கீழ் திட்டங்களுக்கு நிதி அறிவிக்கப்பட்டது தொடங்கி பயனாளர்களைச் சென்று சேர்ந்தது, அதனால் சமூகத்தில் ஏற்படும் தாக்கம் ஆகியவை தீவிர கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டு ஆராயப்படும். அவை,

- **சமூகநீதி நிதிநிலை அறிக்கை** – பெண்கள், பட்டியலின மற்றும் பழங்குடியின மக்கள் மற்றும் அனைத்து தரப்பு விளிம்புநிலை மக்களின் சமத்துவ முன்னேற்றத்திற்காக ஒதுக்கப்படும் இந்த நிதி, எந்தவித மடைமாற்றமும் இல்லாமல் முழுவதுமாக செலவு செய்யப்படும்.

- **சமமான வட்டார வளர்ச்சி நிதிநிலை அறிக்கை** – தமிழ்நாடு தற்போது 3:1 என்ற அளவில் வளர்ந்த மற்றும் பின்தங்கிய மாவட்டங்களுக்கு இடையே வருவாய் வித்தியாசத்தைக் கொண்டிருக்கிறது. இந்த நிதிநிலை அறிக்கையில் மிகவும் பின்தங்கிய 12 மாவட்டங்கள் உட்பட அனைத்து பின்தங்கிய மாவட்டங்களின் பாரபட்சமற்ற வளர்ச்சிக்கான திட்டங்கள் வகுக்கப்படும்.
- **தமிழ்நாடு கலாசார மற்றும் பண்பாட்டு நிதிநிலை அறிக்கை** – அகழ்வாராய்வு பகுதிகளை மீட்டெடுத்தல் மற்றும் பாதுகாத்தல், தற்போது பணி நடந்துகொண்டிருக்கும் கீழடி அகழ்வாராய்வு மற்றும் அடுத்தகட்ட பணிகளுக்கான நிதி ஒதுக்கீடு மற்றும் தமிழ் கலாசாரத்தை உலக அரங்கிற்குக் கொண்டுசெல்லுதல் ஆகியவற்றுக்காக இந்த தமிழ்நாடு கலாசார மற்றும் பண்பாட்டு நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்படும்.
- **கல்வி மற்றும் மருத்துவம் சமவாய்ப்பு நிதிநிலை அறிக்கை** – நகரங்கள் மற்றும் கிராமங்களில் உள்ள கல்வி நிலையங்கள் மற்றும் மருத்துவமனைகளுக்கு இடையேயான தர வித்தியாசத்தை போக்குதல், ஆசிரியர், மருத்துவர் மற்றும் செவிலியர் காலி பணியிடங்களை உடனடியாக நிரப்புதல், அனைத்து குழந்தைகளுக்கும் உலகத்தரமான கல்வி மற்றும் அனைத்து பொதுமக்களுக்கும் உலகத்தரமான மருத்துவம் ஆகியவற்றுக்காக கல்வி மற்றும் மருத்துவம் சமவாய்ப்பு நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்படும்.
- **சூழலியல் நிதிநிலை அறிக்கை** – கடல்சார் வளங்கள் பாதுகாப்பு, வறண்ட மாவட்டங்களை செழுமைப்படுத்துவது, நகரங்களில் வெள்ளத் தடுப்பு மேலாண்மை, சூழலியலுக்கு ஏற்ப புதிய வேளாண் முறை, காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வது ஆகியவற்றுக்காக சூழலியல் நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்படும்.

## மக்கள் அரசு; உண்மை மற்றும் நேர்மையான நிர்வாகம்

F. பொருளாதார இறையாண்மை; வருவாயை பெருக்குவோம், இழப்பை தடுப்போம், புதிய வளங்களை கட்டமைப்போம்.

### 1 தமிழ்நாட்டை பொருளாதார இறையாண்மை பெற்ற மாநிலமாக மாற்றுவோம்.

2026-27 ஆம் நிதியாண்டில் தமிழ்நாட்டின் கடன் ரூ. 10.71 லட்சம் கோடியைத் தாண்டுகிறது. இதுவரை தமிழ்நாட்டை மொத்தமாக ஆண்ட அரசுகள் வாங்கிய கடனைவிட, கடந்த ஐந்தாண்டு ஒரே ஆட்சிக்காலத்தில் திமுக அரசு அதிக கடன் வாங்கியிருக்கிறது. இந்த அரசு வாங்கிய கடனுக்கு வட்டி கட்ட செலவு செய்துகொண்டிருக்கும் ஒவ்வொரு ரூபாயும் கல்வி, மருத்துவம், கிராமத்திற்கான சாலைகள் ஆகியவற்றுக்கு செலவு செய்ய வேண்டிய நிதியிலிருந்து கையாடல் செய்யப்படுகிறது.

தவெக அரசின் செயல்பாடு – மக்களுக்கு செலவு செய்யவேண்டிய பணத்தை வீணடிப்பபதாக இருக்காது. தமிழக மக்கள் மீது புதிய வரிகளை சுமத்தாமல், இழப்புகளைத் தடுத்து, வருவாயை பெருக்கி, புதிய வழியில் பொருளாதார கட்டமைப்புகளை உருவாக்குவதாக இருக்கும்.

ஊழலை ஒழிப்பது, வெளிநாட்டு வாழ் தமிழர்களை ஒன்றுதிரட்டி புதிய முதலீடுகளை ஈர்ப்பது, சிறுகுறு தொழில்களை புதுப்பிப்பது, தொழில்நுட்பம், சூழலியல், புதிய அறிவு செயல்திறன் ஆகிய நவீன முறைகளில் வருவாய் வளர்ச்சியை த.வெ.க. அரசு மேற்கொள்ளும்.

## 2 தமிழ்நாடு வியூக முதலீட்டு ஆணையம் (TNSIA)

வரி மற்றும் மானியங்களை மட்டுமே நம்பியிருக்கும் முறையிலிருந்து விலகி, செல்வத்தை உருவாக்கும் ஒரு புதிய பொருளாதார மாதிரியை நோக்கி தமிழகத்தை தமிழக வெற்றிக் கழக அரசு கொண்டு செல்லும். இதற்கு முந்தைய அரசுகள் வரி விதிப்பு மற்றும் சலுகைகளை மட்டுமே நம்பியிருந்த நிலையில், தவெக அரசு ரூ.50,000 கோடி மதிப்பீட்டில் ஒரு திட்ட முதலீட்டு ஆணையத்தை (Strategic Investment Authority) நிறுவும்.

இதன் மூலம் செமிகண்டக்டர்கள் (Semiconductors), மின்சார வாகனங்கள் (EVs), விண்வெளித் துறை (Aerospace), செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் மேம்பட்ட உற்பத்தி போன்ற அதிவேக வளர்ச்சி கொண்ட துறைகளில் அரசு நேரடியாகப் பங்குதாரராக முதலீடு செய்யும். முதலீடுகளை வெறும் ஒருங்கிணைப்பு செய்வதோடு நின்றுவிடாமல், தமிழக அரசு த.வெ.க. ஆட்சியில் தொழில்துறையினருடன் இணைந்து முதலீடு செய்து, புதிய மதிப்புகளை உருவாக்கி, அதன் உரிமையைப் பகிர்ந்து கொள்ளும். இது லட்சக்கணக்கான உயர்தர வேலைவாய்ப்புகளை உருவாக்குவதுடன், மாநிலத்திற்கு வரி அல்லாத புதிய வருவாய் ஆதாரங்களையும் ஈட்டித் தரும்.

## 3 மாநில நிதி நிலை மற்றும் கடன் மேலாண்மை குறித்த வெள்ளை அறிக்கை

தமிழகத்தின் நிதி நிலைமை, கடன் அளவுகள், கடன் வாங்கும் முறைகள், வருவாய் பயன்பாடு மற்றும் தவறவிடப்பட்ட பொருளாதார வாய்ப்புகள் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு விரிவான வெள்ளை அறிக்கையை (White Paper) தமிழக வெற்றிக் கழக அரசு வெளியிடும். இது ஒரு வெளிப்படையான, பொறுப்பான மற்றும் வளர்ச்சியை நோக்கமாகக் கொண்ட நிதி உத்திகளுக்கான அடித்தளமாக அமையும்.

## 4 பொதுத்துறை நிறுவனங்கள் (PSUs) மீட்புத் திட்டம்

பொதுத்துறை நிறுவனங்களின் செயல்பாட்டுத் திறனை மேம்படுத்தவும், லாபத்தை அதிகரிக்கவும் மற்றும் நிதிச் சுமையைக் குறைக்கவும் அனைத்து பொதுத்துறை நிறுவனங்களிலும் தமிழக வெற்றிக் கழக அரசு கட்டமைப்பு சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்தும். மேலும், நிர்வாகத்தை வலுப்படுத்த அந்தந்த துறை சார்ந்த நிபுணர்களை நியமிப்பதோடு, தொழில்முறை மேலாண்மை முறைகளையும் (Professional Management Practices) அறிமுகப்படுத்தும்.

# தமிழ்நாட்டின் மதிப்புமிகு
# நம் வாக்காளர்களுக்கு ஓர் வேண்டுகோள்:

**ஏப்ரல் 23** அன்று நம் தமிழகத்தின் தலையெழுத்தை, நம் தலைமுறைகளின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கப் போகும் ஒவ்வொரு சகோதர சகோதரிக்கும் வணக்கம்.

## என் அன்பு சகோதர சகோதரிகளே உங்கள் விஜய்யின் வேண்டுகோள்,

வரலாறு நெடுநாள் நினைவுகூரத்தக்க வகையிலான ஒரு திருப்புமுனைப் புள்ளியில் தமிழ்நாடு நிற்கிறது. தற்போதைய அரசின் ஐந்தாண்டு ஆட்சியில் ஒரே ஒரு காரியம்தான் தொடர்ந்து நடந்து வருகிறது: தரகு, வசூல் மற்றும் ஊழல் / கமிஷன்-கலெக்ஷன்-கரப்ஷன்.

அரசு வேலைகள் விற்கப்படுகின்றன. தரகுக்காக ஒப்பந்தங்கள் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு கட்டத்திலும் ஒருபங்கு கமிஷனாக எடுக்கப்படாமல், பொதுப் பணம் ஏழைகளைச் சென்றடைவதில்லை. நமது இளைஞர்கள், வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பல ஆண்டுகளாகக் காத்திருக்கின்றனர். தங்களுக்கு உரிமையான வேலைகளையே லஞ்சம் கொடுத்துப் பெற வேண்டிய நிலை உள்ளது.

நமது விவசாயிகள், மீனவர்கள் மற்றும் நெசவாளர்கள் என உழைக்கும் வர்க்கத்தினர் அனைவருமே பெரும் துயரத்தில் உள்ளனர். அவர்களின் வேதனை ஆளும் கட்சியினரின் மேடைப் பேச்சுகளில் மட்டுமே ஒலிக்கிறது. ஆனால், நிதிநிலை அறிக்கைகளில் புறக்கணிக்கப்படுகிறது. பெண்கள் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளனர். போதைப்பொருள் அச்சுறுத்தல் ஒவ்வொரு நகரத்திலும் கிராமத்திலும் குடும்பங்களை அழித்து வருகிறது. சட்டமும் ஒழுங்கும் சீர்குலைந்துள்ளது.

உயர்ந்து வரும் விலைவாசி அன்றாட வாழ்க்கையை ஒரு போராட்டமாக மாற்றியுள்ளது. முதலீடுகள் தமிழ்நாட்டை விட்டு வெளியேறுகின்றன. தொழிற்சாலைகள் மற்ற மாநிலங்களுக்குச் செல்கின்றன. குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (MSMEs) மூடப்படுகின்றன. வேலைவாய்ப்புகள் காணாமல் போகின்றன.

இவை அனைத்தின் விளைவாக, தமிழ்நாட்டின் கடன் 2026-27-ஆம் ஆண்டில் ரூ. 10.71 லட்சம் கோடியைத் தாண்டியுள்ளது. இது, முந்தைய அனைத்து அரசுகளும் சேர்ந்து வாங்கிய கடனை விட, ஐந்து ஆண்டுகளில் வாங்கப்பட்ட கடனாகும். அதாவது, கடந்த ஐந்தாண்டுகளில் மட்டுமே ஏறத்தாழ 6 லட்சம் கோடிக்கும் குறையாமல் கடன் வாங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு ஒரு சிறந்த மாநிலம், ஆனால் அது தவறான ஆளும் கட்சியால் கைவிடப்படுகிறது. அதை மாற்றவே நம் தமிழக வெற்றிக் கழகம் வந்து உள்ளது.

## நாம் உருவாக்கும் தமிழ்நாடு வெற்றித் தமிழ்நாடு.

வெற்றித் தமிழ்நாட்டைக் கட்டியெழுப்பவே நாம் இங்கே இருக்கிறோம்.

நமது வெற்றித் தமிழ்நாடு என்பது... இளைஞர் ஒவ்வொருவருக்கும் கண்ணியம், வேலைவாய்ப்பு மற்றும் தகுதியின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட எதிர்காலம் கிடைக்கும் மாநிலம்.

நமது வெற்றித் தமிழ்நாடு என்பது... பெண் ஒவ்வொருவரும் பாதுகாப்பாகவும், பொருளாதார ரீதியாக சுதந்திரமாகவும், மரியாதையுடனும் இருக்கும் மாநிலம்.

நமது வெற்றித் தமிழ்நாடு என்பது... குழந்தை ஒவ்வொன்றும் தரமான கல்வியைப் பெறும் இடம். குடிமகன் ஒவ்வொருவரும் தரமான சுகாதார சேவைகளைப் பெறும் இடம்.

நமது வெற்றித் தமிழ்நாடு என்பது... வயலில் உள்ள விவசாயி, கடற்கரையில் உள்ள மீனவர், பட்டறையில் உள்ள நெசவாளர், தொழிற்சாலையில் உள்ள தொழிலாளி மற்றும் கடைசி கிராமத்தில் உள்ள கடைசி குடும்பம் வரை வளர்ச்சி சென்றடையும் இடம்.

நமது வெற்றித் தமிழ்நாடு என்பது... போதைப்பொருள் இல்லாத, ஊழல் இல்லாத மற்றும் வறுமை இல்லாத இடம்.

நமது வெற்றித் தமிழ்நாடு என்பது... அனைவரும் சமமாக இருக்கும் இடம்.

நமது வெற்றித் தமிழ்நாடு என்பது... நீங்கள் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை நினைவுகூரப்படும் வெறும் வாக்காளர் மட்டுமல்ல. நீங்கள் நமது மாநிலத்தின் முன்னேற்றத்தில் முடிவெடுப்பவராகவும், பங்களிப்பவராகவும் இருப்பீர்கள்.

## இதுவே இத்தகைய லட்சிய மாற்றங்களுக்கான அந்தத் தருணம்.

வரவிருக்கும் ஆண்டுகள் சாதாரணமான ஆண்டுகளாக இருக்காது. அவை தமிழ்நாட்டின் பொற்காலத்தின் தொடக்கமாக இருக்கும். பெருமை மற்றும் முன்னேற்றத்தின் பத்தாண்டு. மக்கள் சக்தியின் பத்தாண்டு. தமிழ்நாடு வெறும் வளர்ச்சியடைவது மட்டுமல்லாமல், வழிநடத்தும் பத்தாண்டு.

**தமிழக வரலாற்றில் முதன்முறையாக, திருவள்ளுவரின் ஞானம், பெரியாரின் சமூக நீதி, அம்பேத்கரின் துணிவு, காமராஜரின் நேர்மை, அஞ்சலை அம்மாளின் கருணை மற்றும் ராணி வேலு நாச்சியாரின் அச்சமின்மை ஆகியவற்றால் ஏற்கனவே சோதிக்கப்பட்ட ஒரு தார்மீகக் கட்டமைப்புடன் ஓர் அரசு ஆட்சிக்கு வரவுள்ளது.**

இது வெறும் நம் தொலைநோக்குப் பார்வை மட்டுமன்று. இது நம் அழைப்பு. அடுத்த தலைமுறை திரும்பிப் பார்த்து, 'தமிழ்நாடு என்றென்றைக்குமானதாக தமிழ்நாட்டு மக்கள் எல்லோருக்குமானதாக வெற்றிகரமானதாக உருமாறிய தருணம் இதுதான்' என்று சொல்லும் அளவுக்கு சக்திவாய்ந்த ஒன்றை உருவாக்குவதற்கான அழைப்பு.

## உங்கள் முன் உள்ள தேர்வு

என் அன்பான தமிழ்நாட்டு மக்களே, ஏப்ரல் 23 அன்று, நீங்கள் ஒரு அரசாங்கத்தை மட்டும் தேர்ந்தெடுக்கப் போவதில்லை. அடுத்த பத்தாண்டுகளின் திசையையே நீங்கள் தேர்ந்தெடுக்கிறீர்கள்.

ஐம்பது ஆண்டுகளாக மாறி மாறி தமிழ்நாட்டை ஆண்ட இரண்டு கட்சிகளுக்கும் வாய்ப்புகள் கிடைத்தன. ஆனாலும், தமிழ்நாடு வெற்றியை ருசிப்பதில் ஏனோ சில தடைகள் இருந்துகொண்டே இருக்கின்றன. எனவே, அந்நிலை மாற வேண்டும்.

தமிழ்நாடு இன்னும் பெரிய ஒன்றைச் சாதிக்கும் திறன் கொண்டது என்று நீங்கள் நம்ப வேண்டும். இந்த மண்ணின் மக்கள் தூய்மையான, திறமையான மற்றும் ஒவ்வொரு நாளும் அவர்களுக்கு உண்மையாகப் பதிலளிக்கக்கூடிய ஒரு ஆட்சிக்குத் தகுதியானவர்கள் என்று நீங்கள் நம்ப வேண்டும். நம் தேர்வு தெளிவாக உள்ளது. த.வெ.க. அதே வரிசையில் உள்ள மற்றொரு தேர்வன்று. அடிப்படையில் வேறுபட்ட அரசியலை வழங்குகிற இயக்கம் என்று முழுமையாக நம்ப வேண்டும்.

நாங்கள் ஒரு குடும்ப வீட்டில் பிறக்கவில்லை அல்லது ஒரு வம்சத்திலிருந்து பதவிகளை மரபுரிமையாகப் பெறவில்லை. நாங்கள் தமிழக மக்களின் எண்ணங்களை நிறைவேற்றப் பிறந்தோம்; **பெரியார், அம்பேத்கர், காமராஜர், வேலு நாச்சியார்** மற்றும் **அஞ்சலை அம்மாள்** ஆகியோரின் அடித்தளங்களில் கட்டப்பட்டோம். முதல் நாளிலிருந்தே ஆட்சி செய்ய நாங்கள் தயாராக இருக்கிறோம்!

# ஏப்ரல் 23

அன்று, **விசிலு**-க்கு நேராக இருக்கும் பொத்தானை அழுத்தவும்.

| | | | | |
|---|---|---|---|---|
| XX | தமிழக வெற்றிக் கழகம் | | | |

த.வெ.க. தயாராக உள்ளது. தமிழகம் தயாராக உள்ளது.
எதிர்காலம் தயாராக உள்ளது.

# வெற்றி நிச்சயம்!



# தமிழக வெற்றிக் கழகம்

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்!